
கல்கி

KALKI 21-11-1971 45 காசு





விரோதிக்ருது, கார்த்திகை 5 - நவம்பர் 21, 1971

கல்கி

பொருளடக்கம்



சந்தா விவரம்:	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50

போர்ஹென்ஸ் பற்பசையால் தவறாது பிரஷ் கொண்டு பல் துலக்கினால் ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்

சிறியோர், பெரியோர், யாவரிடமிருந்தும் தாமாகவே தேடிவந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கும் போர்ஹென்ஸ் பற்பசையின் அற்புதமான விளைவுகளைப் பாராட்டுகின்றன. அந்தக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.

"போர்ஹென்ஸ் பற்பசைக்கும், அதை நான் தவறாமல் உபயோகிக்கச் சொன்ன டாக்டருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்...இதன் விளைவு, எனது 76வது வயதிலும், ஒரே மாதிரியாகப் படிந்துள்ள பளபளப்பான என் பற்கள் ஆரோக்கியமான ஈறுகளில் வலுவாக வேரூன்றியுள்ளன...".

—விபூதி பூஷன் போஸ், கல்கத்தா

"உலகப் புகழ் பெற்ற உங்கள் பற்பசையை என் சிறு பிராயம் முதல் தவறாது உபயோகித்து வருகிறேன். இன்று என்னுடைய ஒவ்வொரு பல்லும் வலுவாக இருக்கிறது ... நான் போர்ஹென்ஸை எல்லா வகையிலும் சிறந்த பற்பசையாகக் கருதுகிறேன். ஏனெனில் அது பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை. அது ஒன்றே போதுமே...!"

—எஸ்.என். சட்டர்ஜி, கோயம்புத்தூர்

பற்களைத் தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் பற்பசையையும், போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் ப்ரஷ்ஷையும் உபயோகியுங்கள் ... தவிர, உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.

இந்தப் புத்தகத்தைப்பெற, (தபால் செலவுக்காக) 20 பைசா தபால் தலையை "மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1" என்னும் முகவரிக்கு அனுப்புக. புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது.

பெயர் ______ வயது ______ K-6

முகவரி ______

*எந்த மொழியில் புத்தகம் வேண்டுமோ, அதன் கீழ் தயவு செய்து கோடிடவும்: ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

போர்ஹென்ஸ் பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

90F-182 TAM

கல்கி

மலர் 31
இதழ் 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

இன்னொரு ஐ. நா. ஏற்படுத்துக!

ஐ. நா. சபையிலிருந்து தைவானை அகற்றிவிடக் கூடாது என அமெரிக்கா செய்த முயற்சி தோற்றுப்போனவுடன் உலக விவகாரத்தில் ஐ. நா. வின் ஸ்தானம் குறித்துப் புதிய மதிப்பீடு செய்ய அவசியம் ஏற்பட்டது. அதன் பின்பு சமீபத்தில் அமெரிக்கா நடத்திய ராட்சத அணுகுண்டு சோதனையானது ஐ. நா.வைப் பற்றிய சிந்தனையை வேறு விதத்தில் திருப்பி விட்டிருக்கிறது.

தைவான் விஷயத்தைவிட, இந்த அணுகுண்டுச் சோதனை அகில உலகுக்கும் முக்கியத்வம் வாய்ந்ததாகும். இதுவரையில் அமெரிக்காவுக்கும் ஏனைய வல்லரசுகளுக்கும் மற்ற நாடுகளைப் பணிந்து போகச் செய்கிற சக்தி இருந்தது. அந்தச் சக்தியைக் கொண்டு கடந்த முப்பதாண்டுகளாக உலக நாடுகளை யெல்லாம் செயலற்றவையாக்கி, தன்னிச்சையாக அவை அணு குண்டுகளை வெடித்து வந்திருக்கின்றன. சுத்தமான சூழலில் வாழ்வதற்கு எல்லா நாட்டு மக்களும் பெற்றுள்ள உரிமையைத் தகர்த்து உலகச் சூழலை நச்சு மயமாக்கி வந்திருக்கின்றன. தங்களது மகத்தான சக்தியால் 'ஹிப்னடிஸம்' செய்து உலக நாடுகளை ஆட்சேபக் குரல் எழுப்பாமல் பணிந்து கிடக்கச் செய்து வந்துள்ளன. 'தர்ம பலம் உலகை ஆளவில்லை; பௌதிக பலமே ஆள்கிறது. ஈசுவரன் ஆளவில்லை; சைத்தானே ஆள்கிறான்' என்று பலவீன மடைந்த நாடுகள் முடிவு கட்டி, வல்லரசுகளின் வசமே உலகை விட்டுவிட்டன. அணு ஆயுதம் பெற்றிராத நாடுகளின் பாதுகாப்பையும், ஆரோக்கியத்தையும் கருதாமல் அணு வல்லரசுகள் சிறிதுகூட நீதி உணர்ச்சியின்றிச் சோதனைகளை நடத்தி வந்திருக்கின்றன.

இன்றைய நிலையிலும் இதே போக்கு நீடிக்க அநுமதிக்கலாகாது. அணு ஆயுதம் பெற்றிராத நாடுகள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் மகத்தான பிரச்னையில் ஈடுபடத் தருணம் வந்துவிட்டது. இன்று ஐ. நா.வை நிர்வகிக்கும் குழு அணு வல்லரசுகளேயாகும். இப்படிப்பட்ட ஐ. நா.வை மற்ற நாடுகள் பகிஷ்கரிக்க வேண்டும். உலகில் அணு ஆயுதம் வைத்திராத நாடுகள் யாவும் கூடித் தங்களுக்கென வேறோர் ஐ. நா. சபையை அமைத்துக் கொள்ள வேண்டும். உண்மையான உலக சர்க்காரை உருவாக்குவதையும், அணு ஆயுதமற்ற நாடுகளின் உரிமைகளைக் காப்பதையும் இந்தப் புது ஐ. நா. சபை தனது இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.

உலகைப் பௌதிக பலம் கொண்டு ஆளாமல், தர்ம பலத்தினால் ஆள வேண்டுமாயின், கடவுளையும் நீதியையும் நம்பி இத்தகைய ஒரு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். தீய சக்திகள் தங்களையே தற்கொலை செய்துகொள்ள எண்ணுமாயின் அவற்றின் வழியில் நாம் நிற்பதற்கில்லை. ஆனால் இந்தத் தீய சக்திகள் நமக்குத் தீங்கு விளைவிக்காதவாறு அவற்றை நம்மிடமிருந்து ஒதுக்க வேண்டும். அணு வல்லரசுகளை உலகப் பிரஜைகள் என்று சொல்லவே தகுதியில்லை; அவை மனித குலத்தின் விரோதிகள். அந்தத் தீய சக்திகள் தங்களுக்குள் எவ்வித ஐக்கியமும் இன்றிப் பிரிந்து கிடக்கின்றன இன்றைய ஐ. நா.வில். இப்படிப்பட்ட சபையால் உலகுக்கு எந்த நன்மையும் விளையாது. அதைத் தாட்சிண்யமின்றி ஒதுக்கிவிட வேண்டும். தீமையை நன்மை நிச்சயம் வெற்றிகொள்ளும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, மேற்கூறியுள்ளதையே இன்று பிரதான பிரச்னையாக்க வேண்டும். இதற்கு, அணு ஆயுதம் பெற்றிராத நாடுகள் அணு வல்லரசுகளையே பிரதட்சிணம் பண்ணுவதையும் அவற்றைச் சார்ந்திருக்கும் போக்கையும் கைவிடுவதாக உறுதிகொள்ள வேண்டும்.

அதருமச் சக்தியின் மீதன்றி, தருமத்தின் அடிப்படையில் ஐக்கியமாகிற நாடுகளைக் கொண்டு ஓர் உண்மையான ஐக்கிய நாட்டுச் சபையை உருவாக்க உழைப்போமாக! மனித குலத்துக்கும் தீய சக்திகளுக்கும் நடக்க வேண்டிய போராட்டத்தை இனியும் ஒத்திப் போடக் கூடாது!

(அடிப்படை: ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

பிரதமரின் வெளிநாட்டுச் "சாதனை"

ஸ்ரீமதி இந்திரா காந்தி உலக சஞ்சாரம் செய்ததில் விசேஷப் பலன் ஏதும் விளையவில்லை என்று ஒப்புக்கொள்வதே நேர்மையாகும். சக்தி பொருந்திய எந்த வல்லரசையும் கொண்டு யாஹ்யா கானைக் கட்டுப்படுத்துவதற்குப் பாரதப் பிரதமரால் இயலவில்லை.

ஆகவே இதுவரை அவர் வெளி விவகாரங்களில் செய்துள்ள ஒரே ஒரு நல்ல அம்சத்தைப் பாழாக்கிக் கொள்ளாமல் உறுதிப்படுத்துவது தான் இப்போது செய்ய வேண்டியது. அந்த ஒரு நல்ல அம்சம் ருஷியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையேயாகும். மற்ற வல்லரசுகள் எந்த அளவுக்கு நமக்கு விசேஷமாக உதவ முன்வரவில்லை என்று காண்கிறோமோ, அந்த அளவுக்கு இந்திய — ருஷிய உடன்படிக்கையின் மதிப்பு அதிகரிக்கிறது. நாம் எதிர்முகம் கொடுத்தாக வேண்டிய பிரச்னைகளும் அபாயங்களும் ஏராளமாக இருக்கும்போது அவற்றிடையே நாம் வெற்றிகரமாகச் சாதித்துள்ள ஒரே அம்சமாக இருப்பது, நம்முடன் ஒத்துழைத்து உதவி தருவதாக ருஷியா தந்துள்ள வாக்குப் பிரமாணமேயாகும். எனவே இப்போது எந்த அரசியல் கட்சியும் இந்திய — ருஷிய உடன்படிக்கையின் மதிப்பைக் குறைத்தோ, அதைப் பற்றிச் சந்தேகம் எழுப்பியோ பேசாமலிருக்க வேண்டியது அவசியம்.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களும் தளவாடங்களும் அனுப்புவதை அமெரிக்கா நிறுத்தியிருப்பது நமது பிரதமரின் வெற்றி எனத் தோன்றலாம். ஆனால் உண்மையில் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி பாகிஸ்தானுக்குத் தேவையான ஆயுத சப்ளையைப் பூரணமாக அனுப்பி வைத்த பின்தான், இனி புதிய சப்ளை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் கூட, பாகிஸ்தானின் சம்மதம் பெற்ற பின்பே சப்ளை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதிலிருந்தே ஆயுத சப்ளைகளை நிறுத்திவிட்டதாகச் சொல்வது எவ்வளவு அர்த்தமற்றது எனக் காணலாம். போதாததற்கு, இனியும்கூடத் தளவாடம் அனுப்பாவிடினும், 'ஸ்பேர் — பார்ட்'கள் அனுப்பப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். இதிலிருந்து யாஹ்யா கானுக்கு நேச நாடாக இருந்துவரவே அமெரிக்கா தீர்மானித்துவிட்டது எனக் கொள்ளலாம். இந்தியா—பாகிஸ்தானிடையே யுத்த ரீதியில் அன்றி, அரசியல் ரீதியாக அமைதியான முறையில் தீர்வு ஏற்படுவதிலேயே அமெரிக்கா ஆர்வம் காட்டுவதாகச் சொல்வது வெறும் புரளிப் பேச்சு.

அமெரிக்கா தனது சொந்த விவகாரங்களுக்கு அநுகூலமாக வெளி உறவுகளை நிர்ணயித்துக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறது. எனவே அதை அதிகம் குறைகூறிப் பயனில்லை. நம் பாரத சர்க்காரைத்தான் குறை கூற வேண்டும். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவி செய்து இந்தியாவுடன் போர் புரிவதற்கு இடம் உண்டாக்கினால் இரு நாடுகளுக்குமே அது விபரீதமாக முடியும் என்று அமெரிக்காவுக்கு அழுத்தமாக உணர்த்தி வைக்கப் பாரத சர்க்காரால் இயலவில்லை. பாகிஸ்தான் தனது போக்கை மாற்றிக் கொள்ளுமாறு அமெரிக்கா வலியுறுத்த முடியும். அவ்விதம் செய்யுமாறு அமெரிக்காவை வலியுறுத்தப் பாரத சர்க்கார் தவறி விட்டது.

உள்நாட்டுச் "சாதனை"


உள் விவகாரத்தைப் பார்ப்போம். சர்க்கார் செலவு கட்டுக்கடங்காமல் பெருகி வருகிறது. இதற்காக வரிச் சுமை மிகவும் கடுமையாக்கப்பட்டிருக்கிறது; இதன் விளைவு: சகல மக்களும் உபயோகிக்கும் சகல பண்டங்களின் விலைகளும் ஏகத்தாறுக உயர்ந்து வருகின்றன. இதை ஏழை மக்கள் தாங்க முடியாத பரிதாப நிலையைப் பார்க்கிறோம். நிதி மந்திரிகள் வாசாலகமாக எத்தனைதான் காரணம் காட்டினாலும் சரி, பகவானுக்குப் பொதுவாகச் சொல்கிற உண்மை நிலை யாதெனில், மக்களால் சகிக்க முடியாதபடி விலைவாசிகள் உயர்ந்தபடியே உள்ளன. வரியும் போதாமல் நோட்டுக்களை அச்சிட்டு வழங்கி, பணவீக்கத்தை உண்டாக்கி, அதனாலும் விலைவாசிகளை உயர்த்தி வருகிறார்கள். சர்க்காரின் செலவைக் குறைக்காமல், இவ்விதம் மக்களுக்கு இழைத்து வரும் தீமை இந்திரா சர்க்கார் உள்நாட்டிலே செய்து வரும் மகத்தான குற்றமாகும். 'குற்றம்' என்று சொல்லா விடினும், 'தோல்வி' என்றுவது ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பல விதங்களில் வோட்டுப் பிடிப்பதற்காகவே சர்க்கார் செலவு அதிகமாக்கப்படுகிறது. மக்களைக் கவர்ந்து வோட்டு வாங்க வேண்டும் என்ற பரிவில் செய்கிற காரியம் அந்த மக்களையே தாக்கும் வரிகளாகவும், விலை உயர்வாகவும் முடிவது விந்தை!

நமது தேசத்தின் சகல விவகாரங்களையும் இப்போதுள்ள சர்க்காரின் வசமிருந்து மாற்றிக் கட்சிப் பற்றற்ற ஓர் அரசாங்கத்திடம் ஒப்புவித்தால்தான் க்ஷேமத்துக்கு வழியுண்டு. எல்லா விவகாரங்களையும் இல்லாவிட்டாலும் நிதி விவகாரங்களை மட்டுமாவது, அநுபவமும் தைரியமும் விவேகமும் கொண்ட, கட்சிப் பற்றற்ற ஒரு குழுவிடம் ஒப்புவித்து, அதற்கே முடிவெடுக்கவும், முடிவுகளை அமல் செய்யவும் பூரண உரிமை தர வேண்டியது அவசியமாகிவிட்டது.

ஸ்ரீமதி இந்திரா காந்தி பாமர மக்களைக் கவரலாம்; அவரது சாதுரியத்தையும் கண்டிப்பையும் வெளி மனிதர்கள் பாராட்டலாம்; ஆயினும் நாட்டின் நிதி நிலைமையை மேற்சொன்னபடி தகுதி படைத்தவர்களிடம் அவர் ஒப்புவிக்காவிடில், இறுதியில் அவர் தேசத்துக்குத் தாம் உரிய தொண்டு செய்யத் தவறிவிட்டதாகவே உணருவார்.

சமய உலகின் பேரிழப்பு

சைவ நெறியின் கருவூலமான தருமபுர ஆதீனத்தின் அதிபர்களான மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் திருவடிப் பேறு எய்திவிட்டார்கள். 'காசியில் இறக்க முக்தி' என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க மகா சந்நிதானம் அவர்கள் புனித காசியில் யாக்கை நீத்திருக்கிறார்கள்.



அவர்களின் அன்பும் பண்பும் பக்தியும் படிப்பும் நாடறிந்தவை. ஆஸ்திகத்துக்காகவும், தர்மப் பணிகளுக்காகவும் அள்ளி அள்ளி வழங்கினார்கள். ஆதீனத்தின் மேற்பார்வையிலுள்ள ஆலயங்களை அருமையாக நிர்வகித்தார்கள். 'தருமையாதீனத்துக் கோயில்களில் வழங்கப்படும் விபூதியில்கூட நெற்றியை நெருடும் ஒரு பருமனான துகள் இராது' என்று ஆஸ்திகர்கள் சொல்வது வழக்கம். தருமையில் துர்காபரமேசுவரிக்கு அற்புத ஆலயம் அமைத்தார்கள். கயிலங்கிரி வரையில் க்ஷேத்திராடனம் புரிந்து ஆங்காங்கு தர்மப் பணிகளும் சைவமும் தழைக்கச் செய்தார்கள். ஜன்ம தினத்தை வாரணாசியில் கொண்டாடுவதற்காகச் சென்றவர்கள், அங்கேயே ஜன்மச் சுழலிலிருந்து விடுதலை கொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் மறைவு நமது சமயத் துறைக்கு மகத்தான நஷ்டமாகும்.

வணங்கி வரவேற்கிறோம்

'அரசன் மறைந்தான், வாழ்க மன்னன்' என்று கூறுவது பிரிட்டிஷ் மரபு. தருமைக்குப் புது ஆதீனகர்த்தர் வந்துவிட்டார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் என்ற பெயருடன் இருபத்தியாறுவது மகா சந்நிதானமாகிறார்கள்.



தமிழகத்து ஆஸ்திகர்கள் யாவரும் புதிய மடாதிபதிகளை நன்கு அறிவர். சென்னையிலுள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத் தலைவராக அரும்பணி ஆற்றியிருப்பவர் அவர். மெத்தக் கற்றவர். நாவன்மை பெற்றவர். பக்தி நிறைந்தவர். பணியில் சிறந்தவர். அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றிருப்பவர். இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் பெரும்பாலும் மூலஸ்தான மூர்த்தி போலவே இருந்தார்; புதிய மகாசந்நிதானம்தான் உத்ஸவ மூர்த்தி போல் தருமப் பிரசாரத்தில் வெளியுலகம் காண அதிகம் சஞ்சரித்துப் பணிசெய்து வந்தார். இவர்கள் தருமையின் ஆதீனத் தலைவராவது குறித்து மகிழாதார் இல்லை. தமிழகத்தில் ஆலய மரபுகள் குறித்துப் பெரிய சர்ச்சை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இவர்கள் பெரிய பொறுப்புக்கு வருகிறார்கள். தமது திறந்த உள்ளத்தையும், இதமாக நலத்தை எடுத்துச் சொல்லும் திறத்தையும் காட்டிப் பிரச்னையைத் தீர்க்க அவர்கள் உதவுவார்கள் என்று நம்புகிறோம். இவர்களது அருளாட்சிக் காலத்தில் 'வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க'ப் பல அரிய திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று திண்ணமாக எதிர்பார்க்கலாம். புதுத் தலைமையை வணங்கி வரவேற்கிறோம்.

பரோபகாரம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

பிதிர்கடன், பரமேசுவர பூஜை, தேவ யக்ஞம், எல்லா ஜீவராசிகளுக்கும் உணவு படைப்பது ஆகியவற்றை வைதிக மதம் விதிக்கிறது. திருவள்ளுவரும் இதே தர்மத்தைத் தான் விதித்திருக்கிறார் :

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

வேதம் கூறும் தர்மங்களுள் யாகத்தில் ஹிம்சை இருக்கக் கூடுமாதலால் அதைத் திருவள்ளுவர் கண்டிக்கிறார் என்று சிலருக்கு அபிப்ராயம். கீழ்க்கண்ட குறளை மேற்கோள் காட்டுகிறார்கள் :

அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று

'ஹவிஸை அக்னியில் ஆஹுதி செய்து ஆயிரம் யாகம் செய்வதைவிட, ஒரு பிராணியையும் வதைத்து உண்ணாமலிருப்பது சிரேஷ்டம்' என்று இதன் அர்த்தம். என் அபிப்பிராயம், திருவள்ளுவர் வைதிக அநுஷ்டானங்கள் அனைத்திலும் பூரண நம்பிக்கை கொண்டவர் என்பதே. காவிரியின் பெருமையைச் சொல்ல வந்த ஒருவர், 'ஆயிரம் கங்கையைவிட ஒரு காவிரி உயர்ந்தது' என்று சொன்னால், கங்கையும் உயர்ந்தது என்றே ஆகும். காவிரியைச் சிலாகித்துப் பேச விரும்புகிற ஒருவர், 'ஆயிரம் சாக்கடையைவிட ஒரு காவிரி உயர்ந்தது' என்று சொல்வாரா? அப்படியே திருவள்ளுவர் அஹிம்சையைச் சிலாகித்துப் பேசும்போது 'ஆயிரம் யாகத்தைவிட அஹிம்சை உயர்ந்தது' என்றால் யாகமும் உயர்ந்தது என்றே அர்த்தமாகும். இந்தக் குறள் இல்லற இயலில் சொல்லப்படவில்லை; துறவற இயலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. துறவிக்கு யாகத்தில் அதிகாரம் இல்லை; அவனுக்கு வைதிக மதம் பூரண அஹிம்சையை விதித்திருக்கிறது. உலகத்துக்கெல்லாம் உபயோகமான ஒரு ரத்தினத்தைத் தந்திருக்கும் திருவள்ளுவர் வைதிகத்தை ஆட்சேபிக்கும் நாஸ்திகர் அல்லர். திருவள்ளுவர் 'விருந்து' என்று சொல்கிற விருந்தோம்பல் வைதிக மதத்தில் மநுஷ்ய யக்ஞம் எனப்படும். விருந்தோம்பல் என்பதை அன்னதானம் எனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் சமைப்பதற்காகப் பானையில் அரிசி போடும்போது ஒரு பிடியை ஏழைகளுக்கு என்று ஒரு கலயத்தில் போட்டுவிட வேண்டும்; இப்படிப் பல குடும்பங்களில் தினமும் போட்டு வைப்பதைப் பேட்டைக்குப் பேட்டை சேகரித்து, உணவாக்கி, ஆங்காங்குள்ள ஆலயத்தில் நிவேதனம் செய்து, ஏழைகளுக்கு அளிக்க வேண்டும். ஒரு பிடி அரிசியோடு ஒரு பைசாவும் தினந்தோறும் போட வேண்டும். சேகரித்த அரிசியைச் சமைப்பதற்கான விறகுக்கும், சாதத்தில் சேர்த்துக் கொள்ள மிளகுப் பொடியோ அல்லது வேறு ஏதாகிலும் வியஞ்சனமோ தயாரிப்பதற்கும், சமையல் பாத்திர வாடகைக்கும் — இப்படிப்பட்ட மேல்செலவுகளுக்காகத்தான் அந்த ஒரு பைசா. இந்தத் திட்டத்தை நடத்திக் காட்டுவது பெரிய பரோபகாரம். பசித்து வந்த ஏழைகளுக்கு ஈசுவரன் கோயிலில் இப்படிப் பிரசாதம் கிடைக்கிறது என்றால் வயிறும் மனசும் குளிரும். இதனால் கோயிலுக்கு வருகிற வழக்கம் ஏற்பட்டு பக்தியும் வளரும். வெறுமே 'சாப்பாடு' என்றில்லாமல், ஈசுவரனுக்கு நிவேதனமான 'பிரசாதமாக' இருப்பதால் அந்த அன்னம் சித்தசுத்தி அளிக்கும்.

அன்னதானம் பரோபகாரத்தில் ஓர் அம்சமே. பரோபகாரம், சமூக சேவை, சோஷல் ஸர்விஸ் என்று இந்த நாட்களில் ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் பண்ணுவதை, முற்காலத்தில் எந்தப் பகட்டுமில்லாமல் சுபாவமாகவே மக்கள் செய்து வந்தனர். இதற்கு 'பூர்த்த' தர்மம் என்று ஒரு பெயர். ஜனங்களுக்காகக் கிணறு, குளம் வெட்டுவது, அவர்களின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கோயில் கட்டுவது, அன்னதானம், நந்தவனம் அமைப்பது எல்லாம் 'பூர்த்தம்'. இதில் கிணறு, குளம் வெட்டுவது முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் பேச்சுவழக்கில்கூட, 'அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வெட்டிக் கொண்டு இருக்கிறானா?' என்கிறோம். 'வெட்டுவது' அவ்வளவு பெரிய தர்மம். தாகமெடுத்த பசுக்களும் மற்ற பிராணிகளும் வந்து நீர் அருந்துவதற்காகக் கிராமத்துக்கு வெளியே மேய்ச்சல் பூமியில் ஒரு குளம் வெட்டினால் எவ்வளவோ புண்ணியம். ஒரு கிராமத்தில் அல்லது பேட்டையில் இருக்கிற சகலரும் — பணக்காரர் ஏழை என்ற வித்தியாசமில்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற வித்தியாசமில்லாமல் — ஒன்று சேர்ந்து மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட சரீரப் பிரயாசையுள்ள பரோபகார சேவைகளில் ஈடுபட வேண்டும். இதனால் சமூக ஒற்றுமையும் அதிகமாகும். புத்தி சுத்தமாகக் கல்வி, மனசு சுத்தமாக தியானம், வாக்கு சுத்தமாக சுலோகம் இப்படியெல்லாம் இருக்கின்றன அல்லவோ? சரீரம் சுத்தமாவதற்கு அதனால் சேவை செய்ய வேண்டும். உழைக்க உழைக்க சித்தசுத்தியும் வரும். எல்லாருடனும் சேர்ந்து மண்ணை வெட்டும்போது அகங்காரத்தையும் வெட்டி எடுத்ததாகும். குளத்தில் தண்ணீர் ஊறுவதைவிட நம் இருதயத்தில் ஊறுகிற அன்பே முக்கியம். வெளிவேஷம், டெமான்ஸ்ட்ரேஷனே வேண்டாம். அவரவரும் பிறருக்குத் தெரியாமல் ஏதாவது ஒற்றையடிப் பாதைக்குப் போய் அங்கேயிருக்கிற கண்ணாடித் துண்டுகளை அப்புறப்படுத்தினால்கூடப் போதும் — அதுவே பரோபகாரம்; சித்தசுத்தி என்கிற ஆத்ம லாபமும் ஆகும்.

பகவத் ஸ்வரூபமாக எல்லோரையும் நினைத்து, நமக்குக் கர சரணாதிகள் தந்துள்ள பகவானுக்குப் பிரீதியாக அந்தக் கரசரணங்களைக் கொண்டு பரோபகாரம் செய்வோம்.

அம்மா

ரா. கணபதி

7. வெளிமழையும், உள்மழையும்!

வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கி என்னை வாழ்விப்பது உன் பரம் காண்!

- தாயுமானவர்

ராமகிருஷ்ணர் பைரவி பிராம்மணியுடனும், ஹ்ருதயராமருடனும் தக்ஷிணேசுவரத்திலிருந்து காமார்புகுருக்குப் புறப்படுமுன் பவதாரிணியின் சந்நிதியில் மனம் பாகாகக் கரைந்து நின்றார்.

பெற்ற தாயிடம் பேசுகிற குழந்தையாக வாய்விட்டுச் சொன்னார்:

"என் அம்மாடி! ஊருக்குப் போறேன். அங்கே என் அகத்துக்காரியும் வருவா. அவளுக்கு லவலேசம்கூட என்கிட்டக் காமம் ஏற்பட்டுவிடக் கூடாது. உங்கிட்ட சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம். உனக்கு எதுவும் சொல்லவே வேண்டாம். ஆனா இப்படி நான் உருகிக் கண்ணும் கண்ணீருமாச் சொல்லணும்னு உன் லீலா மனசுலே ஒரு ஆசை. அதனாலே என்னை இப்படிக் கேக்க வைக்கிறே... தாயே, நான் வரேன். 'வரேன்'னு உன்னை விட்டுட்டா போறேன்? என்னமோ உளர்றேன்...." என்று சிரித்துக்கொண்டே, மின்னலைப் பிழிந்து செய்தாற்போன்ற தமது ஒளித்திருமுகத்தை அமிருதக் கண்ணீரில் நனைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

சாரதாமணி காமார்புகுருக்கு வரப்போகிறாள் என்பதே பைரவி பிராம்மணிக்குப் பிடிக்கவில்லை. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது!

பொதுப்படையாகப் பேசுவதுபோல் ராமகிருஷ்ணரிடம் பல விஷயங்களைப் பேசிக் கொண்டே நடந்தாள் பைரவி. அதனிடையில், "ஒருவன் அத்யாத்ம மார்க்கத்திலே போறச்சே, அதுக்கு அவனுடைய தர்மபத்தினி தடங்கல் செய்யறான்னு வெச்சுப்போம். புருஷன் தன்னோடு லோக ரீதிக்கு ஒப்ப நடக்கலேன்னா 'தற்கொலை செய்துப்பேன்' என்றே அவன் பயமுறுத்தறதா வெச்சுப்போம். இவனோ அவளோடு கிருஹஸ்தாசிரமம் வசிக்கிறதா மந்திரபூர்வமா பிரமாணம் பண்ணினவன். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே அவனுக்கு எத்தனை பெரிய பிரச்னை ஏற்படும்?" என்றாள்.

ராமகிருஷ்ணரை 'பயமுறுத்தி', சாரதாமணியை வரவொட்டாமல் தடுப்பதற்கே இப்படித் தந்திரமாகப் பேசினாள் பிராம்மணி.

ராமகிருஷ்ணருக்கு சாக்த-வைஷ்ணவ தந்திரமெல்லாம் போதித்த பிராம்மணியின் இந்த அசட்டுத் தந்திரம் அவருக்குப் புரியாமற் போகவில்லை. ஆனாலும் புரிந்துவிட்டது என்று பட்டவர்த்தனமாகக் காட்டாமல், அவளைப் போலவே ஒளித்துப் பேசினார்:

"அத்யாத்ம மார்க்கத்திலே ஒருத்தனுக்கு உண்மையான நாட்டம் வந்துட்டா, அப்புறம் பெண்டாட்டி தற்கொலை பண்ணிக்கிறதாச் சொன்னாலும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது"— இவ்வாறு சொல்லிவிட்டு, பைரவியின் இதயத்துக்குள் துளைக்கும்படி குறுகுறுவென்று அவளைப் பார்த்தபடி தொடர்ந்தார்: "ஆனா, ஒண்ணு நிச்சயமாச் சொல்வேன் பைரவியம்மா! ஒருத்தனுக்கு அம்பாளிடத்திலே வாஸ்தவமான பக்தி இருந்தா, தேவி அவனை இப்படிப்பட்ட பிரச்னையிலே தள்ளவேமாட்டா. அவனுடைய பத்தினியும் அவனுக்கு அநுகூலமா இருக்கும்படியே அருள்பண்ணுவா."

பைரவியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

ஏழாண்டுகளுக்குப் பின் வந்துள்ள 'கதாயி'யைப் பார்க்க காமார்புகூர் வாசிகள் ஆவல்மீதூறக் கூடினர். கதாயி பெரிய ராமகிருஷ்ணராகி விட்டாரா, அல்லது பைத்தியமாகிவிட்டாரா என்று தெரிந்து கொள்வதில் அவர்களுக்கு ஆர்வம். ஆனால் அவர் எப்படியிருந்தாலும், 'தங்கள்' கதாயி என்று அவரிடம் அன்பைக் கொட்டுவதற்கே அந்த நல்ல கிராமவாசிகள் கூடினர்.

ஜொலிக்கின்ற தேகமும், கருணையில் நனைந்த கண்ணும், உலகில் ஒட்டாத நகை இழையிடும் இரு வாயுமாக ராமகிருஷ்ணர் பிரவேசித்தவுடனேயே அவர்களுக்கு அவரது பைத்தியத்தைப் பற்றிய ஐயங்கள் பறந்தன; அவரது மகிமை பற்றிய மதிப்பில் பிறந்த பய உணர்ச்சியும் ஓடிப் போயிற்று. 'தங்கள்' கதாயியேதான் என்று நெருங்கி வந்து அமர்ந்தனர்.

எட்டத்திலேயே நின்று, முக்காட்டைச் சிறிதே திறந்து அவரைப் பார்த்தாள் சாரதாமணி.

அவரது தோற்றத்தைக் கண்ட மாத்திரத்திலே எல்லையில்லாத அன்பையும், சுயநலம் என்பதே இம்மியும் கலக்காத துறவையும் பிரத்தியட்சமாக நுகர்ந்தாள் சாரதாமணி.

விவரம் தெரிந்தபின் இப்போதுதான் அவள் அவரை முதலாவதாகப் பார்க்கிறாள். முதற் பார்வையிலேயே 'சுயம்' போயிற்று. சுயநலமே இல்லாத அன்பு இவளிடமிருந்து அவர்பால் பொங்கிக் கொண்டு எழுந்தது. அவர்தான் தனக்குச் சகலமும்; அவரே தன் பிராணபதி; அவரே தன் ஆத்மநாயகன் என்று தெரிந்துகொண்டுவிட்டாள்.



பிராணபதி, ஆத்மநாயகன் என்பதை யெல்லாம் வேறெந்த மொழியிலாவது பெயர்க்க முடியுமோ? தேகத்தின் பதியையும், சரீரத்தின் நாயகனையும்தான் உலகம் பொதுவில் அறிந்திருக்கிறது. ஆனால் நம் தேசத்துப் பெரியவர்கள் 'பிராண நாயகன்' என்று ஒருவனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்! பரம பக்தர்கள் ஈசுவரனையே பிராண நாயகனாக்கிக் கொண்டு அவனது நாயகியானார்கள். ஆனால் மனுஷ்யசரீரம் கொண்ட சாரதை மனுஷ்ய சரீரம் கொண்ட ராமகிருஷ்ணரைப் பிராண காந்தனாகக் கொண்டதற்கு ஈடு உண்டா?

அவளது பிராணனின் மூலத்திலேயே ஓர் அமிருதசரஸின் ஊற்றுக் கண்கள் திறந்து கொண்டன.

''அவரை அப்போ பார்த்ததிலிருந்து என் இருதயத்துக்குள்ளே ஓர் ஆனந்த கும்பத்தை ரொப்பி வெச்சுட்ட மாதிரியே அனவரதமும் இருந்தது. துளிக்கூட மாறாத அந்தத் தெய்விக ஆனந்தத்தை என் மனசு எப்படி மொண்டு மொண்டு குடிச்சுதுங்கறதை வார்த்தையாலே கோடி காட்டக்கூட முடியாது'' என்று பிற்காலத்தில் நம் அம்மா மொழிந்திருக்கிறாள்.

வயிற்றுக்கு நிறைவு தருகிற சிசு பத்து மாதமானால் வயிற்றைக் காலி செய்துவிட்டு வெளியே போய்விடும். ஆனால் ராமகிருஷ்ணர் சாரதையின் இதயத்தில் வைத்த ஆனந்த நிறைவு என்றுமே அவளைவிட்டு நீங்கவில்லை.

அவரது பாங்குதான் முதலில் அவளுக்குத் தெரிந்தது; பிறகுதான் சரீரம் தெரிந்தது. 'இப்படி இளைத்துவிட்டாரே! என்னமோ பெரிய பெரிய சாதனையெல்லாம் பண்ணினாராமே, அதனால்தான் இளைத்தாரா? அந்தச் சாதனையெல்லாம் எனக்குப் புரியாது. ஆனால் இளைத்திருப்பது மட்டும் புரிகிறது. என்னை அதுவே உருக்குகிறது. இந்த உருக்கத்துக்குள்தான் எத்தகைய தூய பிரேமை!'

சாரதாமணி மூக்காட்டுடனே வந்து ராமகிருஷ்ணருக்கு நமஸ்கரித்தாள்.

எந்தப் பருவ மங்கையும் எந்த யௌவன புருஷனுக்கும் அவ்வளவு பாவனமாக நமஸ்கரித்திருக்க முடியாது!

''சாரதா, இவாளெல்லாம் நம்ப மநுஷ்யா! நான் இவாளோடேதான் ஊட்டி அடிச்சுண்டு இருப்பேன். 'புது மாட்டுப் பொண்ணு'ன்னு நீ உள்ளேயே இருந்துடாதே. நீ அடங்கியிருக்கறதுதான் எனக்குப் பிரீதி. வெளியிலே சுத்தாமே அகத்தோடுதான் இருக்கணும். ஆனா ரொம்பக் கட்டுப்பெட்டியா இருந்துடாதே. நம் மநுஷ்யாளோடே நீயும் சேர்ந்துண்டு நான் பண்ணற ரகளையை யெல்லாம் ரசிச்சுண்டு இரு'' என்று கூறினார் ராமகிருஷ்ணர்.

ஒவ்வொரு அக்ஷரத்திலும் அன்பைத் துளும்பத் துளும்ப நிரப்பிப் பேசினார். எந்த யௌவன புருஷனும் எந்தப் பருவ மங்கைக்கும் தரமுடியாத பாவன அன்பு அது.

''இந்தா, இதோ இவாளுக்கு நமஸ்காரம் பண்ணு. இவாதான் பைரவிப் பிராம்மணிங்கிற மகா யோகினி. என் குரு. எங்கம்மா மாதிரி நெனச்சு, மாட்டுப் பொண்ணு இவாளுக்குக் கைங்கரியம் பண்ணு. பரம புண்ணியம் கிடைக்கும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

தன்னைப் போலவே பெண்ணாகப் பிறந்தும், தான் கனவில்கூட நினைக்க முடியாத பெரிய நிலைகளை அடைந்த பைரவியிடம் சாரதைக்கு பயமும் மதிப்புணர்ச்சியும் உண்டாயின. நடுங்கிக் கொண்டே நமஸ்கரித்தாள்.

பைரவியை சாரதாவுக்கு மாமியார் ஸ்தானத்தில் வைத்தார் ராமகிருஷ்ணர். சாரதையின் மாமியார் சந்திரமணி உண்மையில் அவளுக்கு அம்மாவாகவே இருந்தாள். பைரவியோ மாமியார் என்கிற ஓர் 'அந்தஸ்தை' அப்போதே தன் மனத்தில் ஏற்படுத்திக் கொண்டாள்.

மாமியார் வெளியில் அந்தஸ்தைக் காட்டினாலும் அந்த அந்தஸ்துக்கு அடிப்படையாக ஒரு பெரிய குறைவுணர்ச்சியும் தாபமும் ஆசாபங்கமும் இருக்கும். இது மனோதத்துவ விஷயம். தான் எடுத்து வளர்த்த பிள்ளையின் வாழ்வில் புதிதாக முக்கியத்துவம் பெற இன்னொருத்தி வந்தவுடன் தாய் மனசில் எதையோ பறிகொடுத்த துக்கம் ஏற்படுகிறது. துக்கத்தில் சித்தம் சிதறுகிறது. புது மாற்றுப் பெண்ணிடம் அர்த்தமில்லாத கசப்பு ஏற்படுகிறது. அந்தஸ்தைக் காட்டி அதிகாரம் செய்யத் தலைப்படுகிறாள்.

பக்குவ ஜீவிகளுக்கு இத்தகைய எண்ணங்கள் ஏற்படுவதில்லை. சந்திரமணிக்கு ஏற்படவில்லை. ஆனால் பைரவி பிராம்மணிக்கு ஏற்பட்டு விட்டது!

அதுதான் யோக மாயை என்பது! மகாமாயா தேவி இந்த மகா யோகினியையே ஆட்டி வைக்கலானாள்!

எத்தனையோ அரும் சாதனைகளைச் சாதித்த பைரவிக்கு அன்பைச் சாதிக்கத் தெரியவில்லை. அவளுக்கும் 'எனது' என்ற ஆசை விட்டபாடில்லை. ராமகிருஷ்ணரைத் தனது சொத்தாக நினைத்து வாஞ்சை வைத்துவிட்டவள் அவள். அவருக்கோ ஆசையே தெரியாது; அன்புதான் தெரியும். அந்த அன்புக்கு இப்போது ஒரு பங்காளியாக வந்து நின்ற சாரதையைப் பிராம்மணி போட்டியாகவே எண்ணினாள்.

பிற்பாடு தனிமையில் ராமகிருஷ்ணரிடம், ''அப்பனே, உன் மனைவி நன்றாக வளர்ந்துவிட்டாள். அவளைப் பார்த்தால் எந்தப் புருஷ மனசும் சஞ்சலிக்கும். நீ ஜாக்கிரதையாயிருக்கணும்'' என்றாள்.

அவளது உள்நோக்கம் அவருக்கா தெரியாது?

வெறுமே புன்னகை புரிந்தார்.

'என்னை அவதார புருஷன் என்று மகாபட்ட வித்வத் சபைக்கு நிரூபித்துக் காட்டினாயே! ஆனால் நீ உன் மனத்தில் என்னைப் பற்றி அப்படி நினைக்கவில்லையோ? அவதார புருஷன் பெண்மோகத்துக்கு ஆளாக முடியுமா? பெண்கள் எல்

லாரையும் சர்வேசுவரியின் வடிவமாகப் பார்க்கிற எனக்கா உபதேசம் செய்கிறாய்?' என்றெல்லாம் ராமகிருஷ்ணர் அவளைக் கேட்டிருக்கலாம்; ஆனால் கேட்கவில்லை. 'அவளுக்கு ஒரு பாடத்தை அம்பாள் புகட்டிக் கொண்டிருக்கிறாள். கட்டி நன்றாகப் பழுத்த பின்தான் அதை அம்பாள் அறுப்பாள். இப்போதே நாம் நேரடியாகத் தலையிடக் கூடாது' என்பதால் அடங்கி யிருந்தார்.

கோவிந்தனைச் சுற்றி கோப கோபியர் சூழ்ந்தது போல் தம்மைச் சூழ்ந்திருந்த மக்களுடன் இரவெல்லாம் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர். பெரிய பெரிய விஷயங்களை எளிய உவமைகளால், இனிய கதைகளால் விளக்கிப் பேசினார். தங்கள் கதாயி — பைத்தியம் என்று நினைக்கப்பட்ட கதாயி — இத்துணை மதுரமாகப் பேசுவதைக் 'கள்ளால் மயங்குவது போலே கண்மூடி வாய்திறந்தே' அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ மகா அநுபூதிகளில் திளைத்த அவதார புருஷன் அந்த எளிய மக்களை விடக் கொஞ்சம் கூடத் தம்மை உயர்ந்தவராக நினைக்காமல் அணுக்கத்தில் அமர்ந்து பேசினார்.

அவர் பேசிய தெல்லாவற்றுக்கும் சாரம் என்ன? பகவானிடத்தில் பக்தி, மக்களிடத்தில் பிரேமை இவற்றைக் குழைத்து வாழ வேண்டும் என்பதே.

''நீங்கள்ளாம் வீடு வாசலை விட்டுட்டு ஓடிடணும்கிறது இல்லை; வீட்டிலிருந்து கொண்டே சுத்தமா வாழலாம். நம்ப அகத்து மனுஷாளுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யறதில் தப்பில்லை. ஆனா மத்த மனுஷாளை வித்தியாசமா நினைக்கக்கூடாது. 'இவாதான் நம்ப மனுஷா' என்று வீட்டிலே பாசத்தை வெச்சுடக் கூடாது...''

''அதெப்படி கதாயி முடியறது? நமக்கு நெருக்கமா இருக்கிறவாகிட்டத் தனியான பாசத்தை எப்படி ஏற்படுத்திக்காம இருக்க முடியும்?'' என்றான் பாலியத் தோழன் கயாவிஷ்ணு.

''முடியும் கயா, முடியும். அதுக்குத்தான் பகவத் பக்தி வேணும்கிறது. பலாச் சுளையை எடுக்கச்சே பிசின் கையிலே ஒட்டிக்கிற மாதிரி, வீட்டுக் காரியத்தைச் செய்யறச்சே பாசம் ஒட்டிக்கத்தான் செய்யும். ஆனால் பலாச் சுளை எடுக்கிறவா கையிலே விளக்கெண்ணெய் பூசிண்டுதான் சுளையை எடுக்கறா. பலாப் பிசின் அப்போ ஒட்டறதே யில்லை. மனுஷ பாசப் பிசின் ஒட்டாம இருக்கிறதுக்காக ஈசுவர பக்தி என்கிற எண்ணெயைத் தடவிக்கணும்.''

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ற பொய்யா மொழியைத்தான் அவர் வேறுவிதத்தில் சொன்னார்.

''நான் சொல்றது சாரதாவுக்குப் புரியறதோ என்னவோ?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

சாரதை பக்தி என்று விசேஷமாக ஏதும் செய்யவில்லை. வீட்டுக் காரியத்திலேயேதான் அனவரதமும் ஈடுபட்டிருந்தாள். ஆயினும் அவளுள் பாசம் என்கிற சுய உணர்வு கலந்த மாயை ஆழமாகப் புகவில்லை. இது அதிசயமில்லையா? அவதார வியக்திகளுக்கும் சாதாரண மானுடர்களுக்கும் உள்ள வித்தியாசம் இது.

ராமகிருஷ்ணர் கேட்டதற்கு சாரதை ஏதும் பதில் சொல்லவில்லை. முக்காட்டுக்குள் மௌனமாக இருந்தாள் — அவதாரத்தை அம்பலப்படுத்தாமல் ஒரு முக்காட்டைப் போட்டுக் கொண்டிருந்த சாரதை.

உள்ளே யிருந்து மதனி மெல்லக் குரல் கொடுத்தாள். ''சாரதா கொழந்தை. அவளுக்கு என்னத்துக்குத் தத்துவ போதனை யெல்லாம். அதுக்கு இன்னும் வயசு வரவேண்டாமோ?''

''மன்னி அவர்களே! நீங்க வெண்ணெய் கடைஞ்சு எடுக்கறேளே, காலங்கார்த்தாலே எடுப்பேளா, மத்தியான்னம் எடுப்பேளா?'' என்று மலர்ந்து கேட்டார் ராமகிருஷ்ணர்.

கேள்வியின் பொருள் மதனிக்கு விளங்க வில்லை. ''நன்னா யிருக்கே, மத்தியானத்திலே வெண்ணெய் எடுக்க முடியுமோ? கடையறச்சேயே சூடேறி வெண்ணெய் உருகிடுமே! காலங்கார்த்தாலேதான் கடைவா'' என்றாள் மதனி.

''அப்படிச் சொல்லுங்கோ. வயசு ஏறி லௌகிகச் சூடெல்லாம் ஏறின பிற்பாடு மனசைக் கடைஞ்சு பக்தியை எடுக்கறது கஷ்டம். உலகச் சூடு ஏற ஆரம்பிக்கிறதுக்கு முன்னேயே, கொழந்தைப் பிராயத்திலேதான் பக்தியைக் கடைஞ்சு எடுக்கணும்'' — மற்றவர்களைப் பார்த்து ராமகிருஷ்ணர் தொடர்ந்தார்: ''மன்னி மட்டுமில்லை. பொதுவா எல்லோருமே பாலியத்திலேயும் யௌவனத்திலேயும் லௌகிகமா இருந்துட்டு, வயோதிகத்திலே பகவான் கிட்டத் திரும்பினால் போறும்னுதான் நினைக்கிறா. இது அடியோடு தப்பு. பகவானை முதலிலே தெரிஞ்சுண்டுட்டு அப்புறம்தான் உலகத்துக்குத் திரும்பணுமே தவிர, உலகத்திலே இரிஞ்சுட்டு பகவான்கிட்டே திரும்ப முடியாது. பகவானைத் தெரிஞ்சுண்ட அப்புறம் லோகத்தைப் பார்த்தாத்தான் அதன் உண்மை ஸ்வரூபம்

தெரியும்; அதுக்கும் நல்லது செய்யலாம், தனக்கும் நல்லது பண்ணிக்கலாம்.''

''பகவானைத் தெரிஞ்சுண்டா, அப்புறம் லோகமே மாயைன்னு வெறுத்துடுவாளாமே? அதுக்கு எப்படி நல்லது செய்யறது?'' என்று கேட்ட வைபன் விட்டுப் பெண், சட்டென்று தன் நாக்கைக் கடித்துக் கொண்டு, ''நீங்க ஒருத்தர் என்னமோ காளி மாதாவைப் பார்த்த பிற்பாடும் எங்ககிட்டல்லாம் பிரியமாவே இருக்கேள்! எல்லாரும் உங்களைப்போல இருப்பாளா?'' என்று முடித்தாள்.

''சரி, நான் சொல்றதைக் கவனமாக் கேளுங்கோ. உலகம் வெறும் ஸைபர் தான். இதையே பெரிசா நினைச்சு உழண்டுண்டு இருந்தா ஒரு நாளும் நிம்மதி, திருப்தி, சந்தோஷம், ஆத்ம சாந்தி கிடையாதுதான். என் ஜகன் மாதாவை அநுபவிச்சா, அந்த அநுபவ நிலையிலே உலகம் ஸைபராகத்தான் ஆயிடறது. ஜகன்மாதாங்கிற ஒண்ணே ஒண்ணுதான் உண்மையா இருக்குன்னு தெரியறது. ஆனா அந்த அநுபவ நிலையிலிருந்து இறங்கி உலகத்தைப் பார்க்கச்சே அந்த ஒண்ணின் நினைவும் இருக்கு; இந்த ஸைபரின் நினைவும் பக்கத்திலேயே வரது. வெறும் ஸைபர் ஒண்ணுக்குப் பக்கத்திலே வந்தா 'பத்து'ன்னு ஆயிடறதோன்னோ? அப்படியே சர்வேசுவரியோட சேர்ந்த நினைவிலே உலகத்தைப் பார்க்கச்சே அதுக்கும் மதிப்பு வந்துடறது. இப்படிப் புரிஞ்சுண்டா உலகத்துக்கும் மதிப்புத் தந்து அதற்கான நல்லதைச் செய்ய முடியறது. ஆகக் கூடி முதல்லே பகவானைத் தெரிஞ்சுண்டுட்டு அப்புறம் லோக விவகாரத்துக்குத் திரும்பறதுதான் முறை. என்ன பிரஸன்னு மாமி, நான் சொல்றது சரிதானே? நீங்க பல ஊரெல்லாம் போய்ப் பார்த்தேளே! அப்ப முதல்லே ஒரு சத்திரத்தைத் தேடிப் பிடிச்சு உங்க பெட்டி படுக்கையை யெல்லாம் இறக்கிட்டுத் தானே, நிம்மதியா ஊர் சுத்தினேள்? இந்த உலகத்துக்கு வந்திருக்கிற நாமும் முதலில் நம் மனசும் உடைமைகளும் தங்கியிருக்கிறதுக்கு மகாகாளி என்கிற விடுதியைப் பிடிச்சுக்கணும்; அப்புறம் லௌகிகத்திலே வேடிக்கை பார்க்கலாம். ஆனா, ரொம்பவும் வேடிக்கையிலே இறங்கிப் பொழுதைக் கழிச்சுடக் கூடாது. அப்பப்போ விடுதிக்குப் போய் 'ரெஸ்ட்' பண்ணிக்கத்தான் வேணும். இல்லாட்டா புகை சூழ்ந்த அறையிலே எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் கொஞ்சமாவது கரி ஏறுகிற மாதிரி, நம்மேலே மாயை கரியைப் பூசிடத்தான் செய்யும்...''

ராமகிருஷ்ணரை இடைமறித்தாள் பிராம்மணி. ''அப்பனே! இப்போ சொன்னியே, அது நூற்றிலே ஒரு வார்த்தை. புகை மூடின ரூமிலே எத்தனே ஜாக்கிரதையாயிருந்தாலும் உடம்பிலே கரி ஏறத்தான் செய்யும். ஸ்திரீ சங்கம் என்பது இப்படிப் பட்டதுதானே?''

அவரைப் பாக்குவெட்டியில் பிடித்து விட்டதாக இறுமாந்து பேசிய அவளுக்குப் பதிலாகப் பாக்கின் உவமையையே கூறினார் ராமகிருஷ்ணர்: ''பைரவியம்மா! நீங்க சொல்றது வாஸ்தவம் தான். ஸ்திரீ சங்கத்துக்குச் சபலிக்கச் செய்யும் சக்தி ஜாஸ்திதான். ஆனா மனசு பச்சைப் பாக்கா இருக்கற வரைக்கும்தான் அது இந்தச் சபல ஓட்டிலே ஒட்டிண்டிருக்கும். என் அம்பிகையோட கதகதப்பான கிருபைக் கிரணம் உள்ளே புகுந்து, மனசை உலர்த்தி, காய்ஞ்ச பாக்காக்கி விட்டால், மேல் தோலிலிருந்து அது அப்படியே பிரிஞ்சு விடும். ஆட்டிப் பார்த்தா அப்போ பாக்குப் பழத்துக்குள்ளே பருப்பு தனியாக ஆடும். மனுஷ மனசை ஒரு இரும்பு ஆணியா வெச்சுப்போம். பத்தினிங்கிற ஒரு சின்ன காந்தத் துண்டை — பத்தினிக்குக் 'காந்தா'ன்னே பேர் — கிட்டக் கொண்டு வந்தா மனசு அதிலே போய்த்தான் ஒட்டிக்கும். வாஸ்தவம். ஆனால் இந்த உலகங்களை எல்லாம் ஒண்ணையொண்ணு ஆகர்ஷிக்கும்படியா பண்ணிண்டிருக்கே ஒரு பெரிய காந்தம், என்னோட சர்வேசுவரி என்கிற காந்தம் — அந்தக் காந்தத்துக்கு முன்னாடி இரும்பு ஆணியை உருட்டி விட்டா அப்புறம் இந்த இத்தனூண்டு பத்தினிக் காந்தம் என்ன பண்ணும்?''

பைரவி தனிமையில் குடைந்தபோது ராமகிருஷ்ணர் கம்பீரமாக மௌனம் சாதித்தார். இப்போது அவள் பொதுச் சபையில் குடைந்தபோது கம்பீரமாக, ஆனால் மறைமுகமாக, பதில் சொன்னார். அவள் அந்த எளிய மக்களின் உள்ளத்தில் விஷம் ஏற்றிவிடக் கூடாதல்லவா?

பைரவியை நேருக்கு நேராகப் பார்த்துக்கொண்டு, ''ஸ்திரீ — புருஷ வித்தியாசமே தெரியாத பரமஹம்ஸனுக்கு எந்தச் சூழ்நிலையிலும் ஆபத்து இல்லை.

அவா அஞ்சு வயசுக் குழந்தை மாதிரி'' என்றார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

அவரை ஐந்தாம் வயசில் மணந்த சாரதை உடலால் ஐந்து வயசுக்காரியாகவே நின்று கொண்டு இப்போது மனத்தால் தாயாக அவாவுகிறாள். இவர் முப்பத்திரண்டாவது வயதிலும் ஐந்து பிராயப் பிள்ளையாக மட்டுமே இருக்கிறார். தாம் காளி மாதாவின் பிள்ளை என்பது தவிர ஒன்றும் தெரியாத முப்பத்திரண்டு வயதுக் குழந்தை இது.

''கதாயி, நீ என்ன அழகா எல்லாம் சொல்றே! நீ எங்களோடேயே இருந்து நிறைய நிறைய உபதேசம் பண்ணிண்டே இரு. நாங்க தெரிஞ்சுக்க வேண்டியது ரொம்ப இருக்கு...'' என்று உருக்கத்துடன் கூறினாள் தனியம்மாள்.

''ரொம்பத் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியமே இல்லேம்மா. நான் கூட ஒண்ணுமே தெரிஞ்சுக்காம இருக்கச்சே தான் அம்பாள் அநுக்கிரகத்தை அடைஞ்சேன். என் அம்மா கிட்ட பக்தியா யிருக்கணும், அவள் விட்ட வழின்னு இருக்கணும். இதை மட்டும் தெரிஞ்சுண்டு அநுஷ்டானத்திலே கொண்டு வந்துட்டாப் போறும். பிறத்தியாருக்கு உபதேசம் பண்ணறவா நிறைய சாஸ்திரமெல்லாம் படிக்கணும். ஏன்னா, மத்தவா பல தினுசு சந்தேகம் கேப்பா. அதையெல்லாம் போக்கணும். ஆனா, அவாவாளும் தான் சம்ஸாரத்துலேருந்து விடுபடறதுக்குக் கொஞ்சம் படிச்சுத் தெரிஞ்சுண்டு அதை ஒருமுகமாக அநுஷ்டிச்சாலே போதும். தற்கொலை பண்ணிக்கிறதுன்னா ஒரு சின்ன ஊசியை முழுங்கினாக்கூடப் போதும்; ஆனா இன்னொருத்தனைக் கொலை பண்ணறதுன்னா கத்தி, கபடா எல்லாத்தையும் தூக்கிண்டுன்னா போக வேண்டியிருக்கு? கொலைக்குச் சொல்கிறதுதான் அமிருதமாகிறதுக்கும் பொருந்தறது'' என்று கூறிச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

சிரிப்பு பலத்துக் கொண்டே வந்தது.

ஏன் இப்படிச் சிரிக்கிறார்?

அவருக்குப் பைத்தியம் என்று தக்ஷிணேசுவரத்துக்காரர்கள் சொன்னது மெய்தானோ?

ராமகிருஷ்ணர் பகபகவென்று சிரித்துக்கொண்டிருந்தார்.

வெளியிலே பெருங் காற்று சுழித்துக் கொண்டு சிரித்தது. இடிகள் கர்ஜித்து அட்டகாசம் செய்தன. மின்னல்கள் பளிச்சிட்டு, வானமா தேவியின் சிரிக்கும் உதடுகளாக நெளிந்தன.

ராமகிருஷ்ணரின் சிரிப்பு ஓய்ந்தது.

முத்து முத்தாக அவரது கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது.

பெருங் காற்று நின்றது.

இடிகள் ஓய்ந்தன.

மின்னல்கள் மறைந்தன.

மழை பெய்ய ஆரம்பித்தது.

எல்லோரும் அப்படியே தூங்கிப் போனார்கள்.

ராமகிருஷ்ணர் பாவ சமாதியிலே ஆழ்ந்தார்.

காலையில் மழை ஓய்ந்திருந்தது.

சமாதி கலைந்த ராமகிருஷ்ணர் காலைத் தென்றலைப் போலவே காலை வீசி பூதிர் கால் என்ற கால்வாய்க்குச் சென்றார்.

எங்கும் தண்ணீர் ஊறிக் கிடந்தது.

மழையாகப் பொழியா விட்டாலும் வானில் அப்பிக் கிடந்த முகில் கூட்டத்தில் நீரின் செறிவு பிதிர்ந்திருந்தது.

அது, இரவு முழுவதும் உபதேச மழை பொழிந்த ராமகிருஷ்ணரின் உள்ளத்துக்குள் இப்போதும் உபதேச உண்மைகள் மழைச் சூல் கொண்டிருப்பது போல் இருந்தது.

ஏரி விளிம்பு வரை நிரம்பி யிருந்தது.

ஏரிக் கரை யெல்லாம் நீர் ஊறிய சொதசொதப்பு.

தெரு மண்ணிலும் ஜலம் ஊறி யிருந்தது.

மரங்கள் பச்சைப் பசேலென்று மரகத மயமாக நனைந்து நின்றன.

புற்கள் ஜல பிந்துக்களைக் கிரீடமாக அணிந்து ராஜ கம்பீரமாக நின்றன. சாய்ந்து கிடந்த புற்களும் கூட ஸோபாவில் சாய்ந்த ராஜாக்களைப் போல ஒய்யாரமாகத் தோன்றின.

பூமி, அதில் தோன்றிய செடி கொடி மரங்கள், பூமியின் சூழல், வானம்— எங்கும் ஈரம் பாரித்துக் கிடந்தது.

மரத்திலிருந்து நீர்த் துளிகள் ராமகிருஷ்ணர் மீது ஜிலு ஜிலுவெனக் குலுங்கி விழுந்தன.


ராமகிருஷ்ணரின் உடல் குலுங்கியது. அந்த அநுபவத் தருவின் கண்களிலிருந்து நீர்ச் சொட்டுக்கள் விழலாயின.

விக்கி விக்கி அழுதார்.

நீர் எடுப்பதற்காகக் கும்பத்துடன் வந்த சாரதை அவரைப் பார்த்தாள்.

இதயத்திலே ஆனந்த கும்பம்; இடுப்பிலே நீர்க் கும்பம் — அவளுக்குள்ளும் வெளியும் ஒரே ஈரம் ஊறிக் கிடந்தது.

அவரையே பார்த்தபடி அசையாமல் நின்றாள். (தொடரும்)



அரை நூற்றாண்டாக ஆரோக்கியப் பிரசாரம்



மகா கவி பாரதியார் தமிழாசிரியராக வேலை பார்த்த மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் இன்டர் மீடியட் படித்து வந்த ஒரு மாணவனின் முழு லட்சியம், ஒரு டாக்டராக வேண்டும் என்பதே!

முடியவில்லை. வழக்கறிஞராகத்தான் முடிந்தது!

கால் நூற்றாண்டு வழக்கறிஞர் தொழிலை வெற்றிகரமாய் நடத்திவிட்டு, நீதிமன்றங்களுக்குப் பெரிய கும்பிடு போட்டுவிட்டார்.

இப்போது அவர் பிணி தீர்க்கும் நற்பணியில் இருந்து வருகிறார். டாக்டர்களிடம் சென்றும் தீராத நிலையில் உள்ள பிறரின் பிணிகளைக் கூடத் தீர்த்துக் கொண்டு வருகிறார்! 'யோகாசாரிய'ராக விளங்கி வருகிறார் அந்த மனிதர்.

அவர்தான் பெங்களூர் திரு சுந்தரம்.

வைகையாற்றங் கரையில் பிறந்தாலும் தந்தையோடு பெங்களூரில் குடியேறி, அங்கேயே தங்கி விட்டவர்.

இந்தியாவில் யோகாசனங்கள் பற்றிய புத்தகங்களுள் விற்பனையில் முதல்இடம் பெற்றிருப்பது இவர் எழுதிய 'ஆனந்த ரகசியம்' என்னும் புத்தகம்தான்.

ராஜாஜி அவர்கள் முன்னுரை எழுதியுள்ள இந்தப் புத்தகம் ஓராயிரம், இரண்டாயிரம் அல்ல... இன்று வரை முப்பதாயிரம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. ஆங்கிலம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளிலும் 'ஆனந்த ரகசியம்' புத்தகம் வெளிவந்து அமோக விற்பனை கண்டிருக்கிறது.

சுந்தரத்தைப் பார்க்கப் போனால் எடுத்த எடுப்பிலேயே அவரது தோற்றம் தான் நம்மைக் கவருகிறது. அறுபது வயதிருக்குமோ என எண்ணினேன். "எனக்கு வயது எழுபத்தொன்று" எனத் திரு சுந்தரம் கூறிய போது என் வியப்பு இரட்டிப்பாகியது.

"யோகாசனத்தால் என்ன நன்மை?" என யாரேனும் சந்தேகித்தால் திரு சுந்தரத்தை நேரில் ஒரு முறை பார்த்தால் போதும்.

வயதுப் பிள்ளைகளிடம் காண முடியாத வாலிபத் தோற்றம், ஆரோக்கிய அலைகளைப் பரவச் செய்யும் முக தேஜஸ், கண்ணாடியின்றியே பத்திரிகைகளைச் சுலபமாகப் படிக்கும் கண் பார்வை, தளராத உடற்கட்டு — எல்லாம் எழுபத்தொரு வயதில்!

'பிணிகள் அண்டாமல், ஆரோக்கிய உடலுடன் ஆனந்தமாக வாழ்வதற்கு ஆசனங்களைப் போன்ற கல்பதரு வேறு எதுவும் இல்லை' என்பது சுந்தரத்தின் அசைக்க முடியாத கருத்தாகும்.

"நீங்கள் எந்த வயதிலிருந்து ஆசனம் பயிலத் தொடங்கினீர்கள்?"

"பன்னிரண்டு வயதிலிருந்தே ஆசனம் பழகத் தொடங்கி விட்டேன். ஆசனம், பிராணயாமம் முதலியவற்றைச் செய்து கொண்டு பதினெட்டு வயதிலிருந்து தண்டால், பஸ்கி முதலிய வெளித் தசைப் பயிற்சிகளையும் செய்து உடல் அழகை உருவாக்கிக் கொண்டேன்."

"யோகாசனங்களைப் பற்றியும் அதனால் ஏற்படும் பலன்களையும் விளக்கமாக முதலில் தமிழில்தான் எழுத ஆரம்பித்தீர்களா?"

"இல்லை. முதலில் ஆங்கிலத்தில்தான் யோகாசனங்களைப் பற்றி 'பிரம்மசாரியா' என்ற பத்திரிகையில் எழுதினேன். நானே யோகாசனம் செய்யும் படங்களை எடுத்து அதில் மாதா மாதம் பிரசுரித்தேன். அக்கட்டுரைகள் புத்தக வடிவில் 1928ல் வெளி வந்தன. இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் பலர் வாங்கிப் படித்தார்கள். லண்டனில் வெளியாகும் 'ஹெல்த் அண்ட் ஸ்ட்ரெங்த்' பத்திரிகையில் இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குத் திரும்பிய ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி ஒரு கட்டுரை எழுதினார். என் ஆங்கிலப் புத்தகத்தில் எழுதிய முக்கிய குறிப்புகளுடன், என்னுடைய சர்வாங்காசனம், தௌலி முதலிய படங்களுடன் வெளியிட்டார்..."

ஆங்கில நாவலாசிரியரான சாமர்செட் மாம் இந்தியாவுக்கு வந்தபோது திரு சுந்தரத்தைச் சந்தித்தார். அச்சந்திப்பைப்பற்றி சாமர்செட்

நன்கொடை: 56 கோடி!

இந்தியாவில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் தானம் பண்ண ஒரு செல்வந்தர் எண்ணினால் அவர் ஐம்பத்தாறு கோடி ரூபாய் வழங்கத் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு இப்படிச் செய்ய யாராவது முன்வருவார்களா ?

ஆனால் இன்றையத் தேதியில் 56 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தை நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் தானமாக வழங்க ஒருவரால் முடிந்தது !

விஜயநகர் தர்பாரில் முப்பத்திரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த உயர் அதிகாரி அவர். கோயில்கள் நிர்வாகம், நீர்வளத் துறை ஆகிய இரண்டையும் கவனித்து வந்தார். இவர் பெயர் -- ஒரு 'தம்' பிடித்துக் கொண்டு படியுங்கள்: காஞ்சி கோடி கன்னிகா தானம் ஸ்ரீ லக்ஷ்மிகுமார தாதா தேசிக ஆசார்யா.

பதினொரு மனைவியரிடம் ஐந்து பிள்ளைகளைப் பெற்ற இவர் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தில் தமது பிறந்த நாளன்று மனைவியருள் ஒருத்தியுடன் சேர்ந்து தம்மைத் தங்கத்தால் நிறுத்துக் கொள்வார். அந்தத் தங்கத்தை அப்படியே தானம் பண்ணி விடுவார். ஏழைகளின் கல்யாணங்கள் நடக்கவும் திருப்பதியில் ஏழு மலைகள்மீது ஏற இருபத்து நாலாயிரம் படிகள் கட்டவும் காஞ்சி வரதராஜர் கோயிலில் நூற்றுக்கால் மண்டபம் எழவும் இந்தச் செல்வம் பயன்பட்டது. வேறு பல கைங்கரியங்களும் நடந்தன.

நவம்பர் 18ந் தேதி இவரது நானூறாவது பிறந்த தினம். --- ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி

□□□

தொட்டில் பழக்கம்...

மேற்கு ஜெர்மனிக்குப் போன ஓர் இந்திய மாணவர் சாலையில் ஒரு பஸ் டிக்கெட்டை எறிந்தார். ஒரு போலீஸ்காரர் அந்த மாணவருக்கு ஒரு மார்க் அபராதம் விதித்தார். அபராதம் செலுத்திய பிறகு கொடுக்கப்பட்ட ரசீதைக் கசுட்டிச் சாலையில் போட்டாராம் அந்த மாணவர்!

இந்த நிகழ்ச்சியைச் சொன்னவர் இந்திரா காந்தி.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் - பாபு

மாம் ஒரு கட்டுரையில் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார்.

திரு சுந்தரம் ஐம்பதாண்டுகளுக்கு முன்பாக மைசூர் ராஜ்யம் முழுவதிலும் திரு கே. வி. ஐயர் என்ற உடற்பயிற்சி மேதாவியுடன் சுற்றுப் பயணம் செய்தார். ஆங்காங்கே உடற் பயிற்சிகளும், யோகாசனங்களும், மற்றும் சொற்பொழிவுகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன.

1927ல் வடநாட்டிலிருந்து வந்திருந்த ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்த பிரம்மசாரி ராமச்சந்திராவைக் காண நேர்ந்தது. கவியோகி சுத்தானந்த பாரதியாரும் அப்போது யோகாசன மேன்மையைப் பற்றி அறிந்து பிரசாரம் செய்து வந்தார்.

1936ல் எஸ். எஸ். வாசனும், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களும் சேர்ந்து, 'ஆனந்த விகடனி'ல் யோகாசனங்களைப் பற்றிய கட்டுரை வெளியிட விரும்பினார்கள். வாசன் பிரம்மசாரி ராமச்சந்திராவுடன் தொடர்பு கொண்டு யோகாசனங்களை எழுதச் சொல்ல, ராமச்சந்திரா அந்தப் பெரும் தொண்டைச் சுந்தரத்தைச் செய்யச் சொன்னார்.

'ஆனந்த விகடனி'ல் யோகாசனப் பயிற்சிக் கட்டுரை தொடர்ந்து வெளிவந்தவுடன் தமிழ்நாடெங்கும் பிரபலமாகத் தொடங்கி விட்டது. அதைத் தொடர்ந்து மேலும் பல தொடர் கட்டுரைகள் – 'வலிவும் வனப்பும்' 'ஆரோக்கிய உணவு' முதலியவை வெளி வந்தன.

கல்கி அவர்கள் எழுதிய கடிதமொன்றில், ''தமிழ் எழுத்தாளர் உலகில் நீங்களும் ஓர் இடம் பெற்று விட்டீர்கள். தமிழ் வாசகர்களுக்காக நூதன முறையில் தெளிவாக எழுதும் பாணியை மேற்கொண்டு விட்டீர்கள். உங்கள் எழுத்துப் பணிக்கு என் வாழ்த்துக்கள்'' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

''உங்களிடம் நேரில் யோகாசனம் பயின்றவர்களில் குறிப்பிடத் தக்க சிலரைக் கூறுங்கள்.''

''வி. என். குமாரசாமி என்னிடம்தான் யோகாசனங்கள் கற்றுக் கொண்டார். குவாலியர் மகாராஜா, லெப்டினென்ட் கவர்னர் சின்ஹா ஆகியோரும் என் மாணவர்களே... இந்தியர்களைத் தவிர எத்தனையோ வெளிநாட்டவர்கள்....''

1939 முதல் 'யோகா பப்ளிஷிங் ஹவுஸ்' என்னும் பிரசுர நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். யோகாசனம், உடற் பயிற்சி, சூரிய நமஸ்காரம், சாந்தி யோகம், பக்திப் பாடல்கள் முதலியவற்றைப் பற்றிய நூல்களைப் பிரசுரித்து வருகிறார்.

''இன்றைய மாணவர்களே வருங்காலத் தலைவர்கள். நாட்டை ஆளப் போகிறவர்கள் அல்லவா? பள்ளிக்கூடங்களில் யோகாசனப் பயிற்சியைக் கட்டாயமாகச் செய்ய நீங்கள் ஏதேனும் உயர்மட்ட அளவில் முயற்சி செய்ததுண்டா?''

''உண்டு! இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை புரசைவாக்கம், முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் யோகாசனச் சொற்பொழிவாற்ற வந்தேன். அப்போது கல்வி அமைச்சராயிருந்த திரு தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அப்போது இதே கருத்தை வற்புறுத்தினேன். திரு அவினாசிலிங்கம் செட்டியார் யோகாசனத்தை மாணவர்களுக்குப் பயிலுவிக்கும் முறையான திட்டத்தை அரசாங்கத்துக்கு அனுப்பும்படி கோரினார். அந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நானும் முயன்றேன். உடற்பயிற்சிக் கல்வியைப் போல் ஆசனம், பிராணாயாமம் பற்றி மாணவர்களுக்குப் பயிலுவிக்கும் முறையான திட்டத்தைத் தயாரித்துச் சென்னை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தேன். அப்புறம் இன்று வரையில் அந்தத் திட்டத்தைப் பற்றிப் பேச்சு மூச்சு கிடையாது'' என்கிறார் திரு சுந்தரம்.

பேட்டியை முடித்து எழுந்திருக்கையில் அன்புடன் கையைப் பிடித்துக் குலுக்கினார். இரும்புக் கரங்கள்தாம் போங்கள்!

— ஏ. சுவாமிநாதன்

வஸந்த காலம்

நாடக விமரிசனம்

சினிமா நடிகர் கே. கண்ணன் கணேஷ் தியேட்டர்ஸ் என்ற பெயரில் ஒரு நாடகக் குழு ஆரம்பித்து நடத்தி வருகிறார். 'வஸந்த காலம்' அக்குழுவினரின் புதிய நாடகம். இதில், சினிமாவில் வில்லனாகவே பார்த்துப் பழக்கப்பட்ட கே. கண்ணனைக் கதாநாயகனாக, நல்லவனாகப் பார்க்கிறோம்.

ஒரு நடிகனின் நடிப்பு பாராட்டும்படி அமைய வேண்டுமானால், நாடகம் அழுத்தமான மூலக் கதையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். கதையில் அழுத்தம் இல்லையென்றால், நாடகப் பாத்திரங்களுக்கு அழுத்தம் ஏற்படுவது சிரமம். சிக்கலான உணர்ச்சிகளைக் கொண்ட பாத்திரமாயிருந்தால்தான் அதை ஏற்கும் நடிகனுக்கு உணர்ச்சிகளைக் கொட்டி நடிக்க வாய்ப்பு இருக்கும்.

''வசந்த கால''த்தில் கதாநாயகனாக நடித்தும் கண்ணனுக்கு அதிக வாய்ப்பில்லை. காரணம் அது ஒரு 'லைட் தீம்'. ஸீரியஸ் ரோலாயிருந்தால்தான் நடிப்பில் திறமையைக் காட்ட முடியும். ஆனால், இதிலும் கண்ணன் நன்றாகவே நடித்திருக்கிறார். ஆயுர்வேத டாக்டர் அண்ணாசாமியின் மகள் மாலதியைச் சந்தித்துப் பேசியபோது அவள் தகப்பனாருக்குப் பயந்து பீரோவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டது. அவரிடம் கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது அண்ணாசாமியின் மதிப்பில் உயருவதற்கு முயன்றது. ஆயுர்வேத அகராதியைக் கையில் வைத்துக் கொண்டு உருப் போட்டது. மாலதியின் கேள்விகளுக்குப் பதில் சொன்னது எல்லாமே ஒரே தமாஷாயிருந்தது. ஹாஸ்ய நாடகத்துக் கேற்ப அவர் நடிப்பும் ஹாஸ்யமாயிருந்தது. நடிப்பில் அலுப்பு ஏற்படாமல் சிரத்தையோடு நடித்து, சுவாரசியமாக நாடகம் நடக்கக் கண்ணன் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி மெச்சத் தகுந்தது. சுவையில்லாத ஆயுர்வேத அகராதியை வைத்துக் கொண்டு நாடகத்துக்குச் சுவையூட்டியிருப்பது தமிழ் நாடக மேடைக்கே புதுமையானது!

ஆனால், கதாநாயகன் சங்கரின் தகப்பனார் வைத்தியலிங்கத்தை 'வயிற்றுவலி வைத்தியலிங்க'மாகக் காட்டி நோயின் கொடுமையை வைத்து நகைச்சுவைக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தியிருக்க வேண்டாம். வைத்தியலிங்கமாக வரும் ஜெகதீஷ் தத்ரூபமாக வயிற்றுவலியால் துடிக்கிறார். நல்ல நடிப்பு. அதைப் பார்த்துச் சிரிக்கத் தோன்றவில்லையே ! நமக்கும் துடிக்கத் தோன்றுகிறதே! வயிற்றுவலியால் துடிக்கும் தகப்பனாரைக் கவனிக்காமல் சங்கர் தன் காதல் விவகாரங்களைத் தீவிரமாகக் கவனித்துக் கொண்டிருப்பது என்ன நியாயமோ !

சங்கரின் நண்பன் கோபால், சினிமாப் பத்திரிகை ஆசிரியர் சபாபதி, ஆயுர்வேத டாக்டர் அண்ணாசாமி எல்லோரும் நகைச்சுவையை அள்ளி வழங்கினர்.

ஆயுர்வேத டாக்டர் அண்ணாசாமியாக வந்த ராமசாமி மிக இயல்பாக நடித்தார். அலட்டிக் கொள்ளாத அவர் நடிப்பு பாராட்டும்படியிருந்தது.


கதாநாயகி மாலதியாகத் தோன்றிய குமாரி ரஞ்சனா நாடக மேடைக்கேற்ற கச்சிதமும் கவர்ச்சியும் கொண்ட நல்ல தோற்றமுள்ளவர். துடிப்பான பேச்சுடன் ஒயிலான பாவங்களும் சேர்ந்து அவர் நடிப்பில் மெருகேற்றியிருக்கின்றன.

கவுன்சிலர் கனகசபையாக வந்த மணக்கால் மணி மிக நன்றாய் நடித்தார். நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுத் திறமையாகச் செய்திருக்கிறார்.

கதை, வசனம் — கே. கே. ராமன் எழுதியிருக்கிறார். வசனம் நகைச்சுவைக்குப் பெரிதும் உதவியாயிருந்தது.

கதையில் இன்னும் ஏதாவது ஓர் அழுத்தமான நிகழ்ச்சியோ, சஸ்பென்ஸோ, திடுக்கிடும் சம்பவமோ இருந்திருந்தால் ''வஸந்த கால''த்தைப் பல முறை வரவேற்கலாம்.

— காந்தன்



அத்தியாயம் எழுபத்திரண்டு

தியாகப் போட்டி

மழவர் குலத்தில் உதித்தவரும் சிவ ஞான கண்டராதித்த சோழரின் வாழ்க்கைத் துணைவியுமான செம்பியன்மா தேவியை, 'ஸ்ரீ மதுராந்தகத் தேவரான உத்தம சோழ தேவரைத் திரு வயிறு வாய்த்த உடைய பிராட்டியார்' என்று அவர் காலத்திய கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சாதாரணமாகத் தாய்மார்கள் தம் குழந்தைகளைப் பத்து மாதம் வயிற்றில் வைத்துச் சுமந்தே பெறுவார்கள். சில தாய்மார்கள் வேறு பெண்மணிகளின் வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தங்கள் குழந்தைகளைப் போலவே வளர்ப்பதும் உண்டு.

செம்பியன்மா தேவி வேறொரு பிள்ளையை வெகு காலமாகத் தம் பிள்ளையென வளர்த்து வந்த காரணத்தால், அந்த உண்மையை அறிந்திருந்த ஒருவர் மேற்கண்டவாறு 'உத்தம சோழரைத் திரு வயிறு வாய்த்தவர்' என்று கல்வெட்டிலே குறிப்பிட்டார் போலும்!

* * *

உத்தம சோழர் ஐந்து பிராயத்துச் சிறுவனா யிருந்தபோதே செம்பியன் மாதேவி அவனையும் வாணி அம்மையையும் பார்க்கும்படி நேர்ந்தது. பல ஆண்டுகள் கழித்து வாணி அம்மையைச் சந்தித்ததும் அவளுடைய க்ஷேமலாபங்களைப் பற்றிச் செம்பியன் மாதேவி அன்புடன் விசாரித்தார். வாணியின் குழந்தை என்று எண்ணிய சேந்தன் அமுதனிடம் இயற்கையாகவே அம்மூதாட்டிக்கு அன்பு சுரந்தது. குழந்தையைப் பற்றி விசாரித்தபோது வாணி அம்மையின் முகத்தில் திகைப்பும் அச்சமும் உண்டானதைக் கண்டார். முதலில் அதற்கு வேறு காரணங்கள் இருக்கக் கூடும் என்று எண்ணினார். வாணி பேசத் தெரியாதவளாக இருந்தபடியால் திட்டமாக அவளிடமிருந்து ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் வாணி அம்மை ஒரு காலத்தில் தமக்குச் செய்த உதவியைக் கருதியும், அவளுடைய குழந்தையிடம் ஏற்பட்ட பாசம் காரணமாகவும், தாயும்பிள்ளையும் கவலையின்றி வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். தஞ்சை நகருக்கு அருகில் குடியிருந்து தளிக்குளத்தார் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்து வருவதற்காக மானியங்களும் அளித்தார்.

சேந்தன் அமுதன் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிவ பக்தியிலும் சிறந்து வளர்ந்து வந்தான். அன்னைக்கு உதவியாகப் புஷ்பத் திருப்பணி செய்வதிலும் மிக்க ஊக்கம் காட்டி வந்தான். இதைக் காணக் காணச் செம்பியன் மாதேவிக்கு அவனிடம் இயற்கையாகச் சுரந்த அன்பு வளர்ந்து வந்தது. ஒரு நாள் அவருடைய மனத்தில் விசித்திரமான ஐயம் ஒன்று தோன்றி



யது. அது அவருக்கு ஒரே சமயத்தில் இன்பத்தையும் வேதனையையும் இனந் தெரியாத பீதியையும் உண்டாக்கியது. எத்தனையோ விதமாக அந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ள முயன்றும் இயலவில்லை. பிறந்து சில தினங்களில் இறந்து போன தம் குழந்தையைப் பற்றிய நினைவு அடிக்கடி எழுந்த வண்ணம் இருந்தபடியால் அவர் உள்ளம் அமைதி கொள்ளவில்லை.

கடைசியாக ஒரு நாள் வாணி அம்மையிடம் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று தீர்மானித்



தார். வாணியைத் தனியாக அழைத்து வரும்படி செய்தார். இறந்துபோன தம் குழந்தையை வாணியிடம் கொடுத்து ஒருவரும் அறியாமல் புதைத்து விட்டு வரச் சொன்னார் அல்லவா? அவ்வாறு புதைத்த இடத்தில் அதன் ஞாபகார்த்தமாகப் பள்ளிப் படைக் கோயில் ஒன்று எழுப்ப வேண்டும் என்று சொல்லி, புதைத்த இடத்தைச் சொல்லும்படி கேட்டார். இந்தப் பழைய நிகழ்ச்சியைப் பற்றிய ஞாபகமே அவருக்குத் துன்பம் அளித்தது. செவிடும் ஊமையுமான வாணியிடம் இதை

யெல்லாம் சமிக்ஞை பாஷையினுல் கேட்க வேண்டியதாக இருந்தது. அது அவருக்கு மேலும் சொல்ல முடியாத வேதனையை அளித்தது.

அவருடைய கேள்விகளுக்கு விடை கூற வாணி மிகவும் தயங்கினுள். கடைசியாக, பேரரசியின் கட்டளையை மீற முடியாமல் உண்மையைச் சொல்லி விட்டாள். புதைப்பதற்காகத் தன்னிடம் கொடுக்கப்பட்ட குழந்தை உண்மையில் இறக்கவில்லை என்பதையும், அதைத் தனக்குக் கருத்திருமன் என்பவன் எடுத்துக் காட்டியதையும், பின்னர் அரசியிடம் திரும்பி வந்தால் என்ன நேரிடுமோ என்று அஞ்சிக் கருத்திருமனுடன் திருமறைக்காடு சென்றதையும், சில காலத்துக்கெல்லாம் கருத்திருமன் தன்னை விட்டு விட்டுப் போய்விட்டபடியால் தான் திரும்பப் பழையாறைக்கு வந்ததையும் விவரமாகக் கூறினுள்.

சேந்தன் அமுதன் உண்மையிலேயே தம் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைதான் என்பதை அறிந்ததும் செம்பியன் மாதேவி ஒருபுறத்தில் எல்லையற்ற ஆனந்தம் அடைந்தார். அவர் உடம்பெல்லாம் சிலிர்த்துப் பூரித்தது. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது. ''மகனே!'' என்று கூவிச் சேந்தன் அமுதனைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. ஆயினும், அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார். அந்த உண்மை வெளியானுல், அதனுல் ஏற்படக் கூடிய குழப்பங்களை எண்ணி ஒருபுறம் பீதி கொண்டார். 'உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இறைவனுடைய குழந்தைகளே' என்று கருதக் கூடிய உயர் ஞான பரிபக்குவத்தை அவருடைய உள்ளம் அடைந்திருந்தபடியால், பெற்ற பிள்ளையிடம் தாய்க்கு ஏற்படக் கூடிய பாசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவரால் முடிந்தது. ''அரண்மனையில் வளர்ந்தால் என்ன? குடிசையில் வளர்ந்தால் என்ன? இந்த நிலையில்லா மனித வாழ்வின் சுக போகங்கள் எல்லாம், வெறும் மாயை அல்லவா? உலக வாழ்வை நீத்த பிறகு அடைய வேண்டிய கதி அல்லவா முக்கியமானது? என் பதி அரச போகங்களை வெறுத்துச் சிவ பெருமானுடைய இணையடி நிழலில் இளைத்து வாழ்க்கை நடத்தியபடியால் அவருக்குப் பிறந்த பிள்ளை இவ்விதம் குடிசையில் வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றான் போலும்!'' என்றெல்லாம் அடிக்கடி எண்ணி மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்.

ஆயினும் சேந்தன் அமுதன் தமது வயிற்றில் பிறந்த மகன் என்று அறிந்ததினுல் தாம் வளர்த்த குமாரனுகிய மதுராந்தகனைச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கக் கூடாது என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் வலுப்பட்டது. முன்னமேயே கண்டராதித்தரிடம் தாம் செய்த குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டு மன்னிப்புப் பெற்றிருந்தார். ''உன் வயிற்றில் பிறந்த குழந்தை யானுல் என்ன? அநாதைப் பெண் மணிக்குப் பிறந்த குழந்தையாயிருந்தால் என்ன? இறைவனுடைய திருக் கண்ணுேட்டத்தில் இருவரும் சமமானவர்கள்தான். ஆகையால் மதுராந்தகனை உன் மகனைப் போலவே வளர்த்து வா! ஆனுல் சோழ சிங்காதனத்தில் அவன் ஏற வேண்டும் என்று ஆசைப் படாதே! அதற்கு இணங்கவும் இணங்காதே! அது நான் பிறந்த சோழ குலத்துக்குத் துரோகம் செய்ததாகும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதாயிருந்தால் நீ உண்மையை ஒப்புக்கொள்வதற்கும் தயங்காதே!'' என்று கண்டராதித்தர் தேவியிடம் சொல்லி அவ்வாறு வாக்குறுதியும் பெற்றிருந்தார். அந்த வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றி வைக்கப் பெரிய பிராட்டி செம்பியன்மாதேவி நிச்சயித்திருந்தார்.

ஆனுல் தங்களுடைய சொந்தக் குமாரன் வாணி அம்மையின் மகனுகக் குடிசையில் வளர்ந்து வருவதை அறியாமலேயே அந்த மகான் சிவபதம் அடைந்து விட்டார். இது தெரிந்திருந்தால் அவர் என்ன செய்திருப்பார்? சேந்தன் அமுதன் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை இட்டிருப்பார்? — இதைக் குறித்துச் செம்பியன் மாதேவி எவ்வளவோ முறை சிந்தனை செய்தார். ''இறைவனுடைய சித்தத்தினுல் இவ்விதம் நேர்ந்துவிட்டது. ஊமையின் மகன் அரண்மனையில் வளர வேண்டும் என்பதும் பேரரசரின் மகன் குடிசையில் வளர வேண்டும் என்பதும் இறைவனுடைய திருவுள்ளம். அதில் நாம் குறுக்கிடக் கூடாது. அதை மாற்ற முயல்வதால் பல குழப்பங்கள் விளையும். தம் வளர்ப்புக் குமாரனின் மனம் அதனுல் பெரிதும் புண்படும். அத்தகைய பாவத்தைச் செய்யக் கூடாது!'' என்று முடிவாகத் தீர்மானித்துக் கொண்டார்.

இறைவனுடைய திருவருளில் அவர் கொண்டிருந்த இணையில்லாத நம்பிக்கையின் துணையினுலேதான் மேற்

கூறிய தீர்மானத்தை அவர் காரியத்தில் நிறைவேற்றுவதும் சாத்தியம் ஆயிற்று.

ஆயினும் அடிக்கடி சேந்தன் அமுதனைப் பற்றி அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவனுடைய நினைவு வரும்போதெல்லாம் இயற்கையான தாய்ப் பாசம் அவருடைய உள்ளத்தில் பொங்கிப் பெருகாமலும் இருப்பதில்லை. இந்தப் போராட்டமானது அவருடைய இதய ஆழத்திலே பல ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

நெடுங்காலமாக அணை போட்டுத் தடுத்து வைக்கப் பட்டிருந்த வெள்ளம் திடீரென்று ஒரு நாள் அணையை உடைத்துக்கொண்டு கிளம்புவது உண்டு அல்லவா? அப்போது வெள்ளம் எவ்வளவு சக்தியுடனும் வேகத்துடனும் பாய்ந்து செல்லும் என்பதைப் பலர் பார்த்து அநுபவித்திருப்பார்கள்.


செம்பியன் மாதேவியின் உள்ளத்தில் அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாய்ப் பாசமாகிய உணர்ச்சி வெள்ளமும் இப்பொழுது கரையை உடைத்துக் கொண்டு பாய்ந்தது.

முதன் மந்திரி அநிருத்தர் ''தேவியின் திருவயிற்றில் உதித்த தேவர்'' என்று குறிப்பிட்டதுதான் அவ்வாறு செம்பியன் மாதேவி உள்ளத்தின் அணை உடைவதற்குக் காரணமாயிற்று.

அந்த வார்த்தைகளை அநிருத்தர் கூறியவுடன் செம்பியன்மாதேவி பத்து மாத காலம் குழந்தையைத் தம் வயிற்றில் வைத்து வளர்த்த அநுபவம் அவ்வளவையும் ஒரு விநாடிப் பொழுதில் மறுபடியும் அநுபவித்தார். தம்மை மறந்து, தாம் செய்து கொண்டிருந்த சங்கல்பத்தை மறந்து, சேந்தன் அமுதனை ''என் மகனே'' என்று அழைக்கவும், அவனைத் தழுவிக் கொண்டு கண்ணீர் வெள்ளம் பெருக்கவும் நேர்ந்தது.

இவ்விதம் செம்பியன் மாதேவி உணர்ச்சிப் பெருக்கினால் மெய்ம் மறந்த நிலையில் இருந்த போதிலும், அமுதன் கூறிய வார்த்தைகள் அவருடைய மனத்தில் நன்கு பதிந்திருந்தன. ''தாயே! என்னை 'மகனே!' என்று அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் உவந்ததோ?'' என்று கூறினான் அல்லவா? அவ்வார்த்தைகளின் கருத்து என்ன? அவனுக்கு அவனைப் பெற்ற அன்னை யார் என்பது முன்னமேயே தெரியுமா? தெரிந்தும் இத்தனை காலம் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தானா?

சற்று நேரம் வார்த்தை சொல்ல முடியாத பரவச நிலையில் இருந்த பிறகு,



அவர்: அப்பப்பா! இந்த ஏ. ஸி. தியேட்டர் என்ன குளிரு! சீட்டெல்லாம் என்ன ஜில்லிப்பு!

பையன்: அப்பாடி ஒண்ணும் சீட்டு ஜில்லுன்னு இல்லே. நீங்க நான் வாங்கின ஐஸ்கிரீம் மேலே உட்கார்ந்திண்டிருக்கேள்!

செம்பியன் மாதேவி தம் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''மகனே! உனக்கு முன்னமே தெரியுமா, நான் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற பாவி என்று? தெரிந்து என் பேரில் கோபம் கொண்டிருந்தாயா? அதனால் என்னிடம் அதைப் பற்றிக் கேளாமல் இருந்தாயா?'' என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

அப்போது சேந்தன் அமுதன் கடல் மடை திறந்தது போல் பின்வருமாறு உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளைப் பொழிந்து தள்ளினான்:

''தாயே! நான் தங்கள் வயிற்றில் பிறந்த பாக்கியசாலி என்பதைச் சில காலமாக அறிந்திருந்தேன். உலகம் போற்றும் புண்ணியவதியாகிய தாங்கள் ஒரு நாள் என்னை 'மகனே!' என்று அழைக்க வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தேன். தங்களுடைய மகன் என்ற சொல்லுக்குத் தகுதியாவதற்குப் பிரயத்தனம் செய்து வந்தேன். அல்லும் பகலும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தேன். தாங்களே என்னை அழைக்காவிட்டாலும் நானே தங்களிடம் வருவதாகத்தானிருந்தேன். ஆனால் இந்த இராஜ்யத்தின் உரிமை விஷயம் தீரட்டும் என்று காத்திருந்தேன். தங்களை 'அன்னை' என்று அழைக்கும் உரிமையைத்தான் நான் வேண்டினேன். இராஜ்யத்துக்கு உரியவர் யார் என்று நிச்சயமான பிறகு தங்களிடம் வந்து 'தாய்' உரிமை கோர விரும்பினேன். அம்மணி! தங்களுடைய மனம் கோணாமல் நடப்பதற்காக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்குழலியைத்

தியாகம் செய்யவும் சித்தமாயிருந்தேன். நல்ல வேளையாக அவளும் தன்னுடைய மனத்தை மாற்றிக் கொண்டாள். தாயே! மூன்று நாளைக்கு முன்பு என் உயிருக்குப் பெரும் அபாயம் வந்தது. தங்களிடம் நானும் பூங்குழலியும் வணங்கி ஆசி பெற்றுக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அபாயம் வந்தது. அந்த அபாயத்திலிருந்து உத்தம நண்பன் ஒருவன் என்னைக் காப்பாற்றினான். அதைப் பற்றி நான் அப்போது அவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை. அவனிடம் அவ்வளவாக நன்றி செலுத்தவும் இல்லை. இப்போது அவனுக்கு நான் எவ்வளவு நன்றிக் கடன் பட்டவன் என்பதை உணர்கிறேன். தாங்கள் என்னை 'மகனே' என்று தங்கள் திருவாயினால் அழைத்தீர்கள் அல்லவா? இந்த நாளைக் காண நான் உயிரோடு இருந்தேன் அல்லவா? இதுவே போதும்! நான் பாக்கியசாலி ஆகிவிட்டேன். இனி ஒன்றும் எனக்கு வேண்டாம். இங்கு இப்போது நடந்தது இங்கு உள்ளவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கட்டும். வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். இராஜ்யத்தில் மேலும் குழப்பம் விளைய வேண்டாம்! கோடிக்கரைக்கு உடனே புறப்பட்டுப் போவதற்கு எனக்கும் பூங்குழலிக்கும் விடை கொடுத்து அனுப்புங்கள்!''

இந்த வார்த்தைகள் பெரியபிராட்டி செம்பியன் மாதேவியின் உள்ளத்தில் உண்டாக்கிய உணர்ச்சிப் புயலைச் சொற்களினால் விவரிக்க முடியாது.

விம்மலுடனும் கண்ணீருடனும் கலந்த மெல்லிய குரலில், ''குழந்தாய்! நீயே என் உத்தமப் புதல்வன்! நீயே தெய்வாம்சம் பொருந்திய என் கணவரின் உத்தமக்குமாரன்!'' என்று கூறினார்.

இவ்வளவு நேரமும் சுந்தர சோழர், சின்னப் பழுவேட்டரையர், இளைய பிராட்டி குந்தவை தேவி ஆகியவர்கள் பிரமித்துப் போயிருந்தார்கள். அங்கே வெளியான இரகசியமும், அதனால் விளையக் கூடிய பலாபலன்களும் அவர்களுடைய உள்ளங்களில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியன.

அவர்களில் குந்தவைதான் முதலில் பேசும் சக்தி பெற்றாள். ''தந்தையே! பெரிய பிராட்டியார் மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக் கூடாது என்று பிடிவாதம் பிடித்ததன் காரணம் இப்பொழுதுதான் தெரிகிறது!'' என்றாள்.

சுந்தர சோழரும் அப்போது பிரமிப்பும் திகைப்பும் நீங்கி, ''ஆமாம், குமாரி! ஆனால் அந்தக் காரணம் இப்போது நீங்கி விட்டது. என் பெரிய அன்னையின் திருவயிற்றில் உதித்த உத்தமப் புதல்வனுக்கு முடிசூட்டுவதில் இனிமேல் அவருக்கு ஆட்சேபம் இருக்க முடியாது அல்லவா?'' என்றார்.

செம்பியன்மா தேவி சிறிது பரபரப்புடன் சுந்தர சோழரைப் பார்த்து, ''சக்கரவர்த்தி! என் குமாரன் சற்று முன் கூறிய வார்த்தைகளைக் கேட்கவில்லையா? இந்தச் செய்தி இங்கே உள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியவே வேண்டாம்! என் மகன் இராஜ்ய உரிமை கோரவில்லை. அதைத் தங்கள் முன்னால் அவன் வாயினாலேயே தெரிவித்து விட்டானே!'' என்றார்.

''ஆம். பிரபு! இந்தச் சோழ இராஜ்யத்தில் ஏற்கனவே உள்ள சிக்கல்கள் போதும்! என்னால் வேறு புதிய சிக்கல் உண்டாக வேண்டாம். எனக்கு விடை கொடுங்கள்! என்னையும் என்னை மணந்து கொள்ள உவந்த பூங்குழலியையும் ஆசிர்வதித்து அனுப்புங்கள்!... பூங்குழலி! இங்கே வா!'' என்றான் சேந்தன்அமுதன்.

வாசற்படியின் அருகில் நின்று கொண்டிருந்த பூங்குழலி உள்ளே வந்தாள். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் முதலில் செம்பியன் மாதேவிக்கு நமஸ்காரம் செய்தார்கள். பின்னர், சக்கரவர்த்தியை வணங்கினார்கள்.

எழுந்து நின்றதும் சேந்தன் அமுதன் ''பிரபு! நாங்கள் உடனே கோடிக்கரை போக விடை கொடுங்கள்! தாயே! விடை கொடுங்கள்!'' என்றான்.

செம்பியன்மா தேவி சக்கரவர்த்தியைப் பார்த்து, ''ஆம், ஐயா! இவர்களுக்கு விடைகொடுத்து அனுப்புவோம். எனக்கு விருப்பமானபோது நான் கோடிக்கரை சென்று இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றார்.

சுந்தர சோழர் ''அது ஒருநாளும் இயலாத காரியம்! நான் விடை கொடுக்க மாட்டேன்!'' என்றார்.

முதன்மந்திரி குறுக்கிட்டு, ''சக்கரவர்த்தி! எதுவும் இப்போது தீர்மானம் செய்ய வேண்டாம். இன்னும் சில தினங்கள் இவர்கள் என் இல்லத்திலேயே இருக்கட்டும். பெரிய பிராட்டியின் மகன் கிடைத்துவிட்டார். ஆனால் சின்னப் பழுவேட்டரையரின் மருகர் கிடைக்கவில்லை. அவரைப் பற்றிய செய்தி வரும் வரையில் இவர்கள் இங்கு இருக்கட்டும். அதுவரை இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இந்த இரகசியம் தெரியவேண்டாம்'' என்றார்.

''அருள்மொழியிடமாவது அவசியம் சொல்லித்தான் ஆக வேண்டும்!'' என்றாள் இளையபிராட்டி குந்தவை தேவி.


NEW!
SUPER
Surf
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர்
ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும்.
காண்போர் பொறுமைப்படும் கற்பனை கடந்த
வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த
ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர்ஸர்ஃப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



பேருதவி புரிகிறது பிரஸ்டிஜ் Prestige

உங்களைப் போன்ற பெண்கள் அலுவலகம் செல்வதால் வீட்டு வேலைகள் தடைப்படாமலிருக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் (ப்ரீத் என்பது இதன் ஏற்றுமதிப் பெயர்). ஆகவே உங்களால் இரு இடங்களிலும் சிரமமின்றி சிறப்பாகப் பணியாற்ற முடிகிறது.


நேரத்தை மிச்சப்படுத்துகிறது பிரஸ்டிஜ் (அல்லது ப்ரீத்),எப்படியெனில் எப்பொழுதையும் விட கால்பங்கு நேரத்திலேயே சமையல் தயார்!...அதுவும் பலவகைப் பதார்த்தங்களுடன்!'

எரிபொருள் சிக்கனத்துடன், சமையல் அறையும் துப்புரவாக இருக்க உதவும்,பிரிஸ்டிஜ்/ப்ரீத். ஆகவே திறமையாக செயல்பட வழி செய்கிறது. பிரஸ்டிஜ் அல்லது ப்ரீத் குக்கரில் தயாரான உணவுகளில் ஊட்டச்சத்தும் மிகுந்துள்ளது.

பிரஸ்டிஜ், ப்ரீத் இரண்டுமே வாழ்நாள் பூராவும் உழைக்க உத்தரவாதமுள்ளவை. மேலும் நாடு பூராவிலும் விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவை அளிப்பதும் இது ஒன்றே. உதிரி உறுப்புகள் எங்கும் கிடைக்கின்றன.

பரிவுடன் பேருதவியளிப்பது—பிரஸ்டிஜ்/ப்ரீத்.

பிரஸ்டிஜ் ஒன்று பெறுங்கள்—வேலைக்குச் செல்லும் பெண்மணியாகவும் வீட்டைப்பேணும் தலைவியாகவும் விளங்குங்கள்.



டி. டி. பிரைவேட் லிமிடெட், பெங்களூர்-16

TTP-6175

''வேண்டாம், வேண்டாம்! அது மட்டும் செய்ய வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டான் சேந்தன் அமுதன்.

கடைசியாகச் சக்கரவர்த்தி, ''தேவி! எது எப்படியானாலும் ஆகட்டும், இத்தனை தினங்கள் கழித்து இன்றைக்குத் தங்கள் திருவயிற்றில் உதித்த மகன் உங்களிடம் வந்திருக்கிறான். உங்களை உடனே பிரிப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். சில தினங்களாவது இங்கே நீங்கள் சேர்ந்திருங்கள். என் அரண்மனையிலோ, முதன் மந்திரியின் மாளிகையிலோ தங்கியிருங்கள். இராஜ்ய உரிமையைப் பற்றி முடிவான தீர்மானம் ஆன பிறகு இவர்களைக் கோடிக்கரை அனுப்புவது பற்றி யோசிக்கலாம். அதுவரையில் இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இச்செய்தி தெரிய வேண்டாம்!'' என்றார்.

அத்தியாயம் எழுபத்துமூன்று

வானதியின் திருட்டுத்தனம்

அருள்மொழிவர்மரின் மனம் பெரிதும் கலக்கம் அடைந்திருந்தது. இராஜ்ய உரிமை சம்பந்தமாகச் சோழ நாட்டில் எழுந்த கொந்தளிப்பின்வேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும். அவர் மக்களை அமைதிப்படுத்துவதற்காகப் போன இடங்களிலெல்லாம் மக்களின் ஆவேசந்தான் அதிகமாயிற்று. ''பொன்னியின் செல்வரே எங்கள் மன்னர்!'' ''அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும்!'' என்பவை போன்ற கோஷங்கள் எங்கெங்கும் எழுந்து நாலாபுறமும் முழுங்கி எதிரொலி செய்தன.

இவற்றுடன் போட்டி விட்டுக் கொண்டு, ''பழுங்குடி மக்களான பழுவேட்டரையர்கள் வாழ்க!'' ''கொடுங்கோலரான கொடும்பாளூர் வேளார் வீழ்க!'' என்பவை போன்ற கோஷங்களும் சிற்சில இடங்களில் கேட்கும். அத்தகைய இடங்களில் அதிக பலம் தேடலாம் என்று இளவரசர் நெருங்கிச் சென்றால், உடனே அங்குள்ளவர்களும் ''பொன்னியின் செல்வர் வாழ்க!'' என்று முழங்கத் தொடங்கினார்கள்.

''ஏன்? கோட்டைக் காவலுக்காக மாற்றி நியமிக்கப்பட்டிருந்த பழுவூர் வீரர்கள்கூடப் பொன்னியின் செல்வரைக் கண்டதும் தங்கள் பழைய கோஷங்களைக் கைவிட்டு, ''அருள்மொழிவர்மரே திருமுடி புனைய வேண்டும்!'' ''ஈழங் கொண்ட வீராதி வீரர், பொன்னியின் செல்வர் நீடூழி வாழ வேண்டும்!'' என்று முழங்கலானார்கள்.

இவ்வாறு தம்முடைய முயற்சி பொது மக்களிடையிலும் போர்வீரர்களிடத்திலும் வெற்றி பெறாமல் போனது மட்டுமின்றி, தம் கருத்துக்கு மாறான சூழ்நிலை பலப்பட்டு வருவதைக் கண்டு பொன்னியின் செல்வர் சங்கடம் அடைந்தார். சில தினங்களாக மதுராந்தகத் தேவர் காணப்படாமல் இருந்தது வேறு அவருடைய கவலையை அதிகமாக்கிற்று. இதன் பொருட்டுச் சின்னப் பழுவேட்டரையர் கொடும்பாளூர் வேளார் மீது குற்றம் கூறிக் கொண்டிருந்தது அவருக்குத் தெரிந்திருந்தது. அதற்குக் காரணம் இல்லையென்று சொல்ல முடியாது. அருள்மொழிவர்மருக்கே அதைப்பற்றிச் சிறிது சந்தேகம் இல்லாமற் போகவில்லை. தமக்குப் பட்டம் சூட்டிவிட வேண்டும் என்று கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் ஆகியவர்கள் உறுதி கொண்டிருந்தார்கள். அவர்களுடன் முதன் மந்திரி அநிருத்தரும் கலந்து சதி செய்வது போலத் தோன்றியது. இவர்கள் எல்லாரும் சேர்ந்துதான் மதுராந்தகத் தேவரை எங்கேனும் மறைத்து வைத்து விட்டார்களோ, என்னமோ? அல்லது ஒருவேளை மதுராந்தகத் தேவரின் உயிருக்கே அபாயம் விளைவித்துவிட்டார்களோ?

அவருடைய அருமைத் தமையனுரான ஆதித்த கரிகாலரின் மரணத்துக்குப் பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களுமே பொறுப்பாளிகள் என்று வேளாரும் மலையமானும் கருதினார்கள். அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதாக எண்ணிக் கொண்டு மதுராந்தகருக்கு ஏதேனும் தீங்கு செய்து விட்டார்களோ? ஆகா! இவர்களுக்கு என்ன? யோசனையின்றி ஏதோ செய்து விடுகிறார்கள். கடைசியாகப் பழி எல்லாம் தம் தலையில் அல்லவோ சார்ந்துவிடும்?

இன்றைக்குச் சோழ நாட்டு மக்கள் இவர் பெயரைக்கூறி வாழ்த்துகிறார்கள். இவரைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். பொது ஜனங்களின் மனம் இப்படியே என்றும் இருக்குமா? மக்களின் உள்ளம் அடிக்கடி சனிக்கும் இயல்பு உடையதல்லவா? இதே ஜனங்கள் நாளைக்கு இவர் பேரி

லேயே பழி கூறினாலும் கூறுவார்கள். சிங்காதனம் ஏறுவதற்காகச் சித்தப்பன் மதுராந்தகனைக் கொலை செய்வித்த பாதகன் என்று சொன்னாலும் சொல்வார்கள். ஏன்? கடம்பூர் மாளிகையில் ஆதித்த கரிகாலர் இறந்ததற்குக்கூடத் தம் பேரில் பழி சுமத்தினாலும் சுமத்துவார்கள்? — தெய்வமே! அத்தகைய பயங்கரமான பழிகளைச் சுமப்பதற்காகவா என்னைக் காவேரியில் மூழ்கிச் சாகாமல் மந்தாகினி தேவி காப்பாற்றினாள்? இன்று தெய்வமாகி யிருக்கும் அந்தப் பெண்ணரசிதான் இந்த இக்கட்டான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். வாழ்க்கையில் ஒருவன் அடையக்கூடிய அபகீர்த்திகளில் மிகக் கொடிய அபகீர்த்தி என்னைச் சாராமல் தடுத்து அருள்புரிய வேண்டும்.

ஈழநாட்டு இராஜ வம்சத்தில் நெருங்கிய உறவினர் ஒருவரை யொருவர் கொன்று விட்டுச் சிங்காதனம் ஏறிய வரலாறுகள் அருள்மொழி வர்மரின் உள்ளத்தில் பதிந்திருந்தன. ஆகையால் அம்மாதிரியான இழிவைத் தரும் அபகீர்த்தி தன்னையும் அடையலாம் என்ற எண்ணமே அவருக்குச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று.

யாரிடமாவது தன் அந்தரங்கத்தைச் சொல்லி யோசனை கேட்கலாம் என்றால், அதற்கும் தகுதி உள்ளவராக யாரும் தென்படவில்லை. அவரைச் சுற்றியுள்ளவர்கள் அனைவருமே அவருக்கு விரோதமாகச் சதி செய்கிறார்கள் என்று தோன்றியது. அவர்களில் சிலர் உண்மையாகவே அவரிடம் விரோத பாவம் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் அவருக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு பயங்கரமான பழியை அவர் தலையில் சுமத்திவிடுவதற்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில் யாரை நம்புவது, தம் அந்தரங்கத்தை யாரிடம் வெளியிட்டு ஆலோசனை கேட்பது என்று அவரால் நிர்ணயம் செய்ய முடியவில்லை.

ஏன்? அவரிடம் இணையில்லா அன்பு கொண்டவரும் அவருடைய பக்திக்கு உரியவருமான தமக்கை குந்தவைப் பிராட்டியிடங்கூட அவருக்கு நம்பிக்கை குன்றிவிட்டது. அவரும் தனக்குத் தெரியாமல் ஏதோ காரியம் செய்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஏன்! அவருடைய உயிருக்கு உயிரான வானதிகூட அல்லவா அவருக்குத் தெரியாமல் எதையோ மறைத்து வைக்கப் பார்க்கிறாள்? திருட்டுத்தனமாக எங்கேயோ போய்விட்டு மர்மமான முக பாவத்துடன் திரும்பி வருகிறாள்?....

வேறு எதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம், வானதியின் மர்மமான நடத்தையை இனிப் பொறுக்க முடியாது; — என்று அருள்மொழிவர்மர் திர்மானித்தார். வானதி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு எங்கேயோ தனியாகப் புறப்பட்டுப் போவதை அவர் கவனித்தார். உடனே அவளை அறியாமல் பின்தொடர்ந்து செல்லலானார்.

அரண்மனையின் மேல்மாடங்களின் தாழ்வாரங்களின் வழியாகச் சென்று, பின்னர் கீழ் மாடங்களில் இறங்கிச் சென்று, இருபுறமும் நெடிய சுவர்கள் அமைந்த இரகசியப் பாதை வழியாக வானதி மேலும் மேலும் சென்றாள். மதுராந்தகரை இரகசியமாகச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் இடத்துக்குத்தான் அவள் போகிறாள் என்று கருதி அருள்மொழிவர்மர் மிக்க ஆர்வத்துடனும் ஆத்திரத்துடனும் அவளைப் பின்தொடர்ந்து சென்றார்.

கடைசியாக, வானதி மற்றொரு பெரிய அரண்மனைப் பகுதியை அடைந்து அங்கு ஓர் அறைக்குள் பிரவேசித்துக் கதவைச் சாத்த முயன்றாள். அப்போது அருள்மொழிவர்மர் பாய்ந்து சென்று வானதியால் கதவைச் சாத்த முடியாமல் ஒரு காலை அறைக்குள்ளே வைத்தார்.

கதவைச் சாத்த முயன்ற அவளுடைய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, ''வானதி! உன் திருட்டுத்தனம் என்னிடம் பலிக்காது! இந்த அறையில் நீங்கள் ஒளித்து வைத்திருப்பது யார்?'' என்று கோபமாக வினவினார்.

வானதியோ புன்னகை மலர்ந்த முகத்துடன், ''ஐயா! உண்மையில் என் திருட்டுத்தனம் பலித்துவிட்டது! நான் அழைத்திருந்தால் தாங்கள் வந்திருக்க மாட்டீர்கள். உள்ளே வந்து இங்கு இருப்பது யார் என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

மதுராந்தகத் தேவரை எதிர்பார்த்துச் சென்ற அருள்மொழி வர்மர், அங்கே வல்லவரையன் வந்தியத்தேவன் கட்டிலில் படுத்திருப்பது கண்டு வியப்பும் உவகையும் அடைந்தார்.

அவரைப் பார்த்த வந்தியத்தேவன் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து, ''ஐயா! வாருங்கள்! இரண்டு நாளாகத் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் பெண்களின் சிறையிலிருந்து என்னை எப்படியாவது விடுதலை செய்யுங்கள்!'' என்றான்.

பொன்னியின் செல்வர் விரைந்து சென்று வந்தியத் தேவன் அருகில்

அமர்ந்து, ''நண்பா! இது என்ன? இங்கு எப்படி வந்தாய்? பாதாளச் சிறையிலிருந்து தப்பியவன் இந்தப் பெண்களின் சிறையில் எப்படி அகப்பட்டுக் கொண்டாய்? இத்தனை நேரம் நீ ஈழத்தில் இருப்பாய் என்று அல்லவோ நினைத்தேன்? இன்னும் சில நாளைக்கெல்லாம் நானும் அங்கு வந்து உன்னுடனே சேர்ந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேனே?'' என்றார்.

''ஆம், இளவரசே! இவ்வளவு நேரம் நான் ஈழநாட்டில் இருக்கவேண்டியவன் தான்! அங்கே பாண்டிய வம்சத்தாரின் மணிமுடியையும் அவர்களுக்கு இந்திரன் தந்த இரத்தின ஹாரத்தையும் தேடிக் கொண்டிருக்க வேண்டியவன். சைவப் பைத்தியமான சேந்தன் அமுதனை வைத்தியர் மகன் கொல்லாமல் தடுக்க முயன்று இந்தத் துர்க்கதிக்கு உள்ளானேன். பினாகபாணியின் ஈட்டி என்மேல் பாய்ந்ததும் நினைவிழந்து விழுந்தேன். கண் விழித்துப் பார்த்ததும் இங்கே இருக்கக் கண்டேன். இந்தப் பெண்மணிகளின் சிறைக்கு எப்படி வந்து சேர்ந்தேன் என்பது தெரியாது. கருணை கூர்ந்து நான் இங்கிருந்து தப்பிச் செல்வதற்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால், தங்கள் அருமைச் சகோதரரும் என் அருமைத் தலைவருமான ஆதித்த கரிகாலரைக் கொன்றதாக என் பேரில் வீண் பழியைச் சுமத்திவிடுவார்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

வானதி குறுக்கிட்டு, ''ஐயா! இவர் கூறுவது தவறு. இவர் தப்பி ஓடிப் போனால்தான் அத்தகைய பழி இவர் மீது ஏற்படும். உண்மை வெளியாகும் வரையில் இவர் இங்கேயே இரகசியமாக இருக்க வேண்டும் என்பது தங்கள் திருத்தமக்கையின் விருப்பம்!'' என்றாள்.

''இவள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது. நீ தப்பி ஓட முயன்றால்தான் அந்தப் பழி உனக்கு ஏற்படும். என்னையும் அது பிடிக்கலாம். அதைக் காட்டிலும் உண்மையில் நடந்ததை உலகம் அறிய நிரூபிப்பதுதான் நல்லது. முதலில் என்னிடம் சொல்லு ! கடம்பூரில் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லு !'' என்றார் பொன்னியின் செல்வர்.

வந்தியத்தேவனும் தான் அறிந்தபடி நடந்ததையெல்லாம் கூறினான்.

எல்லாவற்றையும் கேட்ட பின்னரும் ஆதித்த கரிகாலரின் மரணம் நேர்ந்தது எப்படி என்பதை இளவரசரால் நிர்ணயிக்க முடியவில்லை. (தொடரும்)

இக்கட்டான நிலை; விடுபட்ட கலை!

திருச்சூரில் அகில இந்திய ஜோன் மகாநாடு நடந்தது. அதற்குப் பெரிய செட் ஜோடனைகளுடன் சேவா ஸ்டேஜ் குழுவினர் திருச்சூருக்கு வந்திருந்தனர்.

''நாடகம் நடத்தும் இடம் எங்கே ?'' என்று திரு சகஸ்ரநாமம் கேட்டதும், ''இதோ, பேச்சாளர்கள் பேசும் இந்த மேடையில்தான் நாடகம் நடக்கணும்!'' என்றனர் மகாநாட்டு நிர்வாகிகள்.

அத்தனை பெரிய செட்டுகளையும் இந்தச் சிறிய மேடையில் எப்படிப் பொருத்த முடியும்? எல்லாவற்றையும் அப்படியே மூட்டை கட்டி வைக்கும்படியாயிற்று.

''ஒரு சிறு கதவு, வீடாக நினைக்கும்படி வைத்தோம். ஒரு பூந்தொட்டி நந்தவனமாயிற்று. இந்தச் சூழ்நிலையில் சிறிய மேடையில் நாடகத்தை நடத்தினோம். ரசிகர்களோடு கலக்கிற ஒரு நிலை வந்துவிட்டால் எந்த இக்கட்டான நிலையையும் சமாளித்துவிடலாம் என்ற உண்மையை அன்று தெரிந்து கொண்டேன். ஆயிரக்கணக்கானவர்கள், அன்று அந்த நாடகத்தை ரசித்தார்கள். தெரிந்த அளவு மலையாளத்தில் எழுதி, அவர்களுடைய பெருந்தன்மையை வியந்து பிரசங்கம் செய்தேன். அவ்வளவுதான்; அத்தனை ரசிகர்களும் 'மேக்கப் கலைந்த அண்ணனைக் காணணும்!' என்று பிடிவாதமாகக் கூறவே அவர்கள் முன்னால் மேக்கப்பைக் கலைத்துவிட்டு வந்து நின்றேன். ஐந்து நிமிஷம் அவர்கள் கைதட்டி ஆரவாரித்ததை என்னால் என்றும் மறக்க முடியாது!'' என்கிறார் ஸ்ரீ சகஸ்ரநாமம்.

''இந்தச் சம்பவத்தினால் துணிவு பெற்று ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தின் சிறு மேடையிலேயே பாஞ்சாலி சபதம் நாடகத்தைச் சமீபத்தில் நடித்துக் காட்டியிருக்கிறோம். ரசிகர்களின் விரிந்த மனம் எந்த இக்கட்டான நிலையையும் ஏற்றுக் கொள்ளக் காத்திருக்கும்போது நாங்க சமாளிக்கிறதுக்குக் கேட்பானேன்!'' என்று தம் அநுபவத்தைச் சொல்கிறார் ஸ்ரீ சகஸ்ரநாமம். - குண்டுமணி



"கம்பரும் சொற்கள் தேடிக் கலங்குவார், கலைத் தூரும்
உம்பரும் தேனி யென்று உன்னடி பணிவார், வீறு
வம்பரும் வாய டங்கி வணங்குவார் எழிலைக் கண்டால்!
பம்பரம் நான்; நீ சாட்டை! பழக்குநீ வருவாய்!" என்றான்.

பாலொடு தேனும் நல்ல பண்பொடு அழகும் காட்டும்
நூலொடு நிறமும், செல்வ நிறைவொடு கொடையும், ஊன்றும்
ஆலொடு அரச மாக ஆருயிர் உடல்க லந்துக்
காலொடு கையும் சோர்ந்தார் காதலர் களியாட் டத்தில்!


எழுந்தனள் பரப ரப்பாய் இளங்கொடி: "என்ன அத்தான்
அழுந்திய அதரந் தன்னை அடைந்ததே கண் மை!" என்றாள்;
"அழிந்ததே கண்ணில் மையும் அதைமுதல் திருத்து," என்று
வழிந்திடும் வியர்வை மையும் வாயையும் துடைத்தான்
அத்தான்!

அறைக்கு வெளியே சென்றால், அறிந்ததும் கேலிப் பேச்சால்
உறைக்க ஆரம் பிப்பார் உரிமையுள் ளவர்கள் எல்லாம்!
பறைக்கு ஆளே வேண்டாம்; பட்டினம் நாற்றி போதும்!
குறைக்கு நிலைக்கண் ணாடி கூடத்தில் இருக்கு தென்றாள்.

"பெண்களுக் குள்ளே வாய்த்த பெரியநா யகியே, எந்தன்
கண்களுக் குள்ளே உந்தன் கனிமுகம் பார்த்தி ருப்பாய்;
உன்னிமைப் புருவந் தன்னைத் தீட்டுவேன்" என்று 'ஐப்ரோ'ப்
பென்சிலை எடுத்து அன்பன் பெண்மனக் குறையைத் தீர்த்தான்.

—"மல்லி"





பரிசு பெறும் அட்டைப்படக் கவிதைகள்

அவன்:
வில்லெனப் புருவமே வளையுதடி — கூர்
வேலெனக் கண்ணொளி பாயுதடி
சொல்லடி என்னுளம் தூள்படுத்தும் — இச்
சோதனை என்னிடம் ஏனடியோ.

புருவ வளைவினில் நாடகங்கள் — நின்று
புரியும் திறத்தினைக் கண்டுவந்தேன்
உருவ அழகினில் ஒங்கிடவே — நான்
ஒப்பனை செய்திட வந்து நின்றேன்.

எழுதிடு கோலினைக் கையெடுத்தே — உன்
எழில்மிகு புருவமே தீட்டிடவே
பழகிய கைவிரல் நீட்டுகிறேன் — என்
பார்வையை உன்விழி ஈர்க்குதடி.

வாங்கிய மையொடு விற்புருவம் — என்னை
வாட்டியே வீழ்த்தியே நிற்குதடி
தாங்கிய வேதனைப் பெருஞ்சுமையில்
— நெஞ்சம்
தவிக்குது: துடிக்குது: நொறுங்குதடி!

அவள்:
கைவிரல் எழுதுகோல் தாங்கிவர—என்றன்
கண்ணிணை மேலது கூடிவரக்
கைவிரல் அழகினில் மனம்கொடுத்தேன்
— உங்கள்
கண்ணொளி கலந்ததும் மனந்துடித்தேன்


சிந்தனை ஆயிரம் சிறகடிக்க — விண்ணிற்
சீறிப் பறந்துளம் துடிதுடிக்கத்
தந்தனை இன்பமே கோடியென — அதைச்
சாற்றுதல் எளிதிலை சொற்களிலே.

அவனும் அவளும் :
கண்ணும் இமையுமாய்க் கூடிடுவோம்
— கற்றும்
கருமைப் புருவமாய்த் தழுவிடுவோம்
எண்ணில் நலம்பல கண்டிடுவோம்
— வாழ்வில்
என்றும் மகிழ்ச்சியில் நீந்திடுவோம்.

— 'பொற்கிழி'







கண்ணாலே கண்ணிலே கண்காணும் காளையருமுண்டு
பண்ணாலே பாவைதனை படித்துரைக்கும் பலருமுண்டு
சொல்லாலே வனிதையரை வடித்தருக்கும் பொல்லருமுண்டு
பெண்ணாலே எண்ணிலா இன்புறும் எங்கள் இளைஞருமுண்டு

கண்டதைத்தான் தீட்டுவான் கைவண்ணக் கலைஞன் இங்கே
கண்ட அழகையே தீட்டுகிறான் இவ்வண்ண இளைஞன்
மைபோட்டு மையல் கூட்டும் மடந்தைக்கு இவன்
கைபோட்டுக் கண்ணிமையிடுகிறான் கண்ணிக்கு

வளையவிட்ட கையதனை வார்குழல் மறைத்திட
களைதட்டும் வதனத்திலே வண்ணமிடும் காளைக்குச்
சிலைபோல நிலையாகக் கலையதாய் இருந்துதவி
மலைபோல கைக்கொள்ளத் துடிக்கிறாள் பிடியிடையாள்

சோக நிழல் அவள் மதி முகம் தழுவ
மேகக்குழல் அவள் தேகம் மிக சுற்ற
தாகச் சுழல் அவள் தவிக்கும் மனம்பற்ற
வேகச் செயல்தனை அவள் விழியிலே காட்டிட்டாள்.

— ப. ஞானசேகரன்


'நெஞ்செலாம் கனக்கு(து)' என்று
நேரிழை கூறி நிற்க
விஞ்சிய வியப்பி னோடு
வினவினன் 'ஏன்,ஏன்?' என்று.
மஞ்சனின் உருவை என்றன்
மார்பினுள் ஏற்ற தாலே
மிஞ்சிய கனத்தி னோடு
மெய்யெலாம் வருத்து(து)' என்றாள்.


'பொய்பொய்' என்று சொல்லிப்
பிரியமாய் முகத்தைத் தொட்டு
'மெய்யுரைத் தாயேல் என்றன்
மேனியை நெஞ்சில் காட்டு


உய்வழி ஒன்று கூறி
உனச்சுமை குறைப்பேன்' என்றான்.
நெய்வழி கூந்தல் நங்கை
நேத்திரம் காட்டி நின்றாள்.

விழிகளின் ஊடே தன்னுடை
விழுமிய தோற்றங் கண்டு
பழியிலாச் செல்வன், சட்டம்
படத்தினிற் கிடுதல் போல
விழியினைக் கையால் தொட்டு
விருப்புடன் இமையைச் சுற்றி
எழில்வரி தீட்ட வானன்
ஏந்திழை மகிழ்ந்து நின்றாள்!

— நாக. முத்தையா, பி.காம்.







கலையோடு உறவாடும் பித்தன் இன்பக்
கனவோடு உறவாடும் காதற் பெண்டின்
நிலையாது அலைபாயும் மின்னி ழிக்கு
நிறைவாகப் புருவத்தை எழுதுகின்றான் ;
மலையோடு கருமேகம் மருவு தல்போல்
அவனோடு உறவாட மங்கை வந்தாள்,
சிலைபோல அவளுக்கு அழகு செய்து
எழில்காண அவன்ஆர்வம் காட்டு கின்றான்.

கலையோடு எழில்காணும் கலைஞன் நெஞ்சைக்
கவர்ந்திட்ட அணங்கோ தன் நெஞ்சி னுக்குள்
நிலையாக அவனோடு குடும்ப வாழ்வில்
இணைகின்ற திருநாளை எண்ணி எண்ணி
நிலைபோல நிலைபோல என்றும் இன்ப
நினைவோடு உறவாட ஏங்கு கின்றாள் ;
கலைநோக்கு அவன்நோக்கு; மங்கை நோக்கோ
கவின்வாழ்வை அமைத்தின்பம் காணும் நோக்கு.

— செ. சி. இளந்திரையன்

அவசரமான
காலைவேளையில்
ஐந்து செகண்டு
ஒதுக்குங்கள்



புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே
ஒரு கப் தயாரித்து
அருந்துங்கள்!





முற்றிலும் சுத்தமான
காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

NCE 6387

ஒரு நெஸ்லே தயாரிப்பு


8
மூன்று மந்திரவாதிகள்
புதியவனின் வித்தைத் திறமையை அறிந்து வியப்படைந்தான் விக்ரமன்.
ஆஹா! அற்புதம். உன் பார்வைக்கு இப்படியொரு சக்தியா? கேட்கக் கேட்க என் நெஞ்சம் பொங்குதப்பா!
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜு
உன்னால், நான் தேடிவரும் அரசகுமாரி எங்கே இருக்கிறாள் என்பதைப் பார்த்துச் சொல்ல முடியுமா?
முடியும்... கொஞ்சம் பொறு...
அதோ தெரிகிறது ஒரு கோட்டை... இரும்பினாலானது அது... அதனுள்... ஆ! அதோ ஒரு அழகி. சிறை வைக்கப் பட்டிருக்கிறாள் அந்தச் சிங்காரி...
நண்பனே! அந்தக் கோட்டைக்கு நீயாகப் போவதானால் இன்னும் ஒரு வருஷமாகும். ஆனால் உன் தோழர்களாகிய எங்கள் உதவியுடன் இன்றிரவுக்குள் நீ அங்கு போய் விடலாம்...
நம் முயற்சியை வெற்றியாக்கித் தரும் சக்தி நெட்டையனிடம் தானிருக்கிறது. அவனால் தான் பல காதங்களை ஒரே எட்டில் தாவ முடியும். என்னையும் இளவரசனையும் முதலில் சுமந்து போய் இரும்புக் கோட்டை முன் விட வேண்டும். நான் வழி காட்டுகிறேன். பிறகு....
அதன் பிறகு செய்ய வேண்டியவைகளையும் திட்டமிட்டு விட்டுக் கிளம்புகிறான் நெட்டையன்.


முதலில் விக்ரமனையும் பொட்டையனையும் சுமந்தபடி நெட்டையன் கிளம்பினான்...
அடுத்த திட்டப்படி குண்டோதரன் காற்றை உள்ளுக்கு இழுத்து உப்பி, பிறகு குதிரையை நோக்கிப் பலமாக ஊதுகிறான். அது வானத்தில் பறக்கிறது.
விக்ரமா, இதோ வருகிறது உன் குதிரை. குண்டோதரன் நாம் சொன்னபடியே திறமாக ஊதி அதை நம் திசையில் பறக்க விட்டிருக்கிறான்.
குதிரை வந்து விட்டது. நான் போய்க் குண்டோதரனையும் தூக்கி வந்து விடுகிறேன். பிறகு எல்லோரும் கோட்டைக்குள் போகலாம்.
குண்டோதரனும் வந்து சேர்ந்ததும் நால்வரும் இரும்புக் கோட்டைக்குள் நுழைகிறார்கள்.
காவல்காரர்கள் யாரையும் காணோம். ஆனால் அகழிப் பாலம் தானாக உயர்ந்து வாசலை மூடிக் கொள்ளுகிறதே....
நம்மை உள்ளே வைத்துச் சிறைப் படுத்த இது ஒரு சூழ்ச்சியோ?


இந்தப் பெரிய கோட்டையில் யாரையுமே காணோமே? ஆனால் பாழடைந்தது போலவும் தெரியவில்லை.
விக்ரமா! அதோ அங்கே பார்...
நிஜ மனிதர்கள் போலவே... ஆனால் எல்லாரும் ஏன் இப்படிச் சிலைகளாக இருக்கிறார்கள்?
நான் நினைக்கிறேன், இவர்கள் உன்னைப் போலவே அரசகுமாரி ஷோபாவைத் தேடி வந்த பல தேசத்து ராஜகுமாரர்களாக இருக்க வேண்டும்.
இவர்களை அந்த மந்திரவாதி இப்படிக் கற் சிலைகளாக்கி இருக்கலாம்...
நம்மையும் இப்படி அவன்...
...சிலைகளாக்கி விடலாம். ஆனால் அதற்கு இடந்தராமல் நாம் அவனை வெற்றி கொள்ள வேண்டும். உங்கள் உதவியால் அது முடியுமென்றே நினைக்கிறேன்.
ஆவி பறக்கும் அறுசுவை உணவு. ஆஹா! என்ன மணம்?
நமக்கும் நல்ல பசி தான்...
நம்மை எதிர் பார்த்து ஏதோ ஒரு மாய சக்தி இங்கு செயல் படுகிறது. உணவு நால்வருக்கு மட்டுமே உள்ளது.
எப்படியானாலும் சரி. முதலில் பசி தீர வயிறாரச் சாப்பிடுவோம், வாருங்கள்.

தொடரும்



மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
OOB
BLUE
BEST ULTRAMARINE
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும் கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே சீராக பால்போல் பளிச்சிடுகின்றன. உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டுகள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள் திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத் தயாரிப்பு இந்தியாவின் மிக நவீன அல்ட்ராமரைன் தொழிற்சாலையில் உருவானது
தயாரிப்பாளர்.
அல்ட்ராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53



கல்வி அளிக்கும் கனவான்கள்

"கல்லூரிகளில் பாடபோதனை நடத்துவோருக்கெனத் தொழிற்சங்கம் அவசியமா?"

"அப்படியொன்று இருந்தால் தேவலை என்று பல சந்தர்ப்பங்களில் தோன்றத்தான் செய்கிறது" என்றார் திரு கே. என். ராவ். வைஷ்ணவக் கல்லூரிப் பேராசிரியரான இவர் மேலும் சொன்னார்:

"தனியார் நிர்வாகத்தில் உள்ள ஒரு பெண்கள் கல்லூரியில் தலைமை நிர்வாகி எதிர்ப்பட்டபோது ஒரு பேராசிரியை வணக்கம் செலுத்தாமல் சென்றுவிட்டார். இதை ஒரு பெரிய குற்றம் என்று கூறமுடியுமா? அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்திருக்கலாம்; அல்லது கவனக் குறைவாகவும் இருந்திருக்கலாம். அட, அப்படியே அவர் அலட்சியம் செய்தார் என்றே வைத்துக் கொண்டாலும் மரியாதை என்பது நம் நடத்தையால் எதிரே இருப்பவரிடம் தன்னால் உருவாக வேண்டுமேயன்றி நிர்ப்பந்தத்தின் மீது பெறக்கூடியதா?

"இதற்காக அந்தப் பேராசிரியை விரிவுரையாளராக்கப்பட்டார்! இப்படி அற்ப காரணத்துக்காகப் பதவி பறிக்கப்படுகிறதென்றால் கல்லூரிகளில் போதிப்பவர்களுக்கென்று ஒரு தொழிற்சங்கம் இருப்பதும் அவசியம்தான் என்று கருதலாம் அல்லவா?"

"பிறகு அந்தப் பெண்மணி என்ன செய்தார்?"

"தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தில் (Association of University Teachers, Tamil Nadu) முறையிட்டார். இச்சங்க நிர்வாகிகள் மேற்படி கல்லூரி அதிகாரிகளிடமும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரிடமும் நேரில் சென்று அப்பெண் மணிக்கு நீதி கிடைக்கச் செய்தனர்."

அவசியம் நேரும்போது இவ்வாறு தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம், தர்மத்துக்காகப் போராடத் தயங்காது என்றாலும் ஒரு தொழிற்சங்கம் என்ற ரீதியில் இயங்க அது விரும்பவில்லை.

மாணவர்களிடையே எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கைகளை நீக்கக் கல்லூரி ஆசிரியர்கள் எந்த அளவுக்கு உதவலாம், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பாடம் போதிக்கும் ஆற்றலை எந்த விதத்தில் வளர்த்துக் கொள்ளலாம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே எந்த அளவுக்கு எந்தவிதமாக நல்லுறவையும் பயபக்தியையும் பாச உணர்ச்சியையும் வளர்க்கலாம் என்றெல்லாம் மேற்படி சங்கத்தின் அங்கத்தினர்கள் அவ்வப்போது மகாநாடுகள் கூட்டிப் பேசி, விவாதித்துப் பயன் பெறுகின்றனர்; அநுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

கூடவே, போராட்டம், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் என்று எதுவுமின்றிப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் நியாயமான ஊதியங்களும் உரிமைகளும் பெற வழி வகுப்பதும் சங்கத்தின் நோக்கம்தான். திரு கே. என். ராவ் இதன் தலைவர்.

ஒரு தனியார் கல்லூரியில் நிலவும் விசித்திரமான போக்கைக் கேளுங்கள்! அங்கு ஓர் ஆசிரியர் சனிக்கிழமையன்று லீவு எடுத்தால் அது இரண்டு நாள் லீவாகக் கருதப்படுகிறதாம்! வேறு சில கல்லூரிகளில் விரிவுரையாளர்களையும் 'டெமான்ஸ்ட்ரேட்டர்'களையும் தாற்காலிக அடிப்படையில் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். எப்போது வேண்டுமானாலும் வீட்டுக்கு அனுப்பிவிடலாம்!

"இது போன்ற அநீதிகளை நீக்க முயலும் சங்கம் அதே சமயம் கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சிறப்பாக நிறைவேற்ற வற்புறுத்தும். அதற்குரிய தகுதிகளை அவர்கள் பெறவும் உதவும்" என்றார் கே.என். ராவ்.


தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. மகாநாடுகள் பல கூட்டி ஆசிரியர்களை ஒன்றுசேர்த்துக் கருத்துப் பரிவர்த்தனைக்கு உதவியிருக்கிறது. இரண்டாவது சம்பள கமிஷனின் சிபாரிசுகள் கல்லூரிகளில் அமுலாகத் தீவிர முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கிறது. வீட்டு வாடகை அலவன்சு கிடைக்க வழி வகுத்தது.

அரசினர் கல்லூரிகளில் உள்ள பல வசதிகள், சலுகைகள் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இல்லை. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பாடம் போதிப்பதில் உள்ள அளவு சிரத்தை அரசினர் கல்லூரி ஆசிரியர்களிடம் இல்லை. இந்தத் தாரதம்மியங்களை நீக்கச் சங்கம் தீவிரமாகப் பாடுபடும்.

இந்த வெள்ளிவிழா ஆண்டுமுதல் சங்கத்தின் நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளி விழா ஆண்டினையொட்டி டிசம்பர் மாதம் மாநிலக் கல்வி மகாநாடு கூட்ட உத்தேசித்திருக்கிறது. இதை ராஷ்டிரபதி தொடங்கி வைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாநாட்டுக்காகும் செலவுகளை ஈடுகட்ட ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி உதவிக் கச்சேரி அளிக்கச் சம்மதித்துள்ளார். எத்தனையோ அறப்பணிகளுக்கு உதவியுள்ள ஸ்ரீமதி எம். எஸ்., இந்தக் கல்விப் பணிக்கும் நிதி திரட்ட வசதியாக இன்னிசைக் கச்சேரி டிசம்பர் ஐந்தாம் தேதி நிகழ்த்துகிறார், 'கான விஹார்' கிருஷ்ணகான சபை அரங்கில்.

நிதி மிகுந்தவர் உயர்வான சங்கீதத்தில் திளைத்து ஆனந்திப்பதுடன் உயர்ந்த பணிக்கு உதவும் திருப்தியையும் பெறலாம்.



சென்ட்ரல்

பி.வி.ஆர்

(ஒரு ரயில் பெட்டி முழுவதையும் ரிசர்வ் செய்து கொள்ள வேண்டுமானால், டிராபிக் சூப்பிரண்டெண்ட் அலுவலகத்தை அணுகி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.)

16

மங்களா மனம் குழம்பிப் போனாள். அபீதம் எதற்காகக் கேதாரத்தைச் சந்திக்க வேண்டும்? மணி சொல்லுவது போல, தேன் நிலவைப் பற்றி அவனிடம் பேசுவதற்கா? அப்படியானால் கலியாணம் நிச்சயமாகிவிட்டது என்று தான் அர்த்தம். ஆதிசேஷன் பலப் பல லட்சங்களுக்கு அதிபர். பல கம்பெனிகளின் டைரக்டர். சொந்தத்தில் ஒரு மாபெரும் தொழிற்சாலை நடத்துகிறார். அத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பல பொருள்கள் ரயில்வேக்கு விற்கப்படுகின்றன. கேதாரம் ஓர் என்ஜினீயர். அதுவும் ரயில்வேயில் மெக்கானிகல் என்ஜினீயர். தம் தொழிலையும் மனத்தளத்தில் வைத்துக் கொண்டுதான் ஆதிசேஷன் கேதாரத்தை வலை போட்டுப் பிடித்திருக்கிறாரோ ?

மங்களா திடீரென்று அடிபட்ட புலியைப் போலத் தன்னுள் சீறிக் கொண்டாள். இந்தக் கேதாரம் யார்? எத்தனையோ பேரைப் போல ஒருவன் !

ரயிலிலும், பஸ்ஸிலும், தற்செயலாக ஓர் அற்பக் காரணத்தை முன் னிட்டு எத்தனையோபேர் அறிமுகமாவதில்லையா? அப்படிப்பட்டவர்களில் இவனும் ஒருவன். ரேணுகாவுக்கும் அவளுக்கும் இடையே ஒரு மனிதப் போக்குவரத்து. இதற்குமேல் அவனுக்கு எந்த விதமான முக்கியத்துவமும் கொடுக்கத் தேவையில்லை. ரேணுகா சொல்லி அனுப்பிய சமாசாரத்தையும், கொடுத்து அனுப்பிய சாக்லேட் பெட்டியையும் கொடுத்தான். அவ்வளவுதான்; அவ்வளவேதான்! அவள் மனம் சஞ்சலப்பட்டதன் காரணம் அவளுடைய பேதைமை! இந்தக் கேதாரம் எங்கே இருந்தால் என்ன? எப்படிப் போனால் என்ன? யாரைக் கலியாணம் பண்ணிக் கொண்டு எந்த ஊருக்கு, தேசத்துக்குத் 'தேன் நிலவு' போனால் அவளுக்கு என்ன? அவள் ஒரு புக்கிங் கிளார்க். என்கொயரி கிளார்க். தினசரி ஆயிரமாயிரம் பேர் வருகிறார்கள். ஏதேதோ கேட்கிறார்கள். அவர்களில் கேதாரம் ஒருவன். அவள் ஏன் அவனைப் பற்றி நினைக்க வேண்டும்? மற்ற எல்லோரிடமிருந்தும் அவனைப் பிரித்து, தனியாக நிறுத்திப் பார்க்க வேண்டும் ? அவன் யாரோ, அவள் யாரோ ? அவனுக்கும் அவளுக்கும் இடையில் அவளே தன் பிரமையில் ஒரு பாலம் அமைக்க முற்பட்டால் அது அவளுடைய மனத்தின் பக்குவமற்ற தன்மையைத்தானே காட்டுகிறது! அவள் ஒரு பைத்தியம்!

திடீரென்று ஒரு குரல் அவளை எழுப்பியது.

''மாடெம்.....''

''யெஸ். ப்ளீஸ்....''

''நான் ஐந்து நிமிஷமாக இங்கேயே நின்று உங்களையே பார்த்துக் கொண்டு நிற்கிறேன்.... இரண்டு தடவை அழைத்தும் பார்த்தேன்.''

''மன்னிக்கணும், ஸார்.... உங்களுக்கு என்ன வேணும் ?''

''ரொம்ப மனசை அலட்டிக்கிட்டிருக்கீங்க. உங்க மனசை ஏதோ அரித்துத் திங்கறது..... சரிதானா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு என்ன வேண்டும் ?''

மங்களாவுக்கு எரிச்சல் உண்டாயிற்று. இவர் யார் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்பதற்கு?

வந்தவர் சிரித்தார், பல்லின் வரிசையும் அதன் வெண்மையும் ஒரு கணம் மங்களாவையே பிரமிக்கச் செய்தன. பற்பசைக் கம்பெனிக்காரர்கள் போட்டி நடத்தினால் இவருக்குத்தான் முதற்பரிசு கிடைக்கும். அல்லது உலகப் பல்லழகன் என்ற பட்டமும்கூடக் கிடைக்கலாம். ஒரு கணம், மங்களா அவரைப் பார்த்தாள். நல்ல உயரம். ஆறு அடி இருக்கலாம். ஒற்றை நாடியான தேகம். டெரிலின் பாண்ட். டெரிலின் ஷர்ட். நீல நிற டை. கேதாரத்தின் வெண்மை, இன்னும் மேலே படரவில்லை. தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி. அகன்ற நெற்றியில் நட்ட நடுவே, ஒரு சிறு சிவப்புச் சாந்துப் பொட்டு. என்னதான் இளமைத்

தோற்றத்தோடு அவர் காட்சி அளிக்க முயன்றாலும், வயது என்னமோ ஐம்பதைத் தாண்டியிருக்கும் என்று மங்களாவுக்குத் தோன்றியது.

இமைக்கும் நேரத்தில் அவரை அளந்த மங்களா, ''என்ன வேண்டும் என்று சொல்லவில்லையே?'' என்று கேட்டாள்.

''நீங்கள் சுதாரித்துக் கொள்ள நேரம் கொடுத்தேன்.... கல்கத்தா மெயிலில் ஏர்கண்டிஷன் போகி முழுதும் ரிசர்வ் செய்யணும். அதற்கு யாரைப் பார்க்கணும்?''

''டிவிஷனல் டிராபிக் சூப்பிரண்டெண்ட்... ஆபீசில் பார்க்கலாம்.''

''அடுத்த மாதம் பதினெட்டாந் தேதி போகணும். நானும் இன்னும் இரண்டு மூன்று பேரும் தனித்தனியா நாலு நாலு பேர்த் ரிஸர்வ் செய்தால்? ஒரு போகி முழுதும் நாங்களே இருப்போம்! என்ன சொல்லுகிறீர்கள்?''

''ரயில்வே எமர்ஜன்ஸி, ராஜ்ய சர்க்கார் கோட்டா என்று பர்த்துகள் இருக்கின்றன. அவற்றை இப்போது 'ரிலீஸ்' செய்ய மாட்டார்கள். டி. டி. எஸ்.ஸைப் பார்த்தால்தான் ஒரு போகி முழுதும் கிடைக்கும்.''


''தாங்க்யூ.... என் பெயர் தேவன். எம். தேவன்.....''

மங்களா பதில் சொல்லவில்லை. அவரும் பதிலுக்கு எதிர்பார்த்து நிற்காமல் பேசிக்கொண்டே போனார்.

''எனக்கு வயது ஐம்பத்து மூணு. ஆனால் யாரும் நம்பமாட்டார்கள். என்னுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் ஒழுங்கானவை. ரெகுலர் ஹாபிட்ஸ். என் உடம்பை நல்லா பாதுகாத்துக் கொள்ளத் தெரியும்.''

மங்களா அலுத்துக் கொண்டாள். கண்டிப்பாக அவர், அவள் தம்மைக் காதலிப்பதற்காக இதெல்லாம் சொல்லவில்லை. பின்ஏன்? ஒருவேளை இந்த மனுஷர் தம்பட்டம் அடித்துக் கொள்ள ஆள் தேடி அவளைக் கண்டுபிடித்து விட்டாரோ?

''....நான் இப்போ ஒரு மாசமா மெட்ராஸிலே இருக்கிறேன். ஒரே பிள்ளை. என்னை மாதிரியே இருப்பான். ஆனால் என் உயரம் இல்லை. அவன் ஒரு டாக்டர். எம்.டி. இங்கிலாந்துக்கு எப்.ஆர்.ஸி.எஸ். எழுதப் போயேண்டா என்றேன். மாட்டேன் என்கிறான்.... பிரைவேட் பிராக்டீஸில் மூவாயிரம் ரூபாய் வர்றது. கிளினிக் வைச்சிருக்கிறான்...''



'' அவனுக்குக் கல்கத்தாவிலே கலியாணம்... கல்யாண கோஷ்டிக்காக, ஏர்கண்டிஷன் 'புக்' பண்ண வந்திருக்கிறீர்கள்?'' என்றாள் மங்களா. வந்தவருடன் பேசிக் கொண்டிருந்தால், கேதாரம் அவளை விட்டுப் போய்விடுவான் என்று அவளுக்குத் தோன்றியது.

''நோ... நோ... இல்லே! இல்லே! கல்கத்தா பிரயாணம் பிஸினஸ் சம்பந்தமா. எனக்குக் கல்கத்தாவில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. ரேடியோ எலெக்ட்ரிகல் சம்பந்தமான தொழிற்சாலை..... கண்டென்ஸர்ஸ், டிரான்ஸ்பார்மர்கள் தயாரிப்பாளர்கள் இப்போ ரேடியோ வால்வ் பண்ணலாம்னு ஒரு திட்டம். அது சம்பந்தமா ஹாலந்திலிருந்து பெரிய பெரிய கம்பெனிக்காரர்களும், நிபுணர்களும் வருகிறார்கள். என் தொழிற்சாலையைப் பார்வையிடப் போகிறார்கள். என் பிள்ளை பிரம்மச்சாரி.....''

'' அப்படியா....?'' இந்தக் கேள்வி அர்த்தமில்லாமல், அவளுக்கே தெரியாமல் வாயிலிருந்து உதிர்ந்தது.

''ஆமாம்.... ஆனால் அவனுடைய கல்யாணத்தை நடத்திவிட வேண்டியது தான். அவனே பெண்ணைப் பார்த்து வைத்துவிட்டான். ஆனால் பெண்ணுக்கு அவனைத் தெரியாது.''

''சுவாரசியமா இருக்கு!''

''பெண் இந்த ஸ்டேஷன்லே குமாஸ்தாவாக இருக்கிறாள். பெரிய அழகின்னு சொல்ல முடியாது. ஆனால் முகத்திலே களை இருக்கு. ஒருவித லட்சுமி கடாட்சம் இருக்கு. என் பயமெல்லாம் அந்தப் பெண்ணுக்கு என் பிள்ளையைப் பிடிக்கணும் என்றுதான்.''

''பெரிய டாக்டர். ரேடியோ வால்வ் தயாரிப்பாளருடைய பிள்ளை. ஒரே பிள்ளை. பார்க்கச் சுமாராக இருந்தால் கூடப் போதுமே, பெண் சம்மதித்துவிடுவாள்.'' மங்களா தன் இயல்பில் பேசிக் கொண்டே போனாள்.

''அப்படியா சொல்லுகிறீர்கள்?''

''ஏன், இதில் என்ன சந்தேகம்?''

''எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. எந்தப் பெண்ணும், பதவி பணத்துக்காக மட்டும் தன் கழுத்தை நீட்டிவிட மாட்டாள். அந்தக் காலத்தில், பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணின் கழுத்தைப் பிடித்து நீட்டினார்கள். பிள்ளையும் தாலியைக் கட்டினான். இந்தக் காலத்துப் பெண்கள்.....''

''எந்தப் பெண்ணும் விரும்புவது, அன்போடு நடத்தும் கணவன், — தேவைக்கு ஏற்றபடி அளவாகச் சம்பாதிக்கிற புருஷன்கூட. அவளுடைய

நவம்பர் 70ல் நடந்த உத்கல் பல்கலைக் கழக எம். ஏ. பரீட்சை முடிவுகள் இன்னும் (28-10-71 வரை) வெளிவரவில்லை.

- ஸ்டேட்ஸ்மென்

- பாலி



தினசரிப் பார்வையின் பழக்கத்தில் அழகாகத் தோன்ற ஆரம்பித்துவிடுவான்.''

எம். தேவன் சிரித்தார்.

''தாங்க் யூ, மிஸ். மங்களா !... தாங்க் யூ.....!''

அவர் தம் பெயரைச் சொன்னதும், அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதே கணத்தில் இனம் தெரியாத பயமும் அவளைக் கவ்விக் கொண்டது.

''சார்...! சார்....!'' அவளால் மேலே பேச முடியவில்லை. அவர் நகர்ந்து கொண்டிருந்தார்.

''இன்றைக்குச் செவ்வாய்க்கிழமை. நாளைக்குப் புதன். உன் அப்பா கணபதியை வீட்டில் நான் சந்திக்கிறேன்!''

''சார்... சார்... ப்ளீஸ்... சார்...'' மங்களா தன் ஆசனத்திலிருந்து எழுந்து அவரைப் பிடித்து நிறுத்தத் துடித்தாள். ஆனால் கைகால் ஓடவில்லை. உடம்பே மரத்துப் போயிற்று. தலை சுற்ற, அவள் அப்படியே நாற்காலியில் பதிந்து போனாள். கண்கள் இருண்டன.

* * *

''அக்கா... அக்கா....''

நான்கு தடவை பாபு கூப்பிட்ட பிறகுதான், மங்களா தம்பியைப் புரிந்து கொண்டாள். எம். தேவன் அவளை உலுக்கிவிட்டுப் போனதெல்லாம் ஒரு நீண்ட பயங்கரக் கனவாகத் தோன்றியது.

''என்ன பாபு?'' குரலே கம்மியது. பயத்தில் வயிறு சுருங்கியது.

''எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உன்னை அப்பா வரச் சொன்னார்.''

''ஒரு மணி நேரம் வரை டியூட்டி இருக்கு.'' இயந்திரமாக வார்த்தைகள் வந்தன.

''அப்பாவுக்குத் தெரியாதா, அது. சீப் புக்கிங் கிளார்க்கிடம் சொல்லிவிட்டு வரச் சொன்னார்.''

சீப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரியின் எலுமிச்சம் பழ நிறமும், உருண்டை முகமும், வைரக் கடுக்கன்களும், நெற்றித் திருமண்ணும் மின்னலாக அவள் கண் முன் தோன்றி மறைந்தன.

அவருடைய தலையில் ஒரு பெண்ணைக் கட்ட யாரோ முயல்கிறார்கள். அதே போல, அவன் தலையில் தம் பிள்ளையைக் கட்ட, எம். தேவன் புறப்பட்டிருக்கிறார்!

''என்ன அக்கா இது... புறப்படு.... எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்......''

''எல்லாரும் என்றால் யாருடா?''

''அப்பா, கேதாரம் எல்லாரும் தான்....''

''நான் வரலை என்று சொல்...போ.. நான் ஒரு மணிக்குத்தான் வருவேன்.''

''அபீதம் — கேதாரம்... கேதாரம்— அபீதம். கலியாணம். தேன் நிலவு. என்ஜினீயர்.... பணம்... பதவி.... சீ, என்ன உலகம் இது.''

''என்ன அக்கா, உனக்குள்ளேயே முணுமுணுத்துக்கறே?''

''நீ இன்னுமா இங்கே நிற்கிறாய்...? போ... போய்ச் சேர்!''

''கேதாரம்தான், நீயும் சாப்பிட வரணும் என்றார்.''

''நான் வரலை என்று சொல்லு....''

தன் சந்தோஷத்தில் அவளும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேதாரம் நினைத்தால், அந்த நினைப்பே அசம்பாவிதம்.

''என்னமோ செய்.''

பாபு ஓடி விட்டான்.

மங்களாவின் கண்கள் கனத்தன. யாரோ அவளுடைய நெஞ்சைப் பிடித்துக் கசக்கிப் பிழிவதாகத் தோன்றியது. யார்? அவளுடைய கைகளேதானா? அல்லது கேதாரமா? இல்லை, அபீதமா? யார்? யார்?

திடீரென்று எம். தேவன் கிளப்பி விட்ட பயம் மறைந்தது. எம். தேவனுடைய பிள்ளை, அவளைப் பார்த்திருக்கிறான். அவளை அவனுக்குப் பிடித்திருக்கிறது. பண்போடு, நாகரிகத்தோடு, அப்பாவிடம் சொல்லி, அவளுடைய தகப்பனாரிடம் பேச அனுப்பியிருக்கிறான். அவன் மீது கோபமோ, எரிச்சலோ உண்டாகக் காரணமில்லை. முன் பின் பார்த்திராத அந்த டாக்டர் மீது அவளுக்குப் பரிவுதான் உண்டாயிற்று. ஆனால் பரிவு வேறு, காதல் வேறு. அவளால் யர்ரையும் காதலிக்க முடியாது. காதல் ஒரு பொய்ம்மை, ஓர் ஏமாற்று உணர்ச்சி. கனவு. அவளுக்குக் கிடைக்கப் போவது, ஒரு லௌகீக வாழ்க்கை. ஒரு குடும்பம். குடும்பத்தில் இரண்டு பேரில் ஒருத்தி. அந்த ஒருவன் யார் என்பதுதான் அந்த ஒருத்திக்கு முக்கியம். அவளைப் பொறுத்த வரையில் இனிமேல் யாருமே முக்கியமில்லை. எல்லாரும் ஒன்றுதான். விருப்பு உண்டானால்தான், தாபம் எழும். தாபத்தின் தொடர்ச்சி வேதனை. மங்களாவின் மனத்தில் இனிமேல் விருப்பு, தாபம், வேதனை ஏதும் இருக்காது. இருக்க முடியாது.

அம்மா செத்துப் போன அண்ணாவின் பிள்ளையை நினைத்து உருகுகிறாள். உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் திரிந்து கொண்டிருக்கும் அவன்தான் மங்களாவின் வாழ்க்கையை மலரச் செய்யவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள்! அப்பா அவளுடைய கல்யாணத்தை நினைத்தாலே நடுங்குகிறார்! பதினொரு குழந்தைகளைப் பெற்றவர், சீ, வரதட்சிணை, கலியாணச் செலவு என்று பயந்து சாகிறார். 'என்றென்றும் கன்னிப் பெண்ணாகவே இருப்பேன்', என்று மங்களா பீஷ்ம சபதம் செய்தால், அந்தச் சபதத்தில் மனம் மகிழக்கூடியவர் அவளுடைய அப்பாதான். ஆனால் இந்த மகிழ்ச்சியினிடையிலும், அவருடைய மனம் வேதனைப்படும். தம் பெண்ணை வாழ வைக்க அவரால் முடியாமற் போயிற்றே! கையாலாகாதவராகிவிட்டாரே? ஆனால் இந்த எம். தேவன் தம் பிள்ளைக்காக, அவரை அணுகினால், கல்யாணச் செலவு காலணா கூடக் கிடையாது என்று சொல்லிக் கொண்டு கதையை ஆரம்பித்தால், அப்பா துள்ளிக் கொண்டு கிளம்புவார். அம்மாவையும் வாய்ச்சாலகத்தால் சமாதானப்படுத்தி, அவளுடைய அண்ணா பிள்ளையை மறக்கச் செய்வார்!

இதனால் யாருக்கு என்ன லாபம்! எம். தேவனுக்கும், அவருடைய பிள்ளைக்கும், அப்பாவுக்கும்தான். கல்யாணத்துக்குச் சாப்பிட வருகிறவர்களுக்கும் லாபம்தான்! ஆனால் அவளுக்கு?

எல்லாம் ஒன்றுதான்!

மாமா பிள்ளையானால் என்ன, எம். தேவன் பிள்ளையானால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அவள் இனிமேல் இயந்திரம். இயந்திரம். வெறும் இயந்திரம்.

கேதாரம் — அபீதம். அபீதம் — கேதாரம்.

மங்களா பெருமூச்செறிந்தாள். எதிரே வந்து நின்ற மேரியையும் அவள் கவனிக்கவில்லை.

''ஹலோ, மங்களா.''

''ஓ, நீயா?''

''என்ன, மங்களா, முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு.... ஜுரமா?''

''இல்லை. நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''இன்னிக்கு மூணு மணிக்கு, நாம் மிஸ்டர் கேதாரத்தைச் சந்திக்கப் போகிறோம்! இல்லியா....?''

''மன்னிக்கணும், மேரி.... என்னால் வர முடியாது.''

''எட்மண்டுக்கு எப்படியாவது ஒரு வேலை கிடைக்க வேண்டும், மங்களா.''

'' என் அப்பாவை அழைத்துக் கொண்டு போய்ப் பாரு.''

''நீ வந்தால்தான் வெற்றி கிடைக்கும், மங்களா ?''

மங்களா சிரித்தாள். ''ஏன், நான் அவனுக்கு முன்னுலே போய் நின்ருல்தான் உன் தம்பிக்கு வேலை கிடைக்கும் என்று நினைக்கிருயா ?''

மேரியின் முகம் வெளிறிப் போயிற்று. அவளுக்கு மங்களாவின் மீது ஆத்திரம் பிறக்கவில்லை. மாருக, அனுதாபம் தான் உண்டாயிற்று. ஓர் இருபத்து நாலு மணி நேரத்தில், மங்களாவின் மனத்தில் அதிர்ச்சி தோன்றியிருக்கிறது. இந்த அதிர்ச்சிக்கும் அந்தக் கேதாரத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. இல்லாவிட்டால் மங்களா, அவளாகவே செய்த ஏற்பாட்டை ஏன் இப்போது மீறுகிருள்?

''ஓகே, மங்களா... உன் அப்பாவும் நானும் போய்ப் பார்க்கிறோம்....''

'' என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள்... யாரை வேண்டுமானுலும் போய்ப் பாருங்கள்.... என் கழுத்தை அறுக்காதீர்கள்.... எனக்கு யாரும் லட்சியமில்லை.....''

மேரி அவளையே கூர்ந்து பார்த்தாள். மங்களாவா இப்படிப் பேசுகிருள் ? அவளுடைய குரல் மற்ற கவுண்டர்களில் கேட்குமே? மேரி சுற்றுமுற்றும் பார்த்தாள். நல்லவேளையாக யாரும் மங்களாவின் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

மேரிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மங்களா உன்மத்தம் பிடித்தவளைப் போல் கத்துகிருள். இன்னும் நின்று கொண்டே இருந்தால், அவள் மேலும் கத்த அவளே வாய்ப்பு அளித்தவளாகி விடுவாள். என்கொயரி கிளார்க் மங்களா கத்திஞள் என்று நாலு பேர் பேச ஏது வாகும்.

மேரி மெதுவாக நகர்ந்தாள். அவள் அந்த அறையைவிட்டு வெளியேறுவதற்கும், ''மேரி'' என்ற குரல் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

மேரி நின்ருள். தலையைத் திருப்பிப் பார்த்தாள். மங்களாவின் கண்கள் கனத்து, விழிகளை நீர் மறைத்திருந்தது. கன்னங்களில் ஓரிரு முத்துக்கள் உருண்டோடின.

மேரி திரும்பி ஓடி, மங்களாவின் அருகே போய் நின்ருள்.

''... மேரி... மேரி... மன்னிச்சுடு, மேரி.....''

அட்டைப்படக் கவிதை :

கல் அளிக்கும் சிற்பமுன்னே
கவின் அளிக்கும் சிற்பமெனப்
பெண் அளிக்கும் சிற்பம், உயிர்ப்
பெறும் சிற்பம் ஆகின்ருள் !
வேலையுடன் வந்ததென
வேல்விழியின் மால்பருகிக்
காளை அங்கு வந்துநின்ருன்
காதல் பொருள் தந்துநின்ருன் !

- தமிழழகன்

''மங்களா...! அனல் இங்கே உன் உணர்ச்சிகளைக் காட்டாதே... தோல்வியினுலே உன் மனம் உடைஞ்சு போயிருக்கு !''

மங்களா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'' என்னை அறியாமல், எனக்குத் தெரியாமல் அழுகை வர்றது, மேரி. அழறதே அவமானம்னு நினைக்கிற எனக்கு ஏன் இப்படி அழுகை வர்றது?''

'' ஏமாற்றத்தால் உண்டாகிற வேதனை.''

'' ஏமாற்றமா ? ஆசை இருந்திருந்தால்தானே, மேரி ஏமாற்றத்துக்கு இடம் இருக்கும்?''

''காரணமில்லாமல் அழுகை வர முடியாது மங்களா. ரொம்ப மனசு உடைஞ்சு போயிருக்கு!''

மங்களா மௌனமாக இருந்தாள்.

'' உன் மனசு புண்ணுகியிருக்கிறது. உன் மனப் புண்ணுக்குக் காரணம் தோல்வி, ஏமாற்றம். இதையெல்லாம் நான் சொன்னுல் நீ ஒப்புக் கொள்ள மாட்டாய். ஏனென்ருல், உன் மனசிலே உண்டாகியிருப்பது, ஆசை, ஒரு புது விதமான ஆசை என்பதை நீயே இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. உன்னை அறியாமல் பிறந்த ஆசை, உன் கண் எதிரே ஏமாற்றமாக முடிந்துவிட்டது. இதனுல் உனக்கு உன்மீதே கோபம் வருகிறது. ஏன் ஆசைக்கு இடம் கொடுத்தோம் என்று நீயே நொந்துகொள்ளுகிருய்...''

''நோ... நோ... நோ...!''

''ப்ளீஸ் மங்களா... உன் வேதனையை நீ தனிமையில்தான் அழுது தீர்க்கணும். இந்த ஏமாற்றத்துக்கு அழுகை தான் மருந்து. கண்ணீரின் கடைசிச் சொட்டு விழுந்து விட்டால் நீயும் என்னைப் போலாகி விடுவாய்.... தண்டவாளத்தில் ஓடுகிற வெறும் ரயில் மாதிரி மாறிவிடுவாய்.....''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை....''

''மங்களா! நீ அந்தக் கேதாரத்தின் மேலே காதல் கொண்டிருக்கே! இப்போ அதிலே தோல்வி கண்டதும்....!''

''வாயை மூடு, மேரி. நான் அவனை வெறுக்கிறேன். நான் அவனை மனதார வெறுக்கிறேன்.''

இப்போது மேரி சிரித்தாள்.

''வெறுப்பு அன்பின் நிழல்தான், மங்களா.... அன்பு இல்லாத இடத்தில் வெறுப்பும் இருக்க முடியாது. உன்னால் கண்டிப்பாகக் கேதாரத்தை வெறுக்க முடியாது, எனக்குத் தெரியும்..... பலராமன் என்னைவிட்டே ஓடிப் போய் விட்டான். ஆனாலும் என்னால் அவனை வெறுக்க முடியவில்லை. என்னைப் பகிரங்கமாக ஏமாற்றியவனையே என்னால் வெறுக்க முடியவில்லை. உன்னால் எப்படிக் கேதாரத்தை வெறுக்க முடியும்? உனக்கு உள்ளூற அவன் மேலே ஆசை இருக்கு. அதிர்ஷ்டம் பிறக்கட்டும். நான் வரேன்.''

''மேரி!''

''உம்!''

''மூன்று மணிக்கு நாம் கேதாரத்தைப் பார்க்கலாம்....''

''எதற்கு?''

''எட்மண்ட் வேலை விஷயமாக!''

''ஓ.கே.''

மேரி தனக்குள் ஒரு முறை சிரித்து, பல முறை அனுதாபப்பட்டாள்! கடவுள் மங்களாவின் மீது கருணை காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். (தொடரும்)

நவாப் கோப்பை

''ஆங்கில அரசாட்சியின் கெடுபிடி மிகுந்த காலம். ஜிம்கானா கிளப்பில் ஐரோப்பியர்களே கால்பந்தாட்டம் ஆட அனுமதிக்கப்பட்டனர். 'என் தோல் வெளுப்பு; அவன் தோல் கறுப்பு' என்று இந்தியர்களை ஒதுக்கினர். ஜிம்கானா கிளப்பில் நடக்கும் கால்பந்தாட்டங்களைப் பார்த்து இந்தியர்களுக்கும் அதுபோல் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தென்னிந்திய விளையாட்டுக் கழகத்தைத் தோற்றுவித்தனர்!'' என்று எஸ். ஐ. ஏ. ஏ. தோன்றிய விதத்தைக் கூறுகிறார், அதன் இப்போதைய காரியதரிசி திருகே.ஜி. ராதாகிருஷ்ணன்.

''ஜாட்ப்ரோல் கோப்பைப் பந்தயம் எப்போது நடக்கத் தொடங்கியது?''

''தென்னிந்திய விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தினர் ஜாட்ப்ரோல் நவாபு. வேட்டையிலும் விளையாட்டிலும் ஓர் அபார மோகம் கொண்டவர். 128 புலிகளை வீழ்த்திய பெருமை இவருக்கு உண்டு. ஒரே நாளில் ஐந்து புலிகளைச் சுட்டுத் தள்ளி ரிகார்டும் ஏற்படுத்தியவர். ஜாட்ப்ரோல் நவாபுக்குக் கால்பந்தாட்டத்திலும் மோகம் உண்டு. அதைப் போஷிக்க வேண்டும் என்று 1921ம் ஆண்டில் ஜாட்ப்ரோல் கோப்பையை நிறுவினார்'' என்கிறார் எஸ். ஐ. ஏ. ஏ. காரியதரிசி.

முப்பத்தைந்தாவது ஜாட்ப்ரோல் கோப்பைப் பந்தயம் நேரு ஸ்டேடியத்தில் நடந்தது. வண்ணபேதத்தை எதிர்த்துத் தோன்றிய எஸ். ஐ. ஏ. ஏ. விளையாட்டுக் கழகப் பந்தயத்தில் 'நடுவர்' கப்பையாவின் உடை வர்ணம் ஐ. வி. எப். கோஷ்டிக்கும் யங் சாலஞ்சர்ஸ் குழுவுக்கும் நடந்த போட்டியில் ஒரு பிரச்னையைக் கிளப்பிவிட்டது. 'யங் சாலஞ்சர்ஸின்' கறுப்பு உடையைப்போலவே நடுவரும் உடை அணிந்திருந்ததால் அவரையும் தம் கோஷ்டியின் 'பன்னிரண்டாவது ஆட்டக்காரர்!' என்று கருதிப் பந்தை அவரிடமே தட்டியது அபூர்வக் காட்சி. இடைநேரத்துக்குப்பின் இந்தச் சங்கட நிலையை மாற்றுடை தரித்து நடுவர் கப்பையா சமாளித்தார்!

*   *   *

இறுதி ஆட்டத்தில் ரயில்வே தென்னிந்திய விளையாட்டுக் கழகமும் ஐ. வி. எப். குழுவும் சந்தித்தன. அக்டோபர் 24ந் தேதி வருண பகவான் கொட்டுக் கொட்டென்று கொட்டி அக்டோபர் 31ந் தேதிக்கு ஆட்டத்தைக் கொண்டு போனார். 31ந் தேதியன்று இரு ரயில்வே அணிகளுமே ஆளுக்கு ஒரு கோல் போட்டு மறு ஆட்டத்தை நவம்பர் 2ந் தேதிக்குக் கொண்டு சென்றன.

அன்று, நடுவர் பழநிவேலு விசிலை ஊதினார். ரயில்வே ஆட்டக்காரர் சாதத்துல்லா பாய்ந்து பந்தோடு முன்னேறும்போது வின்சென்ட் பந்தைப் பறிக்கும் முயற்சியில் 'கை'பட்டுவிட்டது. 'ஸ்பாட் கிக்' நடுவர் வழங்கியதை, ரயில்வே ஆட்டக்காரர் பால் தப்பாமல் 'கோல்' ஆக்கினார். அப்புறம் பந்து இரு கோஷ்டியிலும் 'அம்மானை' ஆடியது. கடைசியில் இரண்டாவது வருஷமும் தொடர்ந்து தென்னிந்திய ரயில்வே விளையாட்டுக் கழகத்தினர் ஜாட்ப்ரோல் கோப்பையைப் பெற்றார்கள்.



தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் சென்னபஸவப்பாவே ஆட்டத்தைக் காண வந்துவிட்டார்! ஜாட்ப்ரோல் கோப்பையைத் தென்னிந்திய ரயில் அணியிடமிருந்து ரயில் பெட்டி தொழிலக அணி 'கழற்றி'க் கொண்டு போகாதது அவருக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்திருக்கும்!

— பி. எஸ். மணி

அன்று இரவு

மாரி. அறவாழி



பாதையெல்லாம் ஒரே வெள்ளக் காடு. இருபுறத்துச் சாக்கடைகளும் பெருகி வழி கின்றன. பேரிரைச்சல். தாங்கி வழிந்து கொண்டிருக்கும் தெரு விளக்குகளும் திடீ ரெனக் கண் மூடுகின்றன. இடி மின்னலின் ஆர்ப்பாட்டத்தைத் தாங்க முடியவில்லை.

என்ன செய்வதென்று புரியவில்லை சும திக்கு. "ஒரு டாக்ஸிகூடவா கிடைக்காது போய்விடும்?" என்று இதுவரை அவளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த தைரிய மும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்கிறது. தன் முட்டாள்தனத்தை முதன் முறையாக உணர்கிறாள்.

கொட்டும் மழையில் தன்னந் தனியாக ஒரு சினிமாக் கொட்டகையருகே நின்று கொண்டிருப்பது எத்தனை பெரிய ஆபத்து!

எவ்வளவு நேரம் அப்படியே நின்றுகொண் டிருப்பது? மெதுவாக நடந்து போய்விடலாம் என்றாலும் கிட்டத்திலா இருக்கிறது வீடு?

சேரி ரோடு எங்கே, அம்மாப் பேட்டை எங்கே? இரண்டு மைல் களுக்குக் குறைவிருக்காதே.

மணி பத்தரை. இடி மின்னலைப் பற்றிக் கவலைப்படாத சினிமாக் கொட்டகைக்காரன் இரண்டாவது காட்சியைத் தொடங்கி விட்டான், தன்னிடமிருக்கும் வசதியை வைத் துக்கொண்டு.

அதற்கு மேலும் அங்கு நின்று கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எங்கு போவது என்ற குறிக்கோள் இல்லாமல் மெதுவாகக் கால்களைப் பெயர்த்து வைக்கிறாள் அவள். அப் போதுதான் திடீரென்று நினைவுக்கு வருகிறது அய்யாப் பிள்ளை சந்து பக்கத்தில் இருப்பது.

அந்தத் தெரு பதின்மூன்றும் நம்பர் வீட் டில்தான் குடியிருக்கிறது குமாரசாமியின் குடும்பம். சுமதி வேலை பார்க்கும் தொழிற் சாலையில் போன ஆகஸ்ட் வரை அக்கவுண் டெண்டாகப் பணிபுரிந்துவிட்டு இப்போது ஓய்வுபெற்றிருக்கும் அந்த ஐம்பத்தெட்டு வயது மனிதரின் வீட்டுக்கு ஒரே ஒரு முறை போயிருக்கிறாள் அவள் தன் தோழிகளுடன்.

நல்லவேளை! இப்போது ஞாபகம் வரு கிறது அது. மழை விடும்வரையில் அங்கு போய்த் தங்கியிருந்துவிட்டு. முடிந்தால் இர வைக்கூடக் கழித்து விட்டு விடியற்காலமே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். ஆம்; அதுதான் சரி.

அய்யாப்பிள்ளை சந்தை நோக்கி விரைவாக நடக்கிறாள் சுமதி.

இதோ பதின்மூன்றும் நம்பர் வீடு. ஒரு விநாடி தயக்கம். பிறகு லேசாகத் தட்டுகிறாள் கதவை.

"டொக், டொக், டொக்". பதிலில்லை.

மீண்டும் தட்டுகிறாள். மூன்றாவது முறை தட்டிய பின் கதவின் உள் தாழ்ப்பாள் திறக்கப்படுகிறது.

"டொடக்..."

கதவைத் திறந்துவிட்ட குமாரசாமியை நன்றியுடன் ஏறிட்டுப் பார்க்கிறாள். மறு விநாடி திடுக்கிடுகிறாள். துள்ளிக் குதிக்கிறாள்.

ஆம்! வந்து திறந்துவிட்டது அவரோ, அவர் மனைவியோ அல்ல; யாரோ ஓர் இளைஞன்!

வியப்புடன் கேட்கிறான் அவனே.

"யாரைப் பார்க்க வேண்டும்?"

அவள் குரலில் தயக்கம், நடுக்கம்: "மிஸ் டர் குமாரசாமி..."

"அடடா! அவர் இப்போது இங்கில்லையே! வேறிடத்துக்குக் குடி போய்விட்டாரே.... நீங்கள் என்ன அவருக்கு உறவினரா?..."

"இல்லை. எங்கள் அலுவலகத்தில் அக் கவுண்டெண்டாக இருந்து ரிட்டயர்டு ஆனவர்..."

இருவரும் அமைதியாக நிற்கின்றனர். அவன் பார்வை உள்ளே செல்கிறது. வீட் டுக்குள் மின்சாரத் தொடர்பு நின்றுபோயிருப் பதால் சின்னஞ் சிறு மெழுகுவத்தி மட்டும் எரிந்து கொண்டிருக்கிறது. அவள் தயக்கத் துடன் திரும்புகிறாள்.

"நான் வருகிறேன்..."

அவன் குரல் நடுக்கிறது.

"நில்லுங்கள். குமாரசாமியின் வீடு எனக்குத் தெரியும்... ஏதாவது அவசரமாக அவரைப் பார்க்க வேண்டுமென்றால் சொல்லுங்கள்... நான் கூட்டிச் செல்கிறேன்..."

"அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை.... நான் இருப்பது அம்மாப்பேட்டை. அசந்தர்ப்பமாக இந்தப் பக்கம் வந்து மழையில் சிக்கிக் கொண்டேன். டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா எதுவும் கிடைக்கவில்லை. இரவு குமாரசாமி வீட்டில் தங்கிப் போகலாம் என்று வந்தேன். பரவாயில்லை...வருகிறேன்..."

நின்றிருந்த அவள் மீண்டும் திரும்புகிறாள். அவன் கேட்கிறான்:

"....ம்ம்... இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?"

என்ன பதில் சொல்வாள் சுமதி? மௌனத்தைக் கலைக்கிறது மீண்டும் அவன் குரல்.

"உங்களுக்குத் தடையில்லையென்றால் இரவு இந்த வீட்டிலேயே தங்கிப் போகலாம்." மின்னல் தாக்கியது போன்ற அதிர்ச்சி.

முன்பின் தெரியாத ஓர் இளைஞனுடன் இரவு நேரத்தில் தங்குவதா?... உடம்பு நடுங்குகிறது அவளுக்கு.



அதைப் புரிந்து கொள்கிறான் அவன்.

"பயப்பட வேண்டியதில்லை... வீடு பெரியது. தனி அறை இருக்கிறது... தாராளமாகத் தங்கிக் கொள்ளலாம்..."

உண்மையாகவே ஏதோ ஆபத்தில் வந்து தானாகவே மாட்டிக் கொண்ட உணர்ச்சி சுமதிக்கு. பயங்கரமான பற்பல எண்ணங்கள். அந்த இடத்தை விட்டு ஓடிப் போய் விடுவோமா என்ற துடிப்பு. ஆனால் எங்கே ஓடுவது?

"என்னைத் தாராளமாக நம்பலாம். பெண் இருக்கும் வீடுதான் இதுவும். இந்த நேரத்துக்கு மேல் எங்கு சென்றாலும் உங்களுக்குப் பாதுகாப்பு இல்லை."

அவன் பேச்சில் எந்தவிதமான போலித்தனமும், தவறான எண்ணத்தின் சாயலும் நிச்சயமாக இல்லை என்பது அவளுக்குப் புரிகிறது. ஆனால் எப்படியிருந்தாலும் ஆண் ஆயிற்றே அவன்?

கூடத்துக் கயிற்றில் சேலைகள் தொங்கிக் கொண்டிருப்பது மங்கிய மெழுகுவத்தி வெளிச்சத்தில் இலேசாகத் தெரிகிறது. வேறு

வழியில்லாமல் மனத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு உள்ளே எடுத்து வைக்கிறாள் காலை.

பளிச்சென்று எரியத் தொடங்குகிறது கூடத்து மின்விளக்கு.

அந்த ஒளி வெள்ளத்தில் இருவரும் கூச்சத்துடன் பார்த்துக் கொள்கின்றனர். இருவருக்கும் ஒரே அதிர்ச்சி!

''இவளா?'' என்று முணுமுணுக்கிறான் அவன்.

''இவர்தானா?'' என்று தனக்குள்ளாகவே கேட்டுக் கொள்கிறாள் அவள்.

நெஞ்சம் படபடக்கிறது. வெட்கம் உடலைக் குறுக வைக்கிறது. குனிந்த தலையை நிமிர்த்த முடியவில்லை அவளால்.

பத்து நாட்களுக்கு முன்பு தான் அவளைப் பெண் பார்க்க அவள் வீட்டுக்குத் தன் தாயாருடன் வந்திருந்தான் அவன். ''முடிவைப் பின்னால் கடிதத்தில் எழுதி அனுப்புகிறோம்'' என்று சொல்லி விட்டு வந்திருந்தாள் அவன் தாயார். அந்தக் கடிதத்தை அவளும் அவள் பெற்றோர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் வரவில்லை. ஆனால் அதற்குள் அவனை நேரிலேயே பார்க்க வேண்டியதாகி விட்டதே!

சுந்தரம் முன்பு போல் வாய் திறந்து அவளைக் கூப்பிடவில்லை. ஆனால் உள்ளே நடக்கும் கால்கள் அவளை அழைக்கின்றன. அவள் பின் தொடர்கிறாள். அவன் காட்டிய அறைக்குள் செல்கிறாள். அங்கே ஒரு கட்டில், மெத்தை, தலையணை!

பாயையும் தலையணையையும் எடுத்துக் கொண்டு கூடத்தின் ஓரத்துக்குச் செல்கிறான் சுந்தரம். கீழே உட்காருகிறான். அறையில் தயக்கத்துடன் நின்றுகொண்டே யிருக்கிறாள் சுமதி. அவன் கேட்கிறான்:

''சாப்பாடு ஆகிவிட்டதா?''

அவள் பதில் சொல்லவில்லை. என்ன பதில் சொல்வது? மாலை நான்கு மணிக்கு வழக்கம் போல் அலுவலகத்தில் காப்பி குடித்தது தான். அங்கிருந்து நேரே சினிமாக் கொட்டகைக்கு வந்து விட்டாள்.

ஆனால் அவள் ஒன்று நினைக்க வேறு ஒன்று நடந்து விட்டது. யாரும் எதிர்பார்க்காத இடி மின்னலுடன் பயங்கரமான காற்றும் மழையும் பிடித்துக் கொண்டன.

அவள் வயிறு கெஞ்சியது உண்மை என்றாலும் அவனிடம் எப்படிச் சொல்வது?

தயக்கத்தை மறந்து பலமாகவே சொன்னாள்: ''எனக்கொன்றும் பசியே யில்லை... அநாவசியமாகத் தொல்லைப்படாதீர்கள்...''

அவள் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கையில் பிளாஸ்குடன் நடந்தான்.

தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கும் மழைக் கோட்டைக் கழற்றித் தாழ்வாரத்தில் வைத்து விட்டு உள்ளே வருகிறான் அவன். கையில் டிபன் பொட்டலமும், பிளாஸ்கில் சூடான காப்பியும் இருக்கின்றன.

பொட்டலத்தைப் பிரித்துச் சுமதி முன் வைக்கிறான்.

''ஐயோ... வேண்டாமே... எனக்குப் பசிக்கவேயில்லை...''

அவன் சொல்கிறான், சிறிய முறுவலோடு: ''பொய் எதற்கு? பசிக்களைதான் முகத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறதே... உம்... சாப்பிடலாம்...''

மல்லிகைப் பூப் போன்ற இட்டிலிகள் நான்கு. உண்மையிலேயே பசியில்லாதவர்களுக்குக் கூடப் பசி எடுத்து விடும். அவள் அவற்றைப் பார்த்துவிட்டு அவனையும் பார்க்கிறாள், சொல்கிறாள்:

''நீங்களும் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

''எனக்கெதற்கு? நான்தான் வயிறு நிரம்பச் சாப்பிட்டு விட்டேனே...''.

''அப்படியானால் எனக்கும் வேண்டாம்.''

''சரி... உன் விருப்பத்தைக் கெடுப்பானேன்...?''

இரண்டு இட்டிலிகளை எடுத்து ஓர் இலையில் வைத்து அவனிடம் நீட்டுகிறாள். அவள் மனத்தில் ஒரு பூரிப்பு. இன்றில்லாவிட்டாலும் நாளை அவர்கள் இருவரும் தம்பதிகள் தானே. அப்போது அவனுக்கு எப்படியெல்லாம் உபசரித்து உணவு படைப்பாள் அவள்!

சுமதியின் மனம் அந்த எதிர்காலத்தை நிகழ்கால நனவாக எடுத்துக் கொள்கிறது. அவள் உடல் நாணிக் கோணிச் சிலிர்க்கிறது. தன் கையில் இருக்கும் இலையை வாங்கும் அவன் அப்படியே விரல்களையும் தீண்டினால்... ஆகா... அந்தத் தீண்டலில் உண்டாகும் இன்பம்...!

தன்னை அவன் பார்த்துக் கொண்டே யிருப்பதை எப்படியோ உணர்ந்த அவள் தலை நிமிர்கிறாள். அவன் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்பதற்காகப் பேச்சுக் கொடுக்கிறாள்.

''அம்மா ஊருக்குப் போயிருக்கிறார்களா?''

''ஆமாம்.... ஞாயிற்றுக் கிழமைதான் போனார்கள்... கிராமத்தில் அறுவடைக் காலமாயிற்றே...''

இவ்வாறு கூறி அவளை அடிக் கண்களால் பார்க்கிறான். அப்பா! எத்தனை கவர்ச்சிமிக்க கண்கள்! அந்தப் பார்வையைச் சந்திக்கும் திராணி அவளுக்கில்லை. சாணுகக் குறுகிப் போகிறது உடல்.

இட்டிலிகள் காலியாகின்றன. காப்பியை ஊற்றி அவனிடம் நீட்டுகிறாள் சுமதி. அவன் கேட்கிறான்:

''உனக்கு...?''

''எனக்கு வேண்டாம். காப்பி குடித்தால் தூக்கம் வராது...''

''அப்படியானால் நான் மட்டும் எப்படிக் குடிப்பது? நான் தூங்க வேண்டாமோ?''

''இருவரும் பாதி பாதி குடிப்போம்...''

''இருவரும் தூங்க வேண்டாம் என்கிறாயா?'' — இருவரும் ஒரே சமயத்தில் நகைத்துக்கொள்கின்றனர்.

•


மணி பன்னிரண்டு. அவள் அறைக்குள் சென்று படுத்துக் கொள்கிறாள். அவன் தாழ்வாரத்தில் பாயில் உருள்கிறான்.

''டக் டக் டக்...'' என்று எழும்பிய ஓசையால் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறாள் சுமதி. படுக்கையை விட்டு எழவில்லை. ஆனால் அடுத்த நிமிடம் ஏதோ சாமான்கள் தரையில் உருளும் ஒலி கேட்டுத் திடுக்கிடுகிறாள்.

நாட்டின் நிர்மாணத் திட்டங்களுக்கு உதவி

ஏஸிஸி நாட்டின் நிர்மாணத் திட்டங்களுக்கென 60 இலட்சம் டன்கள் சிமெண்டை அளிப்பதுடன் எதிர்காலத் தேவைகளுக்கும் திட்டம் தீட்டி வருகிறது. தாணாவிலுள்ள அதன் மத்திய ஆராய்ச்சி நிலையம் சிமெண்ட் கான்கிரீட் மற்றும் புதிய சிமிட்டிப் பொருள்களில் ஆராய்ச்சி புரிந்து வருகிறது; 17 சிமெண்ட் ஆலைகள் உயர்தரமான சாம்பல் நிற சிமெண்டை உற்பத்தி செய்கின்றன. கட்னி, போர்பந்தர் மற்றும் கைமோரில் உள்ள ஆலைகள் ரிப்ராக்டரீஸ் மற்றும் இதர விசேஷமான சிமெண்டுகளைத் தயாரிக்கின்றன. இரண்டு ஏஸிஸி கனிச் சுரங்கங்களும் உண்டு. கான்கிரீட் அசோசியேஷன் ஆப் இந்தியா கான்கிரீட் கலை நுட்பம் பற்றிய எல்லா விஷயங்களிலும் இலவசமாகவே தொழில் நுட்ப யோசனைகளை வழங்குகிறது. தவிர, ஏஸிஸி தனது ஷஹாபாத் தொழிற் கூடத்தில் தொழில் இயந்திரங்களை உற்பத்தி செய்கிறது.

ACC உங்களது நலமிக்க நாளைக்கு இன்றே திட்டமிடுகிறது.



ACC. 9721 T.AM.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட் • தி சிமெண்ட் மார்கெடிங் கோ. ஆப் இந்தியா லிட்.



சிரஞ்சீவி K. S. சிவசுப்பிரமணியன், B. A. (Reserve Bank of India, Bombay) அவர்களுக்கும் குமாரி T. R. பத்மஜா தேவி (ஆஜா)க்கும் திருமணம் சமீபத்தில் பம்பாயில் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்

விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து பார்க்கிறாள்.

சமையலறையில் எலிகளின் அட்டகாசம் தாங்கவில்லை. அத்தனை ரகளையிலும் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறான் அவன்.

எப்படி முடிகிறது இவரால்? கல்யாணத்துக்குப் பின்கூட இப்படித்தான்...!

அவள் உடல் சிலிர்க்கிறது, அந்த இன்பத்தை நினைக்கும்போதே.

விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொள்கிறாள்.

இப்போது அவன் உண்மையாகவே கதவைத் தட்டுகிறான். நெடு நேரம் உறங்கி விட்ட வெட்கம் முகத்தைப் பூரண சந்திரனாக மாற்றி விருக்கிறது. அதைத் துடைத்துக்கொண்டே எழுந்தோடிக் கதவைத் திறக்கிறாள் சுமதி. பரபரப்போடு குளியலறைக்கு ஓடுகிறான். பெண்களுக்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன அந்த வீட்டில்.

குளித்து முடித்துவிட்டு அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள் சுமதி. கண்ணாடி முன் உட்கார்ந்திருக்கும்போது, தானே அந்த வீட்டின் எஜமானியாக மாறி விட்டது போன்ற பிரமை! பிரமை என்ன, இன்னும் சில மாதங்களில் நடக்கப் போகும் உண்மையும் அதுதானே!

அந்த வீட்டையும் அவனையும் பிரிந்து செல்ல மனமே யில்லை சுமதிக்கு. ஆனால் அதற்காக அங்கேயே இருந்துவிட முடியுமா, என்ன?

பஸ் ஸ்டாப் வரை வந்து அவளை வண்டி ஏற்றி வழியனுப்பி வைக்கிறான் சுந்தரம்.

நாட்கள் உதிர்கின்றன. ஆனால் சுமதியின் மனத்திலோ நாள்தோறும் எண்ணற்ற கனவு மலர்கள், கற்பனை மலர்கள், பூத்துக் குலுங்குகின்றன. சுந்தரத்தின் விருப்பத்தை எழுத்து உருவமாகத் தாங்கி முறைப்படி வரவேண்டிய கடிதத்தை ஒவ்வொரு நாளும் எதிர் பார்க்கிறாள் அவள். அவன் வீட்டில் தங்கிய அந்த ஓர் இரவின் மகிழ்ச்சியை இதயத்துக்குள் வைத்துப் பூட்டிப் பத்திரப்படுத்திக் கொண்டு இரவு நேரங்களில் மட்டும் இரகசியமாக எடுத்து எடுத்துப் பார்த்துக்கொள்கிறாள். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வித இன்பம்!

ஒரு நாள் திடீரென்று அந்தக் கடிதம் வந்து விடுகிறது. தபால்காரர் கொடுத்துச் சென்ற அதை அவள் கண்களில் ஒற்றிக் கொண்டு நெஞ்சோடு அணைத்து நெடுங் கனவில் நினைக்கிறாள்.

ஆம்! 'அவரு'டைய கடிதம்தான் அது. கிராமத்துக்குப் போயிருப்பார் போலிருக்கிறது. அங்கிருந்து எழுதியிருக்கிறார். கடிதத்தின் மேல் 'கொன்றையாறு' என்ற அவருடைய கிராமத்துத் தபால் முத்திரை காணப்படுகிறதே!

உள்ளே இருக்கும் கடிதத்தில் என்ன எழுதியிருப்பார்?

'சுமதியை எங்களுக்குப் பிடித்திருக்கிறது. எப்போது உங்களுக்கு வசதியாக இருக்கும் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ள?...' என்று கேட்டிருப்பாரோ? கூடவே எனக்கும் ஏதாவது கடிதம் இடிதம்...!

சேச்சே! என்ன அசட்டுத்தனமான ஆசை எனக்கு! அப்பாவுக்கு விலாசமிட்டிருக்கும் கடிதத்தில் எனக்கு எப்படி எழுதியிருப்பார்?

மகள் கொண்டு வந்து கொடுத்த கடிதத்தை வாங்கிப் பிரித்துப்பார்க்கிறார் தந்தை. மூர்ச்சையாகி விழாத குறைதான். தொப்பென்று சுவிச்சேரில் சாய்கிறார். கண்கள் கலங்கிச் சிவக்கின்றன. முகம் பேயறைந்தது போல் வெளுத்து விடுகிறது.

''என்னங்க? என்னங்க? உடம்புக்கு என்னங்க?....''

அலறியடித்துக் கொண்டே அப்பாவின் அருகே ஓடுகிறாள் அம்மா. அப்பா கொடுத்த கடிதத்தை அவளும் படித்துப் பார்க்கிறாள்.

''அடிப் பாவி! எவ்வளவோ நம்பிக்கை யோடிருந்தோம்... கெடுத்து விட்டாயே காரியத்தை'' என்று இரைந்து கொண்டே உட்கார்ந்து விடுகிறாள். வாலறுந்த பட்டம் போல் கீழே விழுகிறது கடிதம். அதை எடுத்துப் பார்க்கிறாள் சுமதி. சுந்தரம் எழுதியிருந்தான்:

''மறைவாகப் பூத்து அடக்கமாக மணக்கும் மனோரஞ்சிதம் எந்தப் புயலுக்கும் அஞ்சுவதில்லை. 'கொல்'லென்று மலர்ந்து கொடி நிறையச் சிரிக்கும் மல்லிகை மலர்களோ சின்னஞ் சிறு காற்றையும் தாங்காது உதிர்கின்றன. முன்னதைக் கொம்பிலிருந்து பறித்தெடுக்க வேண்டும். அதன் பலம் அடக்கமே! பின்னதைத் தரையிலேயே பொறுக்கலாம். அதன் பலவீனம் அடக்கமின்மையே!

''மலர்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் பொருந்துவதாகும் இது. பெண்ணும் மலரைப் போல் பறிக்கப்பட வேண்டியவளே தவிர, பொறுக்கப்பட வேண்டியவள் அல்ல. அதில் தான் அவளுக்குப் பெருமை!

''மனோரஞ்சிதம் என்று நினைத்திருந்தேன் சுமதியை. அவளோ, தான் மல்லிகைதான் என்பதை அன்று இரவு நிரூபித்து விட்டாள்.

''என்னை மன்னித்துவிடுங்கள்...''

செயலற்று நிற்கிறாள் சுமதி.


பாலக்குடி தபால் ஆபீசில் ஒரு படிக்காத முதியவர் தம் பையன் டில்லியில் சில்லறை இல்லாமல் மிகவும் கஷ்டப் படுவதாக எழுதியிருந்ததால் எங்கிருந்தோ கஷ்டப்பட்டு இருபது ரூபாய்க்குச் சில்லறை வாங்கிக் கொண்டு வந்து ''மணியார்டரி''ல் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.



பார்த்து அனுதாபப்பட்டவர்: எஸ். நடராசன்

ஒளிசிந்தும் வண்ணங்கள்!





உலகம் பலவிதம் என்பர். உலகத்திலுள்ள மனிதர்களிலும் பலப் பல விதம் உண்டல்லவா? இதோ சில மனிதர்களின் விசித்திரச் செயல்களைப் பார்ப்போம்!


★ ஒரு பெரிய மனிதரிடமிருந்து கார் திருட்டுப் போய்விட்டது. பின்னர், தபாலில் ஒரு பார்சல் வந்தது.


பிரித்துப் பார்த்தால் அவரது டிரைவிங் 'லைசென்ஸ்'ம் மற்றும் சில தஸ்தாவேஜுகளும் இருந்தன. அதை அனுப்பியவன் எழுதியிருந்தான்:

ஐயா, கார் போனால் வேறு வாங்கிக் கொள்ளலாம். டிரைவிங் 'லைசென்ஸ்'ம் மற்றும் பத்திரங்களும் சுலபத்தில் வாங்கக் கூடியவையா? -- இது நடந்தது பிரான்ஸில்.

மனிதன் மாறிவிட்டான்!

★ பிரான்ஸ் நாடுதான் புதுப்புது டிசைன்களுக்குப் பெயர் போனதாயிற்றே! அங்கு Jacques carelman என்ற கலைஞர் புதிய சில பொருள்களைப் படைத்திருக்கிறார். தினந் தினம் நாம் பல பொருள்களைக் கையாள்கிறோம். குடை, மூக்குக் கண்ணாடி, சோப்புப் பெட்டி, கடிகாரம், இஸ்திரிப் பெட்டி இப்படிப் பல் பல. திரும்பத் திரும்ப இவை ஒரே மாதிரியே தோற்றமளிக்கின்றனவே, அலுக்காதா? மாறுதல் இருந்தாலன்றோ சுவையாக இருக்கும் என்று விளக்கம் கொடுக்கும் இவர், கூழாங் கற்களை உபயோகித்து மணி பார்க்கும் கருவி, குடைகளுக்குப் பலவித உருவங்களில் உறைகள், சக்கரம் வைத்த இஸ்திரிப்பெட்டி, சாவித் துளை வழியே எட்டிப் பார்ப்பவர்களுக்காக மிகச் சிறிய டெலஸ்கோப் இப்படிப் பல்பல பொருள்களை உருவாக்கியுள்ளார்.






★ அல்லஸ் வாலிஸ் என்ற எண்பத்தெழு வயதான மாது சமீபத்தில் இறந்தபோது 30,000 பவுன் மதிப்புள்ள தனது ஆஸ்தியை லண்டன்நகரில் உள்ள 'வெஸ்ட்மின்ஸ்டர்' பாங்குக்கு எழுதி வைத்து விட்டாள்.

அதற்கு அவள் கூறிய காரணம்: நான் கேட்ட போதெல்லாம் பணம் கொடுத்தது அந்த பாங்கு தான்! எனவே எனது ஒரே நண்பன் அதுதான்!

★ செனேட்டர் வில்லியம் ஹால்வொர்த் என்பவரின் மனைவி மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர். ஹால்வொர்த் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்காகத் தயார் செய்து வைத்திருக்கும் பிரசங்கங்களில் அவரே கண்டுபிடிக்க முடியாதபடி மாற்றுக் கொள்கைகளை நாசூக்காகப் புகுத்தி விடுவாள். இதை அவர் படித்துவிட்டுப் பிரசங்கம் சுவாரசியமாக அமையவில்லையே என்று அலுத்துக் கொண்டு வந்து சேருவார். ஒருநாள் விஷயம் அம்பலமாகிவிட்டது. விளைவு: விவாகரத்து.




★ கிளார் கிரீஸ் என்பவர் ஒரு 'ஸால்மன்' மீனைப் பிடித்துத் தக்க அடையாளமிட்டார். லண்டனில் உள்ள பிரபல இன்ஷுரன்ஸ் கம்பெனி ஒன்றில் 10,000 டாலருக்கு இன்ஷுர் செய்தார். 500 டாலர் வீதம் 'பிரீமியம்' கட்டவும் ஒப்புக்கொண்டார். ஒரு விளம்பரத்தை வெளியிட்டார் பத்திரிகைகளில்.

"தக்க அடையாளமிட்ட 'ஸால்மன்' ஒன்று ஜார்ஜியா ஜல சந்தியில் விடப்பட்டுள்ளது. இதை பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கும் வான்கூவர் தீவுக்கும் இடையில் பிடித்துத் தருபவர்களுக்கு 10,000 டாலர் தரப்படும்."

பாக்கியசாலி யாரோ?

- தொகுப்பு: "கருடன்"





ஒரு பத்திரிகையில் பத்தாண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தவருக்கு, 'நாமும் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்தினால் என்ன?' என்ற ஆசையும், அரை டஜன் படங்களை டைரக்ட் செய்து முடித்தவருக்குச் 'சொந்தப் படம் எடுக்கலாமே!' என்ற சபலமும், ஏழெட்டு ஆண்டுகளாக வாடகைக்குக் கார் ஓட்டிக் கொண்டிருப்பவருக்குச் 'சொந்தத்தில் வண்டி வாங்கி டாக்ஸி ஓட்ட வேண்டும்' என்ற எண்ணமும் பிறப்பது நியாயமென்றால் பலராமனுக்கு அப்படிப்பட்ட ஓர் ஆசை தோன்றியதும் முற்றிலும் நியாயம்தான்.

பலராமன் உதவி ஆசிரியனோ, டைரக்டரோ, டாக்ஸி டிரைவரோ அல்ல. சினிமா வந்த பிறகு சவலைக் குழந்தைகளாகி விட்டதாகக் கருதப்படும் சங்கீதத்தையும் நாடகத்



கிம்புருவும் திம்புராவும்

தையும் கைகொடுத்து ஆதரிப்பதற்கென்றே நாளுக்கு நாள், பேட்டைக்குப் பேட்டை முளைத்துக் கிளைத்து வரும் சபாக்களில் ஒன்றான 'தும்புரு பைன் ஆர்ட்ஸ்' சபாவின் தூண்களில் அவன் ஒருவன். அதாவது அதன் துணைக் காரியதரிசி.

'தும்புரு பைன் ஆர்ட்ஸ்' நன்றாகத்தான் நடந்து கொண்டு வந்தது. நகரின் பிரபல அரங்கம் ஒன்றில் மாதந்தோறும் கச்சேரி நடனம், நாடகம் என்று நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டுதான் வந்தது.

ஆனாலும் பலராமன் ஏன் அப்படியொரு முடிவுக்கு வந்தான்? அதைத்தான் நான் கேட்டேன்.

''நமக்கும் அந்தச் சபாவுக்கும் இனிமேல் ஒத்து வராதப்பா!'' என்பதுதான் பலராமனின் பதிலாக இருந்தது.

''ஒத்து வராதென்றால்?...''

''அப்படியென்றால் விட்டுவிட வேண்டியதுதான்... என்றால் இனியும் அங்கே துணைக் காரியதரிசியாக இருப்பதென்பது முடியாது...''

''அதுதான் ஏன் என்கிறேன்?''

''கந்தக் கச்சடாப் பேர்வழிகள் அத்தனை பேரும்!....''

''யாரைச் சொல்கிறாய்? இன்னொரு துணைக் காரியதரிசி வெங்கிட்டுவையா?''

''அவனையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் ..... எல்லோருமே உதவாக்கரை ஆசாமிகள்...ஒருத்தனுக்காவது ஓர் 'ஐடியா'வும் கிடையாது; நாம் சொன்னாலும் கேட்க மாட்டான்கள்!...''

'ஓகோ! இவன் ஏதோ சொல்லி, மற்றவர்கள் அதைத் தள்ளிவிட்டார்கள் போலிருக்கிறது' என்று புரிந்து கொண்டேன். அப்புறம் மெள்ள மெள்ளத் தூண்டில் வீசிப் பார்த்ததில் முழு விவரமும் தெரிய வந்தது.

பலராமனின் காரியாலயப் புது மானேஜரின் திருக்குமாரத்தி செல்வி நீலாவின் (வயது ஆறேகால்) நாட்டிய நிகழ்ச்சி ஒன்றைச் சபாவில் வைக்க வேண்டும் என்று பலராமன் ஆலோசனை கூறினானாம். அதை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையாம். அதனால் வந்த கோளாறுதான் இது. இன்னும் கொஞ்சம் ஆழமாகத் 'தூண்டில் போட்டதில் பலராமனின் 'பிரமோஷன்' சமாசாரம் இந்த நாட்டிய நிகழ்ச்சியில் அடங்கியிருப்பது தெரிய வந்தது. பலராமனின் நியாயமான தார்மீகமான — சுயநலம் தவிர வேறெந்தக்



கலப்படமும் இல்லாத — கோபத்தைப் புரிந்து கொண்டேன்.

''சரி, வேறு என்ன முடிவு செய்திருக்கிறாய்? அந்தக் கச்சடாக்களின் சகவாசமே வேண்டாமென்று நிர்மானித்து விட்டாயா?'' என்று கேட்டேன்.

'' ஆமாம்... நேற்று சாயந்திரம்தான் என் ராஜிநாமாவைத் தலைவர் முகத்திலே விட்டெறிந்தேன்...''



''......''

''அடுத்தபடி நாமே ஒரு சபா தொடங்கலாம் என்பது என் எண்ணம்...''

'' சபாவா?.... நீயா தொடங்கப் போகிறாய்?...''

''நானேதான்!... நான் எல்லாவற்றையும் யோசனை பண்ணிப் பார்த்து விட்டேன். நமக்கு நிச்சயம் அதிலே லாபம் இருக்கும்...''

''அது சரி, 'நாம்' என்றால் யார் யார்?''

''ஏன்? நான் இருக்கிறேன்; நீ இருக்கிறாய்.. அப்புறம் நம்ம பழைய சபா அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்...''

''அவர்கள்தான் ஏற்கனவே 'தும்புரு' விலே அங்கத்தினர்களாக இருக்கிறார்களே?''

''இதிலேயும் அங்கத்தினர்களாக இருந்தால் குடியா முழுகிவிடும்? அப்படி இரண்டு சபாவிலே இருக்க வசதி இல்லாதவர்கள் 'தும்புரு'வை விட்டு விட்டு நம்மிடம் வந்து விடுகிறார்கள்!...''

''நடக்குமா அது?...''

''ஏன் நடக்காமல்? இதோ பார்! 'தும்புரு'க்காரர்கள் எத்தனை பேர் நம்ம சபாவிலே அங்கத்தினர் ஆவதாகச் சொல்லிக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்!'' என்று சொல்லி, சட்டைப் பையிலிருந்து இரண்டு தாள்களை உருவி என்னிடம் நீட்டினான்.

அரசியலில் ஒருத்தரை ஒருத்தர் கவிழ்ப்பதற்குக் கையெழுத்து வாங்குவார்களே, அதே போலப் பெரியதொரு பட்டியலே இருந்தது.

''அப்படியென்றால் சரி, ஆரம்பித்து விடவேண்டியதுதான்.... சபாவுக்குப் பெயர் என்ன வைப்பதாக உத்தேசம்?''

'' 'தம்புரா பைன் ஆர்ட்ஸ்'!''

''கேட்பதற்குத் 'தும்புரு' பெயர்மாதிரியே இருக்கிறதே?''

''இருக்கட்டுமே என்றுதான் வைத்தேன்!''

''தும்புருக்காரர்கள் நம்மோடு சண்டைக்கு வர மாட்டார்களா?''

''அதெல்லாம் முடியாது. டிரேட் மார்க் சட்டப்படிகூட நம்மோடு அவர்கள் மோத முடியாது. நான் அந்தச் சட்டத்தையும் புரட்டிப் பார்த்து விட்டேன்...''

''சரி, பெயர் அப்படியே இருக்கட்டும்... 'புரோகிராம்' என்ன கொடுக்கப்போகிறாய் ?''

'' தும்புருவைவிட ஒரு 'பெர்பாமென்ஸ்' அதிகமாக நாம் கொடுப்போம். அவன் ஒரு மாசத்திலே ஒரு கச்சேரி, இரண்டு நாடகங்கள் தானே கொடுக்கிறான்? நாம் இரண்டு கச்சேரி, இரண்டு நாடகங்கள் கொடுப்போம்?...''


''சமாளிக்க முடியுமா உன்னாலே?...''

''பூ! இதென்ன பிரமாதம்? என்னையாரென்று நினைத்தாய்? பலராமனுக்கும்!'' என்று கதாகாலட்சேபக்காரர்கள் பாணியில் சிலேடை பண்ணிவிட்டு என்னிடமிருந்து சந்தாவாகப் பத்து ரூபாயும் நன்கொடையாக ஐந்து ரூபாயும் பிடுங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தான்.

சொன்னபடியே செய்தும் காட்டினான் பலராமன். அடுத்த வாரமே பத்திரிகைகளில் 'தம்புரா பைன் ஆர்ட்ஸ்' விளம்பரம் பெரிதாக வந்தது. சபாத் தலைவரின் பெயர் நான் கேள்விப்படாததாக இருந்தது. (அப்புறம் விசாரித்ததில் அவன் மானேஜர் பெயர்தான் அது என்று தெரியவந்தது.) கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை மாதாமாதம் வழங்கப் போவதாக விளம்பரத்தில் ஆசை காட்டியிருந்தது. அத்துடன், வெளியூர் பஸ் கண்டக்டர்கள் 'ஒரு ஆள், ஒரு ஆள்' என்று கூவி ஆள் சேர்ப்பதுபோல், இன்னும் எழுபது பேருக்குத்தான் இடம் இருக்கிறது' என்று 'மெம்பர்ஷிப்'புக்கு வேறு வலை விசியிருந்தான்.

புது சபா ஆரம்பித்து இரண்டு மாதங்களாகி விட்டன. பலராமன் என்ன மந்திரம் செய்தானோ, தும்புரு'வில் பாதிக்குக் கிட்டத்தட்ட 'தம்புரா'வுக்கு வந்து விட்டார்கள். முதல் மாதம் ஒரு கச்சேரி, ஒரு நடனம் (செல்வி நீலாதான்!) இரண்டு நாடகங்கள்





''ஏய்! கல்யாணம் ஆயிடுத்தா? சொல்லவே இல்லையே....!''

போட்டான் பலராமன். இரண்டாவது மாதம் ஒரு கச்சேரியும் மூன்று நாடகங்களும் போட்டான்.

மூன்றாவது மாதம் நான்கு நிகழ்ச்சிகளும் நாடகங்களே என்ற அறிவிப்பு பத்திரிகையில் வெளிவந்ததற்கு மறுநாள் பலராமன் என்னைத் தேடி ஓடி வந்தான்.

''ஆபத்து! ஆபத்து!'' என்றான் பதற்றத்துடன்.

''என்ன ஆகிவிட்டது?'' என்று ஒரு கணம் கலங்கிப் போனேன் நான்.

''தும்புருக்காரன் நம்மை முந்திக்கொள்ளப் பார்க்கிறான். அடுத்த மாதம் ஒரு கச்சேரி, இரண்டு நாடகங்கள், ஒரு சினிமா போடப் போகிறானாம்...''

''போட்டுமே! இதனால் நமக்கென்ன நஷ்டம்?''

''அறிவில்லாமல் பேசுகிறாயே? அவன் சினிமா அதிகப்படியாகக் காட்டுகிறான் என்றால் நம்ம ஆசாமிகள் கூட அங்கே விழுந்தடித்துக் கொண்டு ஓடுவார்களே!... சுத்த வெட்கம் கெட்ட பசங்களாச்சே நம்ம அங்கத்தினர்கள் எல்லாம்!''

அந்த 'வெட்கம் கெட்டவர்'களுள் நானும் அடக்கம் என்பதைச் சற்று மறந்துவிட்டுப் பலராமன் சொன்னதை யோசித்தேன்.

''நீ சொல்வது வாஸ்தவம்தான்... எங்கே நிறையப் 'புரோகிராம்கள்' இருக்கின்றனவோ அங்கேதான் யாருக்குமே போகத் தோன்றும்...''

''நாம் இப்போது என்ன பண்ணலாம்? அதைச் சொல் முதலில்!''

''நாமும் சினிமாப் போட்டால் என்ன?''

''நானும் அப்படித்தான் யோசித்தேன். ஆனால் ஒரு சினிமா போதாது. இரண்டு படங்கள் காட்டினால்தான் 'தும்புரு'வை விட நாம் உசத்தி என்ற உண்மை நம்ம மர மண்டைகளுக்கு உதயமாகும்!''

நான் என் மர மண்டையை ஆட்டி அவன் கூறியதை அப்படியே ஆமோதித்தேன்.

''சரி, இரண்டு படம். நாடகம் எத்தனை?''

''இரண்டு படம், ஒரு நாடகம், ஒரு நடனம்!''

''சேயிப்பா! தூமாய்த்தும் பன்று!''

அடுத்த மாதம் இன்னொரு பிரச்னையுடன் வந்து சேர்ந்தான் பலராமன்.

தும்புருக்காரர்களும் அந்த மாதம் முதற்கொண்டு இரண்டு படங்கள் காட்டப் போகிறார்களாம். இதைச் சொல்லிவிட்டு, ''நாம் புதிதாக ஏதாவது செய்ய வேண்டாமா?'' என்று கேட்டான்.

''கட்டாயம் செய்தாக வேண்டும்!''

''நீ கொஞ்சம் யோசி. நானும் யோசிக்கிறேன்'' என்றவன் தன் அரை வழுக்கை மண்டையைப் போட்டு ஐந்து நிமிஷம் பலமாகத் தட்டினான். பிறகு, ''நாம் தெருக்கூத்துப் போட்டால் என்ன?'' என்று கேட்டான்.

''நாம் போன மாதம் போட்டோமே, 'வந்தால் வரமாட்டேன்!', 'முட்டைக்கோஸ் என்ன விலை?' என்று இரண்டு நாடகங்கள், அந்த இரண்டுமே தெருக் கூத்து மாதிரிதான் இருந்ததாக ரொம்பப் பேர் அபிப்பிராயப் பட்டார்கள்!''

''கிடக்கிறார்கள் விடு! ரசிக்கத் தெரியாத ஜடங்கள்!... நம்ம தெருக்கூத்து அசல்! ஒரிஜினல் சரக்கு!''

'' 'காரம், மணம், குணம் நிறைந்த ஒரிஜினல் பொடி' என்று விளம்பரம் பண்ணுவார்களே, அது போல் 'சோகம், வீரம், ஹாஸ்யம் கலந்த ஒரிஜினல் தெருக் கூத்து' என்று விளம்பரம் பண்ணலாமே!...''

''ஐடியா! ரொம்ப நல்ல ஐடியா! உனக்குக் கூட எப்படி இதுமாதிரி யெல்லாம் தோன்றுகிறது! ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்ற பலராமன் மறுநாளே தெருக் கூத்தை 'முடிவு' செய்துவிட்டான்.

'தம்புரா' கூத்துப்போட்டால், 'தும்புரு'க்காரர்கள் தூங்கிக் கொண்டிருப்பார்களா, என்ன? அடுத்த மாதமே அவர்கள் 'பொம்மலாட்டம்' என்று அறிவித்தார்கள்.

''பொம்மலாட்டமா போடுகிறான்? நான் என்ன பண்ணுகிறேன், பார்!'' என்று மார் தட்டினான் பலராமன்.

''என்ன பண்ணுவதாக உத்தேசம்?''

''கரகம் ஏற்பாடு செய்யப் போகிறேன்!''

''வெரி குட்!''


''ஒன்று மேலே ஒன்றாக மூன்று கரகங்களை அடுக்கி வைத்துக் கொண்டு ஆடுவான் எங்களிலே இருக்கிற மம்முட்டியான் என்கிற பேர்வழி. அதிலும் இப்போ சரக்கு வேறு கிடைக்கிறதல்லவா? ஆட்டம் 'டாப்'பாக இருக்கும்!... அவனையே ஏற்பாடு பண்ணி விடுகிறேன்!...''

கரகம் நடந்தது. அன்று மம்முட்டியான் ஆடி ஓய்கிற வழியாகக் காணோம். காரணம் 'உள்ளே' அவன் போட்டிருந்த 'சரக்கு'த்தான். நல்ல வேளையாகக் கையிலே இருந்த பிரம்பைச் சபையினர் மீது அவன் வீசுவதற்கு முன்பாகத் திரையைப் போட்டு ஒப்பேற்றினோம்.

அதற்குப் பிறகு 'தும்புரு' — 'தம்புரா' போட்டி இன்னும் வலுவடைந்தது. அவர்கள் மாஜிக்ஷோ என்றால் நாங்கள் குதிப்பொட்டுவம்; அவர்கள் காலையிலே கதக்களி என்றால் நாங்கள் ஓட்டந்துள்ளல்; அங்கே மிமிக்ரி என்றால் இங்கே 'வென்ட்ரிலோக்கிஸம்'...

பஜாஜ் அளிக்கும்
மகத்தானதோர் சலுகை

ஒவ்வொரு டீலக்ஸ் ப்ரஷர் குக்கருடன்
பயனுள்ள ஒரு இட்டிலி தட்டு இலவசம்!



இப்போது நீங்கள ஸ்பெஷல் பஜாஜ் டீலக்ஸ் ப்ரஷர் குக்கர் வாங்கும்போது இருமடங்கு மகிழ்ச்சி உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் கொடுக்கும் பணத்துக்கும் பன்மடங்கு பலன தரும் மிக அழகான, எடுப்பான கவர்ச்சிமிக்க ப்ரஷர் குக்கரோடு, உங்களுக்கு ஒரு பயன்தரும் இட்டிலி தட்டும் இனமாகக் கிடைக்கிறது!

முந்துங்கள்! 1971 நவம்பர் 15ம் தேதி முதல் 1972 ஜனவரி 15ம் தேதி வரையுள்ள இரண்டே மாதங்களுக்கு மட்டுமே இந்தச் சிறப்பான சலுகை!

*இச் சலுகை தென்னிந்தியாவுக்கு மட்டுமே.

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

இப்படிப் போட்டி வலுப்பெற்று வரும் போது ஒரு நாள் (வழக்கம் போலவே) பர பரப்புடன் வந்தான் பலராமன்.

''போச்சு! போச்சு! என் 'ஐடியா' கோவிந் தாவாகிவிட்டது!'' என்றான்.

''என்ன ஆயிற்று?''

''அங்கத்தினர்களையெல்லாம் எங்காவது வெளியூர் அழைத்துப் போகலாம் என்று சொல்லி வந்தேன் இல்லையா? அடுத்த மாதம் தும்புரு எல்லோரையும் வேடந்தாங்கலுக் குப் 'பிக்னிக்' அழைத்துக் கொண்டு போகப் போகிறான்.''

''நாம் வேண்டுமானால் திருக்கழுக்குன் றத்துக்குப் போய்க் கழுகுகளைப் பார்த்து விட்டு வருவோமே!''

''அசடு! அசடு!... அது கூடாது.''

பலராமன் யோசித்தான்.

''நாம் எதைச் செய்தாலும் இந்தத் தும் புருப் பயல் அதே போல் இன்னொன்றைச் செய்துவிடுகிறான். அவன் மூக்கை உடைக்கிற மாதிரி ஏதாவது பண்ணியாக வேண்டும்... அதாவது, அவன் நமக்கு அப்புறம் அதே மாதிரி ஏதாவது பண்ணினாலும், நம்மைப் பார்த்துப் பண்ணினான் என்று சொல்லும்படி யாக இருக்க வேண்டும்!'' என்றான்.

''அப்படிப் பார்க்கப் போனால் நம்ம சபாவை இழுத்து மூடிவிடலாமே! அவனும் என்றைக்காவது ஒரு நாள் மூடத்தானே போகிறான்? நம்மைப் பார்த்து அவன் மூடிய தாகப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள லாமே!...''

பலராமன் என்னைப் பார்த்த பார்வையில் அக்கினித் திராவகம் தெறித்தது. ''முட் டாள்! முட்டாள்! சமய சந்தர்ப்பம் தெரி யாமல் ஜோக் அடிக்கிறான்!'' என்று பற்களை நறநறத்தான். பிறகு ஏதோ முடிவுக்கு வந்த வனாக, ''சரி, இந்த மாசம் 18ந் தேதி சபா வுக்கு வந்து பார்! புதுமை பண்ணிக் காட்டு கிறேன்!'' என்று சொல்லி விட்டுப் போனான்.

அடுத்த மாதம் அந்தத் தேதி எப்போது வரும் என்று காத்திருந்தேன். நிகழ்ச்சி என்னவென்று அறிவிக்கப்படவே இல்லை. 'காலை பத்து மணிக்கு' என்று மட்டும் டிக் கெட்டில் போட்டிருந்தார்கள்.

கொட்டகையிலே போய்ப் பார்த்தால் நாற்காலிகளையும் காணோம்; ஒன்றையும் காணோம். தரையிலே நீள நீளமாகச் சாண் அகலத்துக்குப் பாய் விரித்திருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை யாதலால் அங்கத்தினர்கள் நிறையப் பேர் வந்திருந்தனர். எனக்குத் தெரிந்த எல்லோரையும் கேட்டுப் பார்த்து விட்டேன். ஒருத்தருக்காவது என்ன நிகழ்ச்சி என்று தெரியவில்லை....

பத்து மணிக்கு ஒலிபெருக்கியில், ''எல் லோரும் தயவுசெய்து பாயில் வந்து உட் காருங்கள்!'' என்று வேண்டுகோள் விடுத் தான் பலராமன். உட்கார்ந்தோம்.

அடுத்த நிமிடம்—

மேடைக்குப் பின்னாலிருந்து கரகரவென்று நிறையப் பேர்கள் வந்தார்கள். ஒவ்வொருவ ருக்கும் முன்னால் வாழை இலையைப் பரப்பி னார்கள். எல்லோரும் திகைத்துப் போய் உட் கார்ந்திருக்கும்போதே இலையில் மளமள வென்று சித்திரான்னங்கள்பரிமாறப்பட்டன.

'என்ன இது!' என்று வியந்து கொண்டிருக் கும்போது பலராமனின் குரல் ஒலிபெருக்கி யில் மீண்டும் ஒலித்தது. ''உங்களுக்கெல் லாம் இன்று இந்த விருந்துதான் புரோகிராம். எந்தப் புரோகிராமையும் பார்த்துவிட்டுச் 'சுகமில்லை' என்று சப்புக் கொட்டிக் கொண்டு போகிறவர்கள்கூட இன்று அப்படிச் சொல்ல முடியாதபடிக்கு இந்த நிகழ்ச்சியை அமைத்து விட்டோம். மற்ற சபாவிலே கண்ணுக்கும் காதுக்கும் மட்டும்தான் விருந்து கிடைக்கும். நாங்கள் அதற்கு ஒரு படி மேலே போய் நிஜ விருந்தே படைத்திருக்கிறோம். இனி மாதா மாதம் இந்த நிகழ்ச்சி கட்டாயம் இடம் பெறும். நீங்கள் இன்று போல் என்றும் எங்களையே ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்!''

சாப்பாடு முடிந்த பிறகு பலராமன் என் னைத் தனியே அழைத்துக் கொண்டு போய், ''எப்படி நம்ம ஐடியா?... எந்தச் சபாக் காரன் இதுவரை சாப்பாடு போட்டான் இதுமாதிரி? தும்புருப் பயல் இன்னும் இதைப் பண்ணவில்லையே?'' என்று கேட்டான் வெற் றிப் பெருமிதத்துடன்.

''நல்ல ஐடியாதான் பலராமா...! இரண்டு விஷயங்களுக்காகத் 'தம்புரா'வை அங்கத் தினர்கள் ஞாபகம்வைத்துக்கொள்வார்கள்!''


''என்ன அது?''

''முதலில் யாரும் செய்யாத புதுமையாக நீ இப்படிச் சாப்பாடு போட்டதற்காக... இரண்டாவது நாளைக்கு வயிற்றை வலிக்கும் போது... அந்த வெஜிடபிள் பிரியாணி இன் னும் கொஞ்சம் வெந்திருக்கவேண்டும்....அது தான் வயிற்றுக்குள் அடுத்த புரோகிராமை ஆரம்பித்து வைக்கப் போகிறது!...''

''எதைச் செய்தாலும் இப்படிக் குற்றம் கண்டுபிடிக்கிற அங்கத்தினர்களை மேடையிலே ஏற்றி அவர்களைப் 'பளார், பளார்' என்று நாலு அறை விடுவதுதான் என்னுடைய அடுத்த ஐடியா!'' என்று பலராமன் ஆத்திரத் துடன் கையை ஓங்கிக்கொண்டு எழுந்து பாய வும் வாயைப் பொத்திக் கொண்டு வேகமாக வெளியேறினேன்.

வாசலில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந் தார்கள்: ''தும்புரு இதைவிட நன்றாகச் சாப் பாடு போட்டாலும் போடலாம் ஐயா... அடுத்த மாசம் அங்கேயும் சேர்ந்துவிட வேண்டியதுதான்...''

எனக்கும் 'தும்புரு'வில் சேரச் சபலம் தான். ஆனால் பலராமனை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது!



தமிழக அரசின் சுகாதாரத் துறை அண்மையில் ஒரு விளம்பரத்தை ஒரு பிரபல ஆங்கில தினசரியில் வெளியிட்டுள்ளது. இதில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, D. Litt. என உள்ளது. டாக்டர் போட்டால் D. Litt. போடத் தேவையில்லை. ஒரு டாக்டர் பட்டத்துக்கே இத்தனை ஆர்ப்பாட்டம் என்றால் பல பட்டங்கள் கொடுத்தால் என்ன ஆகுமோ தெரியாது.

நேரு அவர்களுக்கு எண்பத்து நாலு சர்வ கலாசாலைகள் டாக்டர் பட்டம் கொடுத்தன! அவர் டாக்டர்நேரு எனப் போட்டுக்கொள்ள வில்லை. அது இப்போது நினைவுக்கு வருகிறது.

கும்பகோணம்
3–11–71

ஜி. கணபதி

★சிம்ஸன் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள். பொதுவாகவே தொழிலாளர் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் குழம்பி வருவதற்கு மூல காரணம் ''கட்சிக் கண்ணோட்டம்.'' அவர் அவர்களுக்குத் தங்கள் கட்சி, யூனியனைக் கைப்பற்ற வேண்டும் என்பதிலேயே கவலை.

தொழிலாளர்கள் பிரச்னைக்குத் தீர்வு காணத் தெருவில் நின்று கொண்டிருக்கையில் கட்சியைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பது ஜனநாயகத்துக்குக் கறை.

இந்த நிலைமைகள் நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் எந்தத் தொழிற்சங்கத்திலும் கட்சிகள் பிரவேசிக்கக் கூடாது. பணம், பெண், மது — இவற்றைப் போல் 'கட்சி வெறி' என்பதும் ஒரு போதைப் பொருள். மனிதர்களைப் பிரித்துப் பாழாக்கும் வசீகரம் இதற்கு உண்டு. தொழிலாளர்கள் என்பவர்கள் தங்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் கட்சிகளை நம்பி யூனியனை அமைத்தல் கூடாது. தொழிலாளர்கள் நலனிலே அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் தொழிற்சங்கங்களில் கட்சியின் பிரவேசத்தைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டும் ; தண்டிக்கவும் வேண்டும்.

நான் இப்படிக் கூறுவதற்கு நம்பகமான காரணம் ஒன்று உண்டு. சிம்ஸன் தொழிலாளர்களுக்காகச் சிந்தாதிரிப் பேட்டை சிங்கண்ணச் செட்டித் தெருவில் 3–11–71 மாலை 7.00 மணிக்குக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக் கூட்டம் நடந்தது. அதில் பேசிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவர், ''தோழர்களே! உங்கள் பிரச்னைக்காக நான் இங்கே பேசுவதுடன் நிறுத்திக் கொள்ள வில்லை. நாளை சேலம், மதுரை, திருச்சி போன்ற ஊர்களுக்குச் சென்று உங்களுக்கு ஆதரவாகத் தொண்டர்களைத் திரட்டப் போகிறேன்'' என்று கூறினார்.

இந்த போர்களுடன் பேசி முடிக்க வேண்டிய காரியத்துக்கு ஐயாயிரம் பேரைத் திரட்டுவது எவ்வளவு ஆபத்தானது? இதனைப் புரிந்துகொள்ளாமல் அந்த அப்பாவித் தோழர்கள் கைதட்டி மகிழ்கிறார்கள். ஒரு சிறு விஷயத்தைச் சிக்கலாக்கித் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளத்தானே பார்க்கிறார்கள் அரசியல்வாதிகள் !

ஊரைத் திரட்டி ரத்தக்களரியை உண்டு பண்ணினால்தான் பிரச்னைகளைத் தீர்க்க முடியுமா ? காந்தி மகானும், நேருவும் காட்டிய அஹிம்சையும், சமாதானமும் காற்றோடு போய்விட்டனவா? சமாதானமாகப் பிரச்னைகளை முடிக்க முடியாமல் சண்டைக்குத் தயாரானோமானால் நாம் காந்தியத்துக்குத் துரோகம் விளைவித்தவர்கள் ஆவோம்.

சென்னை — 5
6–11–71

துலாமவன்

★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

எங்கள் ஊர் திருமருகலில் 26–10–71 அன்று நன்னிலம் சட்டசபை உறுப்பினரும் அவர்களது சகாக்களும் ஸ்ரீ இரத்தினகிரீசுவரர் ஆலயத்துக்கு வந்தனர். அப்பொழுது குருக்கள் விபூதியைக் கொடுத்ததும் அதை வாங்கிய சட்டசபை உறுப்பினர் விபூதியைக் குருக்கள் முகத்திலேயே ஊதிவிட்டார். கொடுத்த குங்குமத்தையும் வாங்கிக் கசக்கிக் கீழே போட்டுவிட்டார். இப்படிப்பட்ட பக்தி உடைய சட்டமன்ற உறுப்பினர் கோவிலுக்கு வரத்தான் வேண்டுமா ? பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் இச்செயலைச் செய்யலாமா? இதை நிர்வாகத் தர்மகர்த்தாவும் கண்டிக்கவில்லை. இதையெல்லாம் எடுத்துக் கூற ஆளில்லை என்று நினைக்கிறார்களா? இந்நிலை நீடித்தால் கோயில் எதற்கு? குருக்களை அவமானப்படுத்தத்தான் அவர்கள் கோவிலுக்கு வருகிறார்களா ?

தஞ்சாவூர்
2–11–71

கோ. ஆறுமுகம்

'கட்டணச் சீரமைப்பு' என்ற பெயரில் ஏழை எளிய மக்களால் தாங்க முடியாத அளவுக்குத் தமிழக அரசாங்கம் பஸ் கட்டணத்தை உயர்த்தி விட்டது. இந்த வரலாறு காணாத கட்டண உயர்வால் மக்கள் மாபெரும் அவதிக்குள்ளாகியிருப்பதைக் கண்கூடாகக் கண்டும் போக்குவரத்துத் துறை அமைச்சர், ''மற்ற மாநிலங்களைவிடத் தமிழ் நாட்டில் இப்போதும்கூட பஸ் கட்டணம் குறைவாகத்தான் வசூலிக்கப்படுகிறது'' என்று கூறி வருகிறார். அவரது கூற்று எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவதாக இருக்கிறது.

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பலவிதங்களிலும் சீர்குலைத்துச் சின்னாபின்னப்படுத்தி வரும் தி. மு. க. அமைச்சர்கள், 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வெற்றுவேட்டு வாசகத்தைக் கூறி, 'போலி அரசியல் நாடகம்' ஆடி வருவதை அவர்களே ஐயமற நிரூபித்து வருகிறார்கள்.

சென்னை — 21
30–10–71

எம். வி. சம்பந்தம்

அவனுக்கு ஏதோ மாதிரியிருந்தது. அவனுடைய அதிகாரியின் நாற்காலியில் அவன் அதிகாரியாக உட்காருவதற்கு முன்னால் உட்கார்ந்துகொள்வதில் சற்று எளிதில் புரிந்து கொள்ள முடியாத சங்கடம் இருந்தது. நாற்காலி சௌகரியமான நாற்காலி. உட்கார்ந்தபடியே சுழலக் கூடியது. மேஜைக் கண்ணாடி பளபளவென்று இருந்தது. அவனுடைய அதிகாரியின் இரு குழந்தைகளையும் சேர்த்தெடுத்த புகைப்படம் கண்ணாடி அடியிலிருந்து அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்த வண்ணம் இருந்தது. குழந்தைகளை எப்படிப் படம் எடுத்தாலும் அழகாகத்தான் அமைகிறது.

வேலு வந்து மேஜையை ஒட்டியவாறு நின்று கொண்டான். சிறிது நேரத்துக்குப் பிறகுதான், "குட்மார்னிங், சார்!" என்றான்.

"குட்மார்னிங்."

வேலு அந்த இடத்தைவிட்டு, அவனை அப்படியே நோக்கியபடி நிற்பதைவிட்டு நகரும் எண்ணமே இல்லாததுபோல் நின்று கொண்டிருந்தான். எப்படியும் இந்த வேலுவை அறைக்கு வெளியில் இருக்கும் ஸ்டூலில் உட்கார வைக்க வேண்டும். அதிகாரி லீவில் போயிருக்கும் மூன்று நாட்களிலும் வேலு இப்படி மேஜையைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு அறையை விட்டு வெளியே போனான்.

வேலு வெளியே சென்றதும் அதிகாரி தன்னிடம் கொடுத்துவிட்டுப் போன சாவியைக் கொண்டு மேஜை டிராயர்களைத் திறந்து காகிதங்களை வெளியே எடுத்து வைத்தான். அந்த மூன்று நாட்களில் அவன் பெரிதாக ஒன்றும் செய்யப் போவதில்லை, செய்ய வேண்டியதில்லை. அவனுடைய வழக்கமான வேலைகளைச் செய்தாலே போதும்.

வேலு காப்பி கொண்டு வந்து விட்டான். தம்ளரை மேஜையின் மீது வைத்துவிட்டு, "இரண்டு பேர் பார்க்க வந்திருக்காங்க" என்றான்.

"என்னையா ?"

"ஆமாம். காலையிலே எட்டு மணிக்கே வந்தாங்களாம். காவல்காரன் பத்துமணிக்குத்தான் இந்த ஆபீசு திறக்கும்னு சொல்லி அனுப்பிச்சானாம்."

"இப்போ எங்கேயிருக்காங்க ?"

"இங்கே வெளியாறதான்."

வாயெல்லாம் சூட்டில் துடிக்க அவன் காப்பியை அவசரமாகக் குடித்தான்.

"என்னவாம் ?" என்று கேட்டான்.

"ஏதோ உங்களைத்தான் பார்க்கணுமாம். சுத்திப் பார்க்கத்தான் இருக்கும்."

"சரி, போய் வரச் சொல்லு."

வேலு இருவரை அழைத்து வந்தான். இவன் நாற்காலியிலிருந்து எழுந்து, "வாருங்கள்" என்று சொல்லி மேஜையின் முன் இருந்த இரு நாற்காலிகளைக் காண்பித்து அவனும் உட்கார்ந்தான். தன் அதிகாரியின் நாற்காலியில் அவன் உருவம் பாதியளவு



காரணம்?

உற்று நோக்கிக் கொண்டிருந்தால் வேலையொன்றும் செய்ய முடியாது என்பது மட்டுமில்லை. அந்த மூன்று நாட்கள் தான் உயிர் தரித்திருப்பதைச் சகித்துக் கொள்ள முடியாது.

"காப்பி வாங்கிக் கொண்டு வா, வேலு."

வேலு அசையாமல் இருந்தான். பிறகு பதில் சொல்லிவிடலாம் என்று எண்ணியவன் போல், "அதுக்குள்ளாறயா? இப்பத்தானே பத்தேகால் ஆவுது?" என்றான்.

"எனக்கு இப்பவே வேண்டியிருக்கு."

வேலு நிதானமாக நகர்ந்து அந்த அறையின் ஒரு ஜன்னல் விளிம்பிலிருந்த கண்ணாடித் தம்ளரை எடுத்தான். தம்ளர் பக்கத்திலிருந்த மண் கூஜாவிலிருந்து சிறிது தண்ணீர் எடுத்து ஊற்றித் தம்ளரை அந்த அறையிலேயே குலுக்கிவிட்டு ஜன்னல் வழியாக அந்தக் கழுவிய தண்ணீரை வெளியே வீசிக் கொட்டி கூடச் சரியாகப் பொருந்த வில்லை என்று தோன்றிற்று.

வந்தவர்கள் இருவரும் உயரமாக இருந்தனர். ஒருவன் மீசை வைத்திருந்தான். சாதாரணமாகத்தான் உடை உடுத்தியிருந்தார்கள்.

"என்ன செய்ய முடியும் உங்களுக்கு என்னால்?" என்று இவன் ஆங்கிலத்தில் கேட்டான்.



"நாங்கள் வட இந்தியாவிலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று மிகவும் விருப்பப்படுகிறோம்." மீசையில்லாதவன் பேசினான். அவன் ஆங்கிலம் ஆங்கிலமாக இருந்தது. இடமாகப் பேசியே பழக்கப்பட்டவன் போல் சொற்களை உச்சரித்தான். அவன் உடைக்கு மீறிய தோரணையும்மொழி சுத்தமும் இருந்தன.

"எங்கள் அதிகாரி அடுத்த வெள்ளிக்கிழமை வந்துவிடுவார். வந்ததும் அனுமதி பெறலாம்." நான் அவர்களை வரவேற்றுப் பேசியும் தனக்கு அதிகாரம் ஒன்றுமில்லை என்று கூறியிருக்க வேண்டாம் என்று அவ





அசோகமித்திரன்

னுக்குத் தோன்றியது. வேறு அறையைவிட்டு விலகாமலிருந்தது அவன் பேச்சைக் கட்டுப்படுத்தியது.

"வெள்ளிக்கிழமைக்கு மூன்று நாட்கள் இருக்கின்றன. நாங்கள் நாளையே திரும்ப வேண்டும்."

இவன் பதில் தராமல் இருந்தான். மீசை இல்லாதவன் மீண்டும் பேசினான்: "நீங்களே ஏற்பாடு செய்ய முடியாதா? வெறுமனே சுற்றிப் பார்த்தால் போதும்."

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? நீங்கள் யார் என்று நான் அறிந்து கொள்ளலாமா?"

"நாங்கள் தில்லியிலிருந்து வருகிறோம். அரசாங்க ஊழியர்கள். வெறுமனே ஒரு முறை சுற்றிப் பார்த்தால் போதும். மிகவும் ஆசையுடன் வந்திருக்கிறோம்."

"இதற்கு நான் முன்கூட்டியே பட்டரை அதிகாரியிடம் தெரிவித்து அனுமதி பெற வேண்டும். உடனே முடியாது."

"ஒரு நேரம் சொன்னால் மீண்டும் வருகிறோம். இன்று மாலைக்குள் இருந்தால் மிகவும் சௌகரியமாயிருக்கும்."

இவன் மீண்டும் பதில் கூறாமல் இருந்தான்.

மீசைக்காரன், "உங்களுக்கு இதில் சிரமமிருந்தால் நாங்கள் வேறு மேலதிகாரியிடம் பேசுகிறோம்" என்றான்.

வேறு மேலதிகாரிகளிடம் இவர்களை அழைத்துப் போய் அறிமுகம் செய்து பேச வைக்கும் தொல்லைக்கு இவனே இவர்களைச் சுற்றிக் காண்பித்துவிடுவது மேல் என்று தோன்றியது. "உங்களால் மூன்று மணிக்கு வர முடியுமா?" அந்த நேரத்து வெய்யிலாலேயே அவர்கள் வரத் தயங்குவார்கள் என்றுகூட இவன் நினைத்தான்.

"வருகிறோம். எங்களுக்கு ஒரு சிரமமும் இல்லை."

"தொந்தரவு கொடுக்கிறோம் உங்களுக்கு."

"தொந்தரவு ஒன்றும் இல்லை. மாலை மூன்று மணிக்கு வாருங்கள். நான் தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பிக்கிறேன்."

"அப்படியே உங்கள் தோட்டம்கூட."

"தோட்டமா?"

"ஆமாம். உங்கள் தோட்டம்."

"ஆமாம். இங்கே தோட்டமும் இருக்கிறதல்லவா?" என்று மீசைக்காரனும் தொடர்ந்து சொன்னான்.

"சாதாரணமாகத் தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தோட்டம் போல்தான் இங்கும் இருக்கிறது."

"அதையும் பார்த்துவிடலாம் அல்லவா?"

"சரி.... எங்கள் தோட்டத்தைப் பார்ப்பதற்கு யாருக்கும் தடையிருக்காது."

"அப்போது நாங்கள் மூன்று மணிக்கு வந்துவிடுகிறோம்" என்று மீசையில்லாதவன் சொன்னான்.

"சரி."

"உங்கள் காவல்காரனிடம் சொல்லி விடுங்கள்" என்று மீசைக்காரன் சொன்னான்.

"சொல்லி வைத்துவிடுகிறேன்."

அவர்கள் போன பிறகு அந்த நாற்காலிகளை ஒழுங்குபடுத்திவிட்டு மேலும் வேலு அங்கேயே இவனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

"வேலு, போய்க் காவல்காரனை அழைச்சுண்டு வா" என்றான்.

"அவன் வரமாட்டாங்களே. இவுங்களைப் பத்திச் சொல்லிட்டு வரணும். அவ்வளவு தானே?"

"நீ கேட்டண்டை நின்னுண்டு காவல்காரனை இங்கே அனுப்பு. நான் சொல்றேன்."

வேலு மெதுவாகச் சென்றான். ஐந்து நிமிடங்கள் மிக நிம்மதியாகக் கழிந்தன. சுழல் நாற்காலியில் ஒரு முறை முழுக்கவும் சுற்றினான். சுற்ற முடியும் என்பது தவிர அந்த நாற்காலி அதிகம் வசதி படைத்ததாகத் தெரியவில்லை.

அகலமான தோள் பட்டைகளும் அகலமான தலைப்பாகையும் அணிந்த காவல்காரன் உள்ளே வந்தான். காவல்காரர்களுக்கு வண்ணான் செலவுக்கென்று தனிப் படி உண்டு.

"மோஸஸ், இப்போ இரண்டு பேர் வந்துட்டுப் போறாங்க, இல்லையா? அவுங்க மறுபடியும் மூணு மணிக்கு வருவாங்க. நேரே நம்ம அறைக்கு அனுப்பிச்சுடு."

"நான் இரண்டு மணிக்குப் போயிடுவேனுங்களே."

"ஓகோ, உன் ஷிப்டு இரண்டு மணியோட முடியறதா? உனக்கப்புறம் மெயின் கேட்டிலே யாரு?"

"சண்முகம், இல்லாட்டா, அப்துல்."

"நீ ஞாபகமா அவங்கிட்டச் சொல்லிடு."

"சரி, சார்."

"இவுங்க முதல்லே எப்போ வந்தாங்க இங்கே?"

"காலையிலே எட்டு மணிக்கே வந்துட்டாங்க, சார். கையிலே ஆளுக்கொரு மூட்டையோடே வந்தாங்க. ராணுவக்காரங்கன்னு நினைச்சேன். நேரே ரயில்லேயிருந்து இறங்கி வந்த மாதிரி இருந்தது."

"இங்கே யாரும் இல்லேன்னு சொல்லியிருக்கிறதுதானே?"

"அவுங்க ஆபீசரைப் பார்க்கணுமின்னாங்க. பத்து மணிக்கு மேலே வாங்கன்னேன்."

"சரி. மூணு மணிக்கு வருவாங்க. வந்தா என்கிட்டே கொண்டுவிடச் சொல்லு."

"சரி, சார்."

காவல்காரனிடம் சொல்லி வைத்தபிறகு அந்தத் தொழிற்சாலையின் மூன்று முக்கிய பிரிவுகளிலும் மூன்று மணிக்கு இருவரைச் சுற்றிக் காண்பிக்க அழைத்து வருவது பற்றித் தெரிவித்து வந்தான். சரியாக மூன்று மணிக்கு அந்தத் தில்லிக்காரர்கள் வந்துவிட்டார்கள். காலையில் தோற்றமளித்தபடியே சோர்வேதுமில்லாமல் இருந்தார்கள்.

"போகலாமா?"

"சரி" என்று இருவரும் சொன்னார்கள்.

அவன் அவர்களை அழைத்துப் போனான். "முதலில் கச்சாப் பொருள்களைச் சுத்திகரித்துத் தான் செய்யுமிடத்துக்குப் போவோம்."

"சரி."

"தொண்ணூத்தெட்டு சதவீதம் சுதேசிப் பொருள் கொண்டேதான் இங்கு உற்பத்தி நடக்கிறது. ஒரு கட்டத்தில் ஒரு கடவிடிக் ஏஜெண்ட் வேண்டியிருக்கிறது. அது மட்டும் தான் இறக்குமதி செய்யப்படும் பொருள்."

"அப்படியா?"

"கடந்த மூன்று ஆண்டுகளில் எங்கள் தயாரிப்புகளுக்கு வெளிநாட்டு மார்க்கெட் பெரிதாகப் பெருகியிருக்கிறது. எல்லா மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளுக்கும் எங்கள் தயாரிப்புகள் வெளியனுப்பப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளிலும் எங்கள் தயாரிப்புகளுக்கு வரவேற்பு இருக்கிறது. அநேகமாக இந்த வருட இறுதிக்குள் பிரான்ஸ் மற்றும் கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஏற்பாடு அமையுமென்று எதிர்பார்க்கிறோம். ஆண்டுதோறும் எங்களால் மட்டும் 1.1 கோடி அந்நியச் செலாவணி சம்பாதிக்கப்படுகிறது. இரண்டு வருடங்

ஆண்களின்
தேவைகளை
நிறைவேற்றுகிறது
ஒகாஸா



வாழ்விலே வெற்றி காண்பதற்கு வேண்டிய வலிமையை ஆண்க-ளுக்கு அளிக்கிறது ஒகாஸா. வயதுக்கு மிஞ்சிய முதுமையைத் தடுத்து, ஆரோக்கியத்தைக் கூட்டி இளமைத் துடிப்பையும் வலிமையையும் மீட்டுத் தருகிறது ஒகாஸா. உலகெங்கிலும் இலட்சக் கணக்கான வயது வந்தவர்கள் இன்று ஒகாஸா சாப்பிடுகிறுர்கள். இழந்த வலிமையை மீட்டுத் தரும் நவீன-டானிக் மாத்திரைகள் ஆவை.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெடின் லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

எல்லா பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. அல்லது நேராகவும் பெறலாம்.

OKASA CO. PVT. LTD.
P. O. BOX 396, BOMBAY-1.

CU 220

திருமணச் செல்வம்

ந ர சு ஸ் கா பி

100% PURE COFFEE

Criterion NC 2601A



டாக்டர்களே!
நீங்கள்
மற்றவர்களுக்கு உதவ
டி ஐ ஐ ஸி
வைட்டமின் இதோ!
அன்பு மருத்துவரே! மனத்திருப்தியுடன் மருத்துவப் பணியாற்ற விருப்பமா? உமது உதவி தேவைப்படும் நாட்டுக்கும், சிற்றூர் மக்களுக்கும் சேவை புரிந்திடச் சித்தமா? பணமின்மைதான் இதற்குப் பெருந் தடையா? கவலையை விடுக. டிஐஐஸிக்கு வருக. வேண்டிய பண உதவியைப் பெறுக! சொந்தமாக மருத்துவப் பணிமனை அமைத்துக் கொள்ளவும், வேண்டிய சாதனங்களை வாங்குவதற்கும், உங்களுக்கு நிதி உதவி புரியும் திட்டங்களை வைத்திருக்கிறது டிஐஐஸி. எளிய தவணைகளில் இனிதே திருப்பிடலாம் பணத்தை.
டிஐஐஸி—கிராமத்தில் உங்கள் சொந்த மருத்துவப் பணிமனைத் திட்டம்
தி தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
எல். எல். ஏ. கட்டிடம், 150-A, மவுண்ட் ரோடு, சென்னை-2. கிளைகள்: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர். 247, நாயக்கர் புதுத்தெரு, மதுரை. 'பால நிலையம்', 6/37, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர்-18.
டி ஐ ஐ ஸி
இதயபூர்வமான நிதியுதவி
Criterion TIIC 2625 TM

கனுக்கு முன்னுல் முப்பத்தெட்டு லட்சமாக இருந்தது. இப்போது கிட்டத்தட்ட மூன்று மடங்கு பெருகியிருக்கிறது.''

''அப்படியா ?''

இப்படிச் சொல்லிக் கொண்டே போனவன் திடீரென்று தன் உற்சாகம் குறைவதை உணர்ந்தான். எழுபது வயதுக்காரர்கள், வாழ்க்கையின் சகல ரகசியங்களும் தெரிந்ததாக விறைப்பாக இருப்பவர்கள்கூட பாக்கிங் பிரிவில், தானுக உறையிட்டு டப்பாக்களே அழுத்த மூடும் இயந்திரத்தருகில், குழந்தை போல் விந்தை தெரிய நின்றிருக்கிருர்கள். அங்கேகூட இந்த இரு புது தில்லி அரசாங்க ஊழியர்கள், 'அப்படியா ?' என்றுதான் கேட்டுக் கொண்டார்கள்.

வேலுவிடம் தன் அறையில் மூன்று கோப்பை காப்பி தயாராக வைக்கச் சொல்லி விட்டு, ''அவ்வளவுதான்'' என்று அந்த இருவரிடம் சொன்னுன்.

''ரொம்ப நன்றி. ஆனுல் உங்கள் தோட்டம்?'' என்று மீசையில்லாதவன் கேட்டான்.

''ஓகோ, தோட்டத்தைப் பார்க்க வேண்டும் என்றீர்களல்லவா? தோட்டம் அந்தப் பக்கம் இருக்கிறது.''

தோட்டத்தில் நுழைந்ததும் அந்த இருவரும் திடீரென்று சிறிது மாறுபட்டதுபோல் இருந்தது. தரையிலிருந்தே ஒரே கொத்தாக நீண்ட இலேகளாக முளைத்திருக்கும் செடியைக் காண்பித்து, ''செடி வகைகளில் இது தான் மிகப் பெரியது என்கிருர்கள்'' என்றுன்.

''அற்புதமாக இருக்கிறது. இதற்கு என்ன பெயர் ?''

'' என்ன பெயர் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. வருடம் முழுவதும் பசுமையாக இருக்கும் ஜாதிகளேச் சேர்ந்தது. நமது கார்டன் சூப்பிரெண்டெண்டைக் கேட்டால் பெயர் சொல்லுவார். அவரைப் பார்க்கலாமா ?''

''வேண்டாம், அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். ஆனுல் இது மிகவும் அற்புதமான செடி... அப்புறம் உங்கள் மிருகங்கள், பறவையினங்கள்.....''

'' மா ன் க ள் அங்கே இருக்கின்றன. வாருங்கள், போவோம்.''

மரப் பலகைகளால் உயரமாக வேலி கட்டப்பட்ட அந்த வளேவில் சுமார் இருபது மான்கள் இருந்தன.

'' மி க வு ம் அழகான, சாதுவான பிராணிகள் '' எ ன் று மீசைக்காரன் சொன்னுன்.

''அப்படியொன்றும் சாது என்று கூறி விடுவதற்கில்லே.''

''கலவரம் அடைந்த மானுக்கு இந்த வேலி ஒரு லட்சியமில்லே.''

''ஆமாம். பல சமயங்களில் இந்த வேலியைத் தாண்டித் தொழிற்சாலே உள்ளேயே சில மான்கள் ஓடி வந்திருக்கின்றன. அப்படியிருந்தும் முதலேக் குட்டி வேலி உள்ளே புகுந்தபோது எல்லாம் மிரண்டு போய் ஏழெட்டு மான்கள் காலிழந்து செத்துப் போயின.''

''முதலேயா ?''

''ஆமாம். யாரோ எங்கள் மானேஜிங் டைரக்டரிடம் ஓரடி நீளம்கூட இல்லாத ஒன்



'' நாம் இருவரும் சேர்ந்து நிற்பதைக் கண்டு யாராவது ஆந்தையாக நினைத்து விட்டால்.... ?''

றைக் கொடுத்திருக்கிருர். அதைத் தோட்டத்துத் தொட்டியில் போட்டு வைத்திருந்தது. அப்புறம் பார்த்தால் அது முதலேக்குட்டி.''

''பயங்கரம்.''

''ஆமாம். அவ்வளவுக்கும் அதன் வாலில் பலமான கயிறு சங்கிலி எல்லாம் கட்டித்தான் வைத்திருந்தோம். ஒரு முறை ஏகமாக மழை பெய்து இந்தத் தொழிற்சாலே, தோட்டம் எல்லாம் சாணளவு தண்ணீரில் மிதந்தது. அப்போது இந்த முதலே எப்படியோ சங்கிலியிலிருந்து விடுவித்துக் கொண்டு மான்களிடம் போய்விட்டது.''

''உங்கள் மானேஜிங் டைரக்டர் பிராணி வளர்ப்பில் மிக அலாதியானவர்.''

''ஆமாம். இங்கே முதலே? ஆமை, முயல், மயில் எல்லாம் வளர்த்ததுண்டு.''

''பறவைகள்?'' என்று மீசைக்காரன் கேட்டான்.

''அதுதான் மயில்.''

''இல்லே, மயில் தவிர.''

'' ஒரு பஞ்சவர்ணக் கிளி இங்கே இருந்ததாம். ஆனுல் அது நட்டுவாக்கலி கொட்டி இறந்துபோய் விட்டதாகச் சொல்கிருர்கள்.''

''வேறு பறவைகள் ஒன்றும் கிடையாதா?''

''இங்கே தொழிற்சாலேயில் கிடையாது.''

''ஒருவேளே அவர் பங்களாவில் ?''

''பங்களாவில் என்ன இருக்கிறது? நாய்கள் உண்டு.''

''புறு மாதிரி ஏதாவது ?''

''ஊஹூம். மீன்கள் இருக்கின்றன... ஆனால் இந்த நாளில் எல்லா வீடுகளிலும்தான் ஒரு மீன் தொட்டியிருக்கிறது.''

'' எவ்வளவு ஆண்டுகளாக நீங்கள் இங்கு வேலை பார்க்கிறீர்கள் ?''

''எட்டு வருடமாகிறது. ஏன்?''

''ஒன்றுமில்லை. கேட்டேன். அப்போது இங்கே வேறு பறவைகள் ஒன்றும் கிடையாதா?''

'' நிச்சயமாக ?''

''இல்லை. நான் வேறென்ன சொல்ல ? தொழிற்சாலை பார்க்க வந்து பறவைகள் மீது அக்கறையாக உள்ளவர்களாக உங்களைத் தான் பார்க்கிறேன்.''

'' நாங்கள் சிரமம் கொடுத்திருந்தால் மன்னித்துவிடக் கேட்டுக் கொள்கிறோம்.''

''பரவாயில்லை. பார்க்க வேண்டியது அவ்வளவுதானே ?''

''அவ்வளவுதான்.''

''நாங்கள் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.''

''இல்லை, வாருங்கள். காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

மீசையில்லாதவன் ஒரு கணம் யோசிப்பது போல் இருந்தது. பிறகு ''சரி'' என்றான்.

வேலு மூன்று கோப்பைத் தட்டுகளில் காப்பியைத் தயாராக வைத்திருந்தான். உண்மையில் காப்பி சிறிது ஆறிப் போய்க்கூட இருந்தது.

டில்லிக்காரர்கள் இருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். காப்பியை ஒரு முறை உறிஞ்சியவுடன் நன்றாகச் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தார்கள். முதன் முறையாக அவர்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொள்கிறவர்கள்போல இருந்தார்கள்.

காப்பி முடிந்தவுடன் டில்லிக்காரர்கள் இருவரும் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார்கள். மூக்கால் நீண்ட புகைவிட்டு மீசைக்காரன் கேட்டான்: ''தொழிற்சாலை பார்க்கவென்று வந்து, தோட்டத்தைக் காண்பியுங்கள் என்று சொன்னதில் உங்களுக்குத் தொல்லை இல்லை என்று நினைக்கிறேன்.''

வேலுவும் அறையிலேயே நின்று கொண்டிருந்தான். ''வேலு, இந்த கப் சாஸரை எடுத்துவிடு.... ஊஹூம், தொல்லை ஒன்றும் இல்லை.''

மீசை இல்லாதவன் சாவகாசமாகப் புகை பிடித்துக் கொண்டிருந்தான். மீசையில்லாதவன் நட்புத் தோன்ற விருந்தான். அவன் சொன்னான்: ''உண்மையில் நாங்கள் உங்கள் தோட்டத்தைத்தான் பார்க்க வந்தோம்.''

''அப்படியா ?''

'' நிச்சயமாக. இங்கேயோ உங்கள் மானேஜிங் டைரக்டர் வீட்டிலோ வேறு தோட்டம், வளர்ப்புப் பிராணிகள் கிடையாதல்லவா ?''

''இல்லை. எல்லாம் நீங்கள் பார்த்தது தான்.''

வேலு தொடர்ந்து அங்கேயே நின்று கொண்டிருந்தது சங்கடமாக இருந்தது.

''நாங்கள் இரண்டு பறவைகளைத் தேடி வந்தோம்.''

''யார் நீங்கள்? நீங்கள் சொல்லவில்லை.''

''நீங்களே ஊகித்திருக்க வேண்டும். டில்லி மிருகக்காட்சிச் சாலையிலிருந்து இரண்டு பறவைகள் திருட்டுப் போய்விட்டன. அதைத் தேடிக் கொண்டுதான் நாங்கள் வந்திருக்கிறோம். சென்னையில் இங்கே விற்கப் பட்டதாகத் தகவல்.''

'' அவ்வளவு விசேஷமான பறவைகளா?''

''சின்னப் பறவைகள்.''

''லவ் பேர்ட்ஸ்.'' ஏதோ தேசப் பெயர் சொல்லி மீசைக்காரன் சொன்னான்: ''லவ் பேர்ட்ஸ்.''

'' லவ் பேர்ட்ஸ் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பறவைதானே ?''

மீசைக்காரன் சொன்னான்: ''அந்த ஜோடி ஓர் அசாதாரணப் பறவைதான். நம் பிரதமர் அந்த நாட்டுக்குப் போனபோது அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. அது திடீரென்று காணாமல் போய்விட்டது!''

'' எப்படி இருக்கும் அவை ?''

''சின்னப் பறவை. அதை விளக்குவது கஷ்டம். ஆனால் நாங்கள் பார்த்தால் தெரிந்து கொள்வோம்.''

''ஒண்ணுமில்லே.... காணாமல் போய் எவ்வளவு நாட்கள் ஆகின்றன ?''

''ஒரு மாதம் ஆகிறது.''

''ஒரு மாதம் என்றால் என்னவெல்லாமோ ஆகியிருக்குமே. அதை யாராவது சாப்பிட்டுக் கூட இருப்பார்கள்.''

மீசைக்காரன் மீசையில்லாதவன் இருவரும் சிரித்தார்கள். ஆனால் வாய்விட்டுச் சிரிக்கவில்லை. ''அதுதான் அவசரம். இங்கே உங்கள் தோட்டத்தில் நிறையப் பறவைகளுடன் இதையும் வளர்ப்பதாகத் துப்பு கிடைத்தது. ஆனால் அது சரியில்லை.''

சிகரெட் முடிந்தும் டில்லிக்காரர்கள் இருவரும் சிறிது நேரம் அப்படியே பேசாமல் இருந்தார்கள்.

பிறகு மீசைக்காரனைப் பார்த்து, ''கிளம்புவோமா?'' என்றான் மீசையில்லாதவன்.

மீசைக்காரனும் எழுந்து நின்றான். ''உங்களுக்கு மிகவும் நன்றி'' என்றான்.

''பரவாயில்லை.''

''குட் ஈவினிங்.''

இருவரும் வெளியே போனார்கள். சிறிது இடைவெளிக்குப் பிறகு, ''வேலு, இப்பவாவது இந்த கப் சாஸருங்களை எடுத்துடேன்'' என்றான்.

வேலு மேஜை மீது இருந்தவற்றை ஒன்று சேர்க்க ஆரம்பித்தான். ''யாருங்க இவங்க ? போலீஸ்காரங்களா ?''

''அப்படித்தான் தெரியுது.''

''போலீஸ்காரங்க மாதிரி இல்லையே ?''

'' ஏதோ வெளியூரிலேயிருந்து வந்து சுத்திப் பார்க்கணுமின்னாங்க, சுத்திப் பார்த்தாங்க. அவ்வளவுதான்.''

''பறவைகளைத் தேடறவங்க இப்படியா தேடுவாங்க ?''

'' பின்னே எப்படித் தேடுவாங்க ?''

இருவரும் மௌனமாக இருந்தார்கள். வேலுதான் மீண்டும் பேசினான். '' அதுங்க எங்கே பறந்து போச்சோ ?''

'' அதுங்க பறந்துபோய்விட முடியும். பறந்து போச்சு. அவ்வளவுதான்.'' அவன் பெருமூச்சு விட்டான்.

வேலுவும் வெகுநேரம் பேசாமலிருந்தான்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



நாகரீக
லயம்
தாவண்கெரே
'மைசூர் ப்யூட்டி'
வாஷ்-ன்-வெய்ர்
கேம்பரிக்குகள்
தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon